
# பொன்னாச்சி பிறந்த மண்




## வெற்றி மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாச்சி பிறந்த மண்

## கற்பனைச் சிறுகதைகள் (14)


நூலாசிரியர் "வெற்றிமகன்"

**கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி**

நாவற்காடூர் / 14 சுப்பையா வீதி

மட்டக்களப்பு,

இலங்கை.



பொது சன நூலகம்

விசேட சேர்க்கைப் பகுதி



*வெளியீடு:*

**பசிமுக நிறுவனம்**

(பகுத்தறிவுச் சிந்தனை முத்தமிழ்க் கழகம்)

இல. 2, வன்னியார் தெரு,

மட்டக்களப்பு,

10-12-1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிமுக வெளியீடு (6)

## பதிவுத்தரவுகள்

| | |
|---|---|
| தலைப்பு | பொன்னாச்சி பிறந்த மண் |
| வகை | கற்பனைச் சிறுகதைகள் |
| மொழி | தமிழ். |
| ஆசிரியர் | கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி |
| வெளியீடு | பசிமுக நிறுவனம் - மட்டக்களப்பு. |
| உரிமை | ஆசிரியருக்கே |
| வெளியிட்ட திகதி | 10.12.1998. |
| அச்சமைப்பு | கொம்ஷெல் லேசர் செற்றிங், மட்டக்களப்பு. |
| பதிப்பச்சகம் | கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு |
| பக்கம் | 15 + 102 |
| விலை | 140/= |

## Bibiliographical Data

| | |
|---|---|
| Title | Ponnachi Pirantha Munn |
| Category | Fiction |
| Language | Tamil |
| Author | Kalasoori Vinayagamoorthy |
| Publisher | Pasimugam - Batticaloa. |
| Copyright | Author |
| Date of Publication | 10.12.1998. |
| Type Settings | Compsel Laser Settings, Batticaloa |
| Printers | St.Joseph Catholic Press, Batticaloa |
| Pages | 15 + 102 |
| Price | 140 /= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## உரைகள்


| | |
|---|---|
| வாழ்த்துரை | i |
| முன்னுரை | iii |
| என்னுரை | iv |
| பதிப்புரை | xiii |
| பின்னுரை | 98 |


## கதைகள்


| | |
|---|---|
| பண்பாடு | 1 |
| பொன்னாச்சி பிறந்த மண் | 8 |
| செய்வினை | 13 |
| கதைக்குள்ளே கதை | 19 |
| பக்தியும் சித்தியும் | 28 |
| இப்படியும் ஒருத்தி | 35 |
| வெண்பாவும் என்பாவும் | 41 |
| உன்னிச்சைப் போடியார் | 47 |
| நெருப்பில்லாத புகை | 53 |
| பகுத்தறிவெங்கே | 60 |
| குறுக்கு வழிகள் | 67 |
| தங்கப் புதையல் | 75 |
| புனர்வாழ்வுப் புண்ணியப்பேறு | 82 |
| இரட்டைக் கொலை | 90 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## *மாநகர முதல்வரின் மேசையிலிருந்து.......*

மட்டக்களப்புத் தமிழகத்தில் இலக்கிய வாழ்வோடு இறுகப் பிணைந்து கொண்டவர் கலாசூரி விநாயகமூர்த்தி. பல புனைப்பெயர்களில் எழுதுபவர். பன்குடாவெளி மூர்த்தி என்பர், கவிதை எழுதும் வெற்றி மகனும் இவரே. கட்டுரைகள் எழுதுபவர், பலதளங்களின்று இலக்கியப் பரீட்சார்த்தம் செய்யும் ஏந்தல் இவர்.

என் பார்வையில் கலாசூரியின் இலக்கியச் செயற்பாடுகள், உணர்வுகள் என்றும் சோர்ந்து போகவில்லை. மண்ணின் மைந்தனாக என்றுமே சொந்தம் சேர்த்தன. எதை எழுதும் போதும் வாழும் மண்ணை வாழ்த்த இவர் மறப்பதில்லை. இப்பெருங்குணம் எல்லோருக்கும் வராததொன்று.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவர் வானில் நனி சிறந்தனவே" என்ற நல்மொழி வெற்றி மகன் எனும் பன்குடாவெளி மூர்த்திக்கு நன்கு பொருந்தும்.

கலாசூரி சாமான்யமானவரல்லர். நம் மண்வாசனை இலக்கியங்களை நிறைய தேடல் செய்பவர். இனிக்கப் படித்து மகிழ்பவர். வாய்மொழி இலக்கியத்திற்கு வளமும், வைரமும் சேர்ப்பவர். இதனால் இப்பிராந்திய கிராமிய மக்களின் மனங்கொண்டவர்.

ஆறு நூல்களை அச்சுருக் கொண்டு வந்த கலாசூரி, இன்று இன்னுமொரு கதைத் தொகுப்பை ஏழாவது நூலாக வைக்கிறார். சமூகத்துள் நிறைய நுழைந்து பார்த்திருக்கிறார். அது எதுவும் வியப்பில்லை. இலக்கிய மனிதனின் வேணவாதான்.

மனித வாழ்வில் ஒவ்வொரு நகர்வும் ஒருகதை சொல்லும். கதைக்கான கருத்தால் அதனைச் சோடித்து எடுப்பதில்தான் தமக்கான திறமை மிளிரும். கலாசூரி புனைந்துள்ள கதைகள் கச்சிதமானவை. எனினும் விமர்சனக் கண்ணோட்டத்தில் இக்கணிப்பீட்டைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுமுன், தளத்தில் குதித்து முதலில் வாசகனாக வேண்டும். ஒரு நல்ல வாசகன் சிறந்ததொரு விமர்சகன் என்பர். இது வெறும் பொய்யில்லை. உண்மையிலும் உண்மை.

சிறந்த கருப்பொருட்களை மையப்படுத்தி கதை பண்ணியிருக்கும் பாங்கு வரவேற்கக்கூடியது. இது அவருக்கே உரிய எழுத்து நடை.

பொன்னாச்சி பிறந்த மண், பண்பாடு, செய்வினை, உன்னிச்சைப் போடியார், நெருப்பில்லாத புகை, தங்கப் புதையல், இக் கதைகளின் மகுடம் சிறப்பானது. என் கவனத்தையும் ஈர்த்தது. மட்டக்களப்பு தமிழக மக்களின் வாழ்வியல் தொனியை கோடிட்டுக் காட்டும் பல சம்பவக் குவியல்கள் சொல்லும் பாங்கு அற்புதத்திலும் அருமை.

மெச்சு புகழ் ஏந்தி, இந்த வெற்றிமகன் விரைந்த நடையுடன் இலக்கிய வழியில் நடந்து செல்ல வாழ்த்துகிறேன்.

**செழியன். ஜே. பேரின்பநாயகம்,**
**மட்டு. மாநகர முதல்வர்,**

*முதல்வர் பணிமனை*
*25.11.1998*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பழந்தமிழ் மரபில் செய்யுளே தமிழனின் பிரதான ஊடகமாக இருந்தது. மன்னராட்சியும், அரசவைப் புலவர் ஆதிக்கமும் செய்யுளையே முதன்மைப்படுத்தி நின்றன. எனினும், மேனாட்டாரின் இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை என்பன தமிழில் வழங்கத் தொடங்கிய பின்னர் ஆக்க இலக்கியச் செயற்பாடுகள் அனைத்தினுள்ளும் இன்று பலராலும் விரும்பப்படுவதும், பிரபல்யமானதும் சிறுகதையே.

சிறுகதைகளைச் சிருஷ்டிக்கும் போது, ஆசிரியன் தன்மையிடத்துக் கதை சொல்லும் உத்தி பெரும்பாலும் வெற்றியளிப்பதாகும். எடுத்த கருப்பொருள் வாசகனுக்கு எளிதில் புலப்படுவதாக - நெஞ்சில் தைக்கும் விதமாக - உணர்வு பூர்வமாகச் சித்தரிக்கப்படவும் வேண்டும்.

சிறுகதை பற்றி டாக்டர் மு.வ. தனது "இலக்கிய மரபு" என்னும் நூலில் (பக்கம்.156-163) விபரிப்பதை இங்கு எடுத்து நோக்குதல் பொருத்தப்பாடுடையது எனக் கருதுகின்றேன்.

"சுவையான ஒரு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு, கவர்ச்சியான ஒரு காட்சி, நெருங்கிப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள், ஒருவரின் தனிப் பண்பு, ஒரு சிறு அனுபவம், வாழ்க்கையின் ஒரு பற்று, அற உணர்வால் விளைந்த ஒரு சிக்கல் - இவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது இவை போன்ற ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாக அமையலாம்." என்கிறார், பேராசிரியர் மு.வரதராசனார்.

ஒரு படைப்பாளி - ஒரு விமர்சகன் அல்லது ஆய்வாளன் என்கிற தளத்தினின்றிறங்கி, சாதாரண ஒரு வாசகன் என்ற நிலையிலிருந்தே திரு.வெ.விநாயகமூர்த்தி அவர்களின் "பொன்னாச்சி பிறந்த மண்" எனும் இந்நூலுக்கு முன்னுரை எழுதவேண்டிய அன்பார்ந்த விருப்பத்தின் பேரில் இதனை எழுதலுற்றேன்.

திரு "வேவி" அவர்கள், கவிஞர் ராஜபாரதி காலத்திலேயே மரபுவழிக் கவிஞராக இனங்காணப்பட்டவர். அறிஞர் நல்லாசான், பன்னூலாசிரியர், மனித நேயம் கொண்ட பண்பாளர். இவற்றை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலாசூரி" எனும் அரசவிருதால் கௌரவம் பெற்றவர். அத்தகையாருக்கு முன்னுரை எழுத முற்பட்டேன்.

"அனுபவம் நல்ல ஆசான்" என்பதைத் துணைக் கொண்டு, அவர் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார் எனக்கொள்ளலே இங்கு பொருந்தும்.

தான் பிறந்த மண்ணின் மணங்கமழும் மண்வாசனைச் சொற்களால், இயல்பான உரையாடல்களால், தனது அனுபவங்களையும் இணைத்து ஈடுபட்டிருக்கும் இத்துறையின் இவரது கன்னி முயற்சியான இத்தொகுப்பை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

"நமக்குச் சாவறிதி காலம். நம்மட கந்துகவரெல்லாம் கிட்டடியில இல்ல. தூரத்துத் தண்ணி ஆபத்துக்குதவா............... இந்தப் புறந்த மண்ணை உட்டுட்டுப் போவனா நான்?", "பொன்னாச்சி பிறந்த மண்"ணின். பொன்னம்மாவின் அங்கலாய்ப்பு இது.

பிறந்த நாட்டுப் பற்றுதலை மேற்கண்டவரிகள் மூலம் பொன்னம்மா எனும் பாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் கோடிகாட்டுகிறார்.

அப்படி மண்ணை நேசித்து வாழ்ந்த கிழவி, ஈற்றில் வானில் பறந்த யுத்த வல்லூறின் சன்னங்கள் துளைக்க தன் வாசல் மண்ணிலே தங்கப்பூத்தோடும் சரடும் பளபளக்க மரணப்படுக்கையாகிறாள்.

கண்மண் தெரியாத யுத்த அரக்கன் இந்த மண்ணில் ஆடும் கோரதாண்டவம் கண்முன் காட்சியாய் விரிகிறது. "துப்பாக்கி போலும் சவள்"...... யதார்த்தமான கற்பனை.

"பண்பாடு" என்ற அடுத்த கதையில் அன்பான ஓர் இல்லத்தரசி, தன் கணவனின் வேண்டாத செய்கையைப் பக்குவமாக மறுக்கின்ற காட்சி அந்த மண்ணின் பண்பாட்டுக் கோலத்தையும் காட்டுவதாயுள்ளது

"இப்ப கிழவன் கிழவி எண்டெல்லாம் பார்க்கிறல்ல....... குட்டாப் பொட்டியெல்லாம் போட்டுக் குடைவானுகள்...", "உன்னிச்சைப் போடியார்" என்ற கதையில் நாட்டு நடப்புகள் மேற்கண்ட விதமாக வர்ணிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட நம்பிக்கைகளுடன் வாழும் படிப்பறிவற்ற ஒரு சமுதாயம், தலைகால் தெரியாத பக்தியில் திளைக்கும் அந்த மக்களிடையே சுரண்டி பிழைக்கத் தெரிந்த இரு (ஆ)சாமிகள் 'கோயில்'என்ற பெயரில் பம்மாத்துப் பண்ணி பணம் புரட்டும் வழியைச் சித்தரிக்கிறது, "பகுத்தறிவெங்கே?" என்ற கதை.

மதத்தால் வேறுபட்டாலும், பேசும் மொழியால் ஒன்றுபட்ட தமிழ், முஸ்லீம் மக்களின் இன ஒற்றுமையைச் சித்தரிக்கின்றது "புனர்வாழ்வுப் புண்ணியப்பேறு" என்ற கதை.

இறுதிக் கதையான "தங்கப்புதையல்" மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் என்று வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்துவதோடு, இனமென்றிருந்தால், அவை கலப்புறாமல் தனித்துவமாக இருக்கவேண்டுமென்பதை நிறுவ முயல்கிறது.

இறுக்கமாகவும், இடறலின்றியும் கதை சொல்லப்பட்டிருப்பின் இவற்றின் பரிமாணம் இன்னமும் கொஞ்சம் வலுப்பெறக்கூடும். ஒட்டுமொத்தமாக பார்க்கையில், இரண்டாம் கதையாகவும் தொகுதியின் தலைப்புக் கதையாகவும் தேர்ந்தெடுத்துள்ள "பொன்னாச்சி பிறந்த மண்" என்ற கதையே இவற்றுள் மேம்பட்டு நிற்கிறது.

மட்டக்களப்பு மண்ணின் மேற்றிசையான "படுவான்கரை" எனக் குறிப்பாக அழைக்கப்படும் பிரதேசத்தின் மண்வாசனைச் சொற்கள் பொருத்தப்பாட்டுடன் இணைந்து வருவதால் குறித்த பிரதேச மக்கள் இவற்றை ரசித்து மகிழ்வர் என்பதில் ஐயமில்லை. அந்தப் பிரதேசத்தின் நடப்புகளையும், பண்பாட்டுக் கோலங்களையும் எளிதில் தரிசிக்க முடிகிறது.

இதன் மூலம் ஆசிரியர், இன்னமும் சிறப்பாக "சிறுகதை" என்ற ஊடகத்தை அணுகி, அதன் மூலம் "வெற்றிமக"னாக வீறுநடைபோட முயலவேண்டுமென வேண்டுகிறேன்.

**கனா. மகேஸ்வரன்**

*72/2,3ம் குறுக்கு வீதி,*
*மட்டக்களப்பு.*
*27.11.1998*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை
## (என்னுரை)

"பொன்னாச்சி பிறந்த மண்" எனும் இச்சிறுகதை நூலுக்கு மேயர் செழியன் பேரின்பநாயகம், திரு.கணமகேஸ்வரன் அவர்களது முன்னுரைகளை அடுத்தே என்னுரையினை எழுதுகிறேன். எழுத்துலகில் பொன்விழாவையும் வாழ்க்கையில் பவள விழாவையும், அறிஞர் அண்ணாவின் 90ஆவது பிறந்த தினமான செப்டம்பர் 15ல் எம்மைச் சேர்ந்தோர் கொண்டாட வைத்தனர். அந்நிலைக்குரிய நான் சிறுகதையில் வளரும் பிள்ளை நிலைமை கொண்டவனாகையால் இளையோராயினும் என்னிலும் திறனுடையோர்க்கும் அமைவுற்று எழுதுகிறேன். இளையோன் படிப்பை முதியோன் படித்து முயற்சியால் முந்தி விடவும் கூடும்.

முந்திய ஆறு நூல்களிலும் என்னுரையைச் சுருக்கமாகவே எழுதியுள்ளேன். "எஸ் பொ" என்னும் ஈரெழுத்து பெருங் கலைஞன் திரு.எஸ்.பொன்னுத்துரை என்று சொல்லாமலே உலகறிந்த நிலை இன்று. அன்னார் யாழிருந்து மட்டுநகர் வந்த பின்பு ஓரளவில் கல்வி கலை, அரசியல் என்ற வகையில் அறிந்தவனாவேன். எனது முதல் நூலான "பாலர் பாமாலை" எனும் பாலர்க்குத் தேவைப்பட்ட 60 பக்கங்கள் கொண்ட கதைகளுக்குப் படங்களுக்கும் உட்பட கவர்ச்சியான அட்டை கொண்டுள்ள நூலொன்று 85 சதவிலை 1964ல் குறிப்பிடும் போது அதிசயப்பட்டு "செலவுக்குப் போதாதே உங்கள் தமிழ்ப் பற்றும் இனப்பற்றும் புதுமையானதே" எனப் போற்றியவர். அவரின் ஆப்த நண்பன் M.A. ரகுமான் அவர்களது கொழும்பு அச்சகத்திலே அச்சிடப்பட்டு பெயரானது. அக்கால வேளையிலே பிரசித்தமான கனக செந்திநாதன் அவர்களையும் அறிமுகப்படுத்தினார்.

நான் மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் தமிழ் ஆசிரியனாகப் பணியாற்றும் போது அன்னாரும் அக்கம்பக்கத்திலே சேவையாற்றினார். படிப்பிக்கும் போது நாம் அவரது சில கொள்கைகளை விலக்கி ஆசிரியனாகவே நின்றோம். ஆனால் இப்போது முற்போக்கும் பகுத்தறிவுச் சிந்தனையும் இணைந்த நீரோடைக்குள்ளே நீந்திப்பயிற்சியுறுகின்றேன். இந்த என்னுரையை நீடிப்பதற்கு "எஸ் பொ" என்னும் அன்பரையே எடுத்துக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எஸ் பொவின் வசன நடை என் போன்றோருக்கும் அறிவைக் கூட்டுவதாகும். எனினும் ஒரு சில மயக்குவன. நான் ஒரு வானொலிப் பேச்சிலே மெதுவாக நடக்கும் ஒருவனை “கறையான் பிடிக்கப் போகுதடா கால்களில்”, என்றதும் இங்கு கறையான் இல்லையென்ற பதிலுடன் நடந்து வந்தான். அந்தச் சொற்களின் விளக்கம் அவனறியவில்லை. “விரைவாக நடந்து வாடா கறையான் பிடிக்கப் போகுதே” என்றால் நல்ல விளக்கமாகும். எனினும் சிலருக்கு விளக்கம் தேவையில்லை. எவருக்குப் பேசுகிறோமோ அவருக்கு பொருள் விளக்கமாக வேண்டும். ஒரு சில வார்த்தைகள் இடத்தை பொறுத்துச் செல்லுபடியாகாமலும் போகலாம் என்று பேசினேன்.

எஸ்.எல்.எம்.ஹனிபாவின் “மக்கத்துச் சால்வை” பற்றிய எஸ்.பொவின் முன்னுரை 16 பக்கங்களுக்கு நீடித்து, புத்தகத்தில் 1/8 பகுதியைப்பிடித்துள்ளது. மதிப்பு வாய்ந்த முன்னுரையது. எஸ்.எல்.எம்.ஹனிபா தன்னுரையிலே குறிப்பிட்டு எழுதக்கூடிய நிலையுடைய தமிழாசிரியனாயிருந்திருக்கிறேன். அதேபோன்று அன்னாரைச் சேர்ந்த Y.அகமது (முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர்) அவர்களும் குறிப்பிட்டு எழுதிய கையெழுத்துப் பிரதியை அச்சிடப் போவதாகக் காட்டினார். மாணவராகிய இருவரும் சிறுகதையுலகில் சிறகடித்துப் பறந்தனர். அக்காலத்தில் சிறுகதையில் சிலவற்றையே வாசிப்பேன். அவ்வளவு அக்கறை எடுக்கவில்லை.

1950களில் நுவரெலியாவில் சேவையாற்றும் போது கல்கி, கலைமகள், காதல், ஆனந்தவிகடன், அமுதசுரபி முதலாக பத்துப் பன்னிரெண்டு சஞ்சிகைகளை வாசிக்கும் சூழ்நிலையில் இருந்த போது பலதும் வாசித்துப் பயிற்சியுற்றேன். அக்காலம் சிறுகதைகளில் நாட்டம் செல்லாது காலநிலைமை கவிதை கட்டுரைகளில் சொல்லத்தக்க ஆக்கங்கங்கள் பத்திரிகைகளில் வெளியாகின.

ஏழையென்றும் அடிமையென்றும் எவருமில்லை சாதியில்
இழிவு கொண்ட மனிதர் என்போர் இந்தியாவில் இல்லையே”
என்று சொன்ன பாரதியார் இறந்துவிட்ட போதிலும்
நன்று அவர் நாமம் கூறி நாமும் கூட வாழ்த்துவோம்.
இந்தியாவில் மட்டுமென்ன இலங்கையிலும் அவ்விதம்
சிந்தியாமல் செப்பியென்ன தேசமெல்லாம் அவ்விதம்

என்பன போன்ற கவிதைகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துட்டனென்று தந்தையால் நாடு துரத்தப்பட்டவன் பட்டத்து மன்னனான வரலாறு" என்றதிலே சில கட்டுரைகளும் சார்பான நாடகங்களும் வேண்டிய சூழ்நிலையால் வெளியாக்கினேன்". ஆசிரிய பயிற்சியின் போது 1946லே அன்பர் பூபதிதாசன் அவர்களது சஞ்சிகையொன்றிலே கதைகளும் கவிதைகளும் வெளியாக்கினேன். அக்கால கதை நடையினால் மங்கிப்போனேன். அப்போது என்னுடன் பயிற்சி ஆசிரியர்களாயிருந்த "முனாக்கானா" சதாசிவம், செல்லத்துரை கருணாகரன் முதலியோர் பரிகாசம் பண்ணிப் பாராட்டிப் பேசியதுண்டு . அக்கால வேளையில் வி.அன்ரனி எனப்பட்டவரான புகழ்பெற்றுள்ள வ.அ.இராசரெத்தினமும் பயிற்சியாசிரியராயிருந்தவர் என்பதையும் நினைவு கொள்ளுகின்றேன். இலக்கியமணியான "ஈழத்துப்பூராடனார்" க.தா.செல்வராஜகோபாலும் அமைதியாகத்தான் பயிற்சியாசிரியராயிருந்து இன்று உலகம் புகழும் நிலையில் கனடாவில் வாழ்ந்து கலைச் சேவையில் உயர்ந்து கொண்டிருக்கின்றார். அவ்வேளையிலே "இராஜபாரதி" எனப்பெயர் கொண்ட வி.கி.இராசதுரையும் நானும் இனங்காணப்பட்ட மரபுக் கவிஞர்களாக இருந்து வந்தோம். இதையெல்லாம் ஏன் குறிப்பிடுகிறேன் என்று கேட்போரும் இருக்கலாம்.

ஆறு புத்தகங்களை எழுதியபின்பு ஏற்பட்ட மனமாற்றம் சிறுகதை நூலொன்றை வெளியிடத் தூண்டியது. பலரது வேண்டுகோளும் அதனையே வேண்டியது. ஏதோ நானும் சிறுகதை நூலாசிரியனாகி விட்டேன். இதனால் வேண்டியன கூறத்தானே வேண்டும். என்னுடைய நடையும் தனித்துவமான நடையாகும். அதுவும் இளைஞரைப் போலன்றி அனுபவங்கூடியபின்பு எழுதும் எழுத்தாக் கமாகும். ஆறாவது நூலான "மாறிவரும் மட்டக்களப்புத் தமிழகம்" கூடிய செல்வாக்கைப் பெற்றது. அதுபோல் படிமுறையிலே இதுவும் அமையட்டும். கதைகளைப் பற்றிக்காணமுன்பே கூறிச்சுவையினைக் கெடுக்கவில்லை. எனினும் சிலவற்றைக் கூறவேண்டியுள்ளது. தேவையினை உணர்த்தச் சிறுகதை நல்ல ஊடகம் என்பதை அறிந்துகொண்டேன்.

"பொன்னாச்சி பிறந்த மண்" கதை வீரகேசரி மித்திரனில் வெளியானதை வாசித்தோர் வீடு தேடி வந்து உண்மையாக நடந்ததா? என்றெல்லாம் வினவத் தொடங்கினர். அப்படியே ஊர் பேர் சூழல் அமைந்தமையால் எனது கற்பனைக்கதை உண்மைக்கதை போலாக்கிவிட்டது. இக்கதைமூலம் நானொரு சிறுகதை எழுத்தாளனாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன், நூலாசிரியனாகலாம் எனத்துணிவூட்டியது. முதன் மூன்று கதைகளும் வெளியாகிவிட்டன. ஏனையவற்றைப்பத்திரிகையில் வெளியிடக் காலம் பார்த்திருக்காமல் புத்தகமாக்கிவிட்டேன். என்னைப்பற்றி பிறரறியாத போது நான்தானே கூறியாக வேண்டும். புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையவர்களைப் பின்பற்றி அவ்வப்போது நானும் என்னைப்பற்றி கூறி எழுதிவருகிறேன். இன்னும் சிறிது கூறவேண்டியுள்ளது. "மக்கத்துச் சால்வையே மனதிலுறைந்து விட்டது" "எஸ்.பொ"வின் உரை.............

"எழுத்தாளனுக்கு எழுத்துநெறி வெறியாகின்றது. அவனுக்குச் சொல்லாயுதம்........, ஏனையோருடைய காருண்ணியத்தில் வாழ்பவனுக்குக் காலத்தை வென்று நிற்கும் தத்துவமோ அதிகாரமோ இல்லை. விடுதலை வெறியன் சுதந்திரத்தைச் சுகிக்காது சாகலாம். ஆனால் சுதந்திரம் அவனை நித்தியமாக்கும்.........., சாமான்னியர்களும் எழுத்தாளர்களாகக் கூத்துக்காட்டலாம். மட்டக்களப்பு கவிவளத்தைக் கொச்சைப்படுத்தித் தமது தொப்பைகளை வளர்த்தவர்கள் எத்தனை பேர்? நாட்டார் பாடலைச் சுவைத்தல் வேறு. அதிலே குளிர்காய்ந்து இலக்கியவாதியாக தம்பட்டம் அடிப்பது வேறு. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் அருள் மட்டக்களப்பு மண்ணின் போடிகளுக்குண்டு ''தேனாடுமீனாடு'', எனப்புழுகிப்புழுகியே வளங்களைச்சூறையாடவும் பிறமாநிலத்தார் அண்டினர்."

இவ்வாறெல்லாம் தேவையெனக்கண்டதைக் கூறியுள்ளார். 1964லே எனது பாலர் பாமாலைக்கும் வித்துவான் FXC அவர்களுக்காக எஸ்.பொ கூறியவற்றிலிருந்து.............

"பாலருக்குப்பழக்கமான கதைகளையே பாடலாகத்தருவதும் பாராட்டத்தக்கது. பாலரின் மனங்களைக்கவரும் முறையில் 25 படங்களைச் சேர்த்தும் மிக மலிவான விலையில் இதனைத்தரமுன் வந்துள்ளமை ஆசிரியரின் தமிழ் பற்றுக்குச் சான்றாக அமைந்துள்ளது." எனக்குறிப்பிட்டுள்ளதையும் கதைகள் என்ற வகையிலே காட்டி எழுதுகின்றேன். அன்னார் வெளிநாட்டிலே இருப்பதால் அவரது முன்னுரை பெறமுடியாது விட்டது. எங்கிருந்தாலும் எனது சிறுகதைகளையும் கண்டு ஆவன கூறி உதவட்டுமென வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்புண்பார்க்க கண்ணாடி தேடுவதா? கதைகள் பொன்னாச்சி பிறந்த மண் தங்கப்புதையலில் முடிந்துள்ளது. பிறந்த மண் தங்கப்புதையல் என்று பொருந்திக் கொண்டாலும் பொருத்தமுறும். பதினான்கு கதைகளும் வெவ்வேறு நோக்கும் போக்குமுடையவை. பிறந்த மண் தங்கப்புதையலால் பொன்னாச்சி என்பதும் பொருத்தமுறலாம்.

வாசகர்களுக்கு எழுத்து நடையும் கதைப்பின்னலும் அபிப்பிராய பேதங்களை உண்டாக்கலாம். சிறு கதை நூல் எனது கன்னி முயற்சியென்ற வகையில் வாசகர்களும், விமர்சகர்களும் மனதிலிருத்திக் கணிக்குமாறு வேண்டுகின்றேன். நான்கு கடிதங்களே சிறுகதையாகித் தமிழகத்தில் பரிசுபெற்றுமிருக்கிறது. எனது பதினான்கு கதைகளில் சில இடம்பிடியாமல் விடுமா?

நமது மாறிவரும் மட்டக்களப்புத் தமிழகம் என்ற நூலுக்கு அறிவுரையும் கூறி அணிந்துரையும் வழங்கிய பேராசிரியப் பெருந்தகையாளன் சிவத்தம்பி அவர்களது சந்திப்புக் கிடைத்திருந்தால் எமது சிறுகதை நூல் இன்னும் மேலான இடத்தைப் பிடித்திருக்கும் அன்னாரைப் போல் பட்டதாரி பலரும் பண்புற்று நாட்டு நலன் சேவையுற்றிட வேண்டிக்கொள்வோம்.

எனது சிறுகதைக்கு ஆரம்பமாக அடிப்போட்ட நிலை கொண்ட கவிமணி செ.குணரெத்தினம் பலதுறைகளிலும் எழுதிக்கொண்டே யிருக்கிறார். அவர்தான் சந்திக்கும் போதெல்லாம் சிந்தனையைத் தூண்டியவர். அடுத்தவர் திமிலை மகாலிங்கம், கதைகளை மேலோட்டமாய் பார்வையிட்டவர். அதற்கடுத்தவர்தான் செப்பனிட்டு முன்னுரை எழுதியவர் திரு.கண.மகேஸ்வரன் ஆவார். இவர்களோடு இரா.தவராசா, மேயர் செழியன் பேரின்பநாயகம், கா.நடராசா, மாஸ்டர் சிவலிங்கம் முதலியோரும் தரம் கண்டு உரைத்தனர். அவர்களில் கண.மகேஸ்வரன் அக்கம்பக்கமான தொழில் நிலையம் கொண்டிருந்ததால் எனது தொல்லைகளையெல்லாம் பொறுத்து வேண்டிய புத்திமதிகளையும் கூறியவர். மேலும் இல்லத்தரசி சிறுகதை நூல் வெளியிட்ட அன்புமணி அவர்கள் மேலதிக பதவியிலிருந்து ஓய்வுற்று ஓயாத அலை போல பல துறை ஈடுபாடும் கொண்டிருப்பதும் ஒரு முன்மாதிரியாகும். இங்கு கூறப்பட்டு வந்துள்ளோர் அத்தனை பேருக்கும் அன்புடன் நட்புரிமை கொண்ட மூத்த கலைஞனாகிய எமது நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித்தாகட்டும். தயவான வேண்டுகோள் ஒன்று, எனது வாழ்விறுதிக்காலம் நெருங்கிவருகிறது. என்பதால் அதற்கு முன்பே என் படைப்புகள் சார்பான சில தகவல்களை "மேலதிகஎன்னுரை" என்று வேறாகப்பதிப்பிடுமாறு வேண்டியுள்ளேன். அதனாலும் என்னைப்பற்றி மேலதிகமாகச் சிலவற்றை இக்கால இளைஞர் அறிந்து கொள்வது நல்லதல்லவா?

சிறுகதையும் இலக்கியமே தமிழ் இலக்கிய வரலாறு என்ற முக்கியமான நூலை முதல்பதிப்பாக 1970ல் பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார் 25 நூற்றாண்டுகால வரலாறுடைய தமிழ் இலக்கியத்தில் இறுதியாக இருபதாம் நூற்றாண்டில் ஓரளவில் புகுந்து கொண்ட சிறுகதைகள் பற்றியும் இலக்கியத்தோடு தவறாமல் கூறியுள்ளார்கள். அன்னார் கூற்றிலிருந்து சில வரிகள்.

"கதை மனித சமுதாயத்திற்கு மிகப்பழமையான சொத்து; பழந்தமிழர்க்கும் கதைச் செல்வம் உண்டு. காவியங்களில் நீண்ட காவியங்களில் கதைகளை அமைத்தனர். நாவல்களும் சிறுகதைகளுமாகிய இக்கால புதிய இலக்கியவடிவங்கள் இருந்ததில்லையாயினும் கதைகள் பல இருந்தன. சிறிய கதைகள் சில, பழந்தமிழ் காப்பியங்களில் இடையிடையே காணப்படுகின்றன. சமய வளர்ச்சிமிகுந்த இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் புராணங்களிலும் அவை காணப்படுகின்றன. ஆனால் சிறிய கதைகளின் தொகுப்பாகவே அமைந்த தனி நூல்கள் பழங்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அந்தக்கதைகள் குடும்பச் செல்வங்களாக வழிவழியாகச் சொல்லப்பட்டு வாய்மொழி இலக்கியச் செல்வங்களாக இருந்திருக்க வேண்டும்" (பக்கம் 295)

அதன்பின்னர் வெளியிட்ட பேராசியர் சு.சுப்பிரமணியன் அவர்களது சிறிய நூலிலும் சிறுகதைபற்றி அதிகமாகக் கூறவில்லை. எனினும் சிறுகதையும் இலக்கியம் என்ற வகையினால் அன்னார் கூற்றிலிருந்தும் சில. "சிறுகதை மனித சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்புடையது காப்பியங்களிலும் பிற இலக்கியங்களிலும் கூடச்சிறுகதையின் செல்வாக்கினைக் காணலாம்'' என்றதோடு இலக்கியம் என்பது சிறந்த கருத்துக்களின் தொகுதி. (LITERATURE IS A RECORD OF BEST THOUGHTS) என்றும் (HISTORY AND LITERATURE ARE TWIN SISTERS INSEPARABLE) என்றும் குறிப்பிட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியதைச் சிறுகதைக்கும் சேர்க்கலாம் எனச் சொல்லுகின்றோம். இந்த வகையான சிறுகதைகள் இலக்கியம் என்னும் மகா சமுத்திரத்தில் இக்காலம் இணைந்து சங்கமமாகி புகழ் அலை அடித்து ஒலிக்கும் காலத்தே நானும் சிறுகதை ஆசிரியனாகிக் கொண்டமை சிலருக்கு ஆச்சரியங்கொடுக்கும். ஆச்சரியம் பொறாமையாகிப்புகழைக் கெடுக்காது இருக்கட்டும் எனக்கூறி நமது ஆற்றலையும் போற்றலுக்குள்ளாக்கட்டும் என வேண்டிக்கொள்கிறோம். மேலும் திரு. கண மகேஸ்வரன் அறிவுரை கூறியதோடு முன்னுரை தந்தமைக்கும் நன்றி.

எனது நீண்டகால எழுத்துலக அன்பன் பலதிறமைகளைத் தன்னகத்தே கொண்டவர். இப்போதைய மேயரான கௌரவ செழியன் பேரின்பநாயகம் ஆவார். கதைகளைப் பார்வையிட்டு பாராட்டியதோடு என்னை அழைத்து அணிந்துரை தந்துள்ளமைக்கும் நன்றி.

"சிலை ஒன்று வடிப்பதென்றால்" என்ற சிறுகதை உட்பட அன்புமணியின் "இல்லத்தரசியும்" "மொந்தன் வாழை" என்ற கதையுட்பட்ட இலக்கியமணி ஈழத்துப்பூராடனார் அவர்களின் "சுவரோவியச் சுந்தரி" யும் மக்கத்துச் சால்வையொடு மனதில் இடம்பிடித்துள்ளன. மேலும் ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் பரமஹம்சருடைய பல கதைகள் படிப்பினை தருவன. 1951தையிலே இலங்கை வானொளலியில் ஓரலைவரிசையாக இருந்த காலத்திலே நேரடிப் பேச்சில் "ஆசையின்வேகம்" என்ற தலைப்பிலே பேசும் போதும், ""போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து"எனும் அன்னாருடைய ஒரு கதையான "ஓரு நாடோடி ஒரு மரத்தின் கீழே இளைப்பாறி சுகங்கண்டு கற்பனையோடு இளம் பெண்கள் கால்பிடிக்க இன்புற்ற கதையையும் எடுத்துக் கையாண்டேன். மக்களுக்குத் தேவையானதைப் பயனூட்டவே அப்படியான பல கதைகளை பகவான் சொல்லியுள்ளார். இவற்றையெல்லாம் மனதிற் கொண்ட நான் இச் சிறுகதை நூலை வெளியாக்குகின்றேன் விமர்சனம் பண்ணினாலும் வேண்டிய தேவையைப் பொறுத்தே வெளியிடுகின்றேன். பகுத்தறிவுச் சிந்தனை பரவட்டும்.

**கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி**

*(பன்குடாவெளி மூர்த்தி, வெற்றிமகன், வேவி, வினாயகி, வள்ளி)*

*நாவற்காடூர் - மட்டக்களப்பு,*

*(10.12.98 மனித உரிமைகள் தினம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

"பசிமுகம்" எனப்படும் நிறுவனமான பகுத்தறிவுச் சிந்தனை முத்தமிழக் கழகத்தின் ஆறாவது வெளியீடாக "பொன்னாச்சி பிறந்த மண்" வெளிவருகின்றது. எமது கழகம் 1962ல் இருந்து புத்தக வெளியீட்டோடு வேறு பல கருமங்களிலும் ஈடுபாடு கொண்டே வருகிறது. அவற்றை ஆதாரப்படுத்தக்கூடிய சில போட்டோ பிரதிகளும் படங்களும் இந்நூலிலே இடம் பிடித்து சேவைத்திறன் காட்டுகின்றன.

நூலாசிரியரான கலாசூரி வெற்றிவேல் விநாயக மூர்த்தி அவர்களது, சிறுகதை நூல் வெளியீடு கன்னி முயற்சியாகும். ஒரு சிலரின் அணை துணை கொண்டுதான் சிறுகதைஆசிரியர் ஆனேன் என்று கூச்சமின்றி கூறிப்பெருமைப்படுகின்றார். இவருக்கு உதவும் கூடுதலான நிலையில் இடம்பிடித்தவர் முன்னுரை எழுதியுள்ள கண.மகேஸ்வரன் அவர்களாவர். இவருடைய வசிப்பிடத் தண்மையிலேதான் அன்னார் தொழில் நிலையம் இருந்தமையால் ஈடுபாடு கூடியதென்கிறார். அன்னாருடைய விமர்சன முன்னுரையை ஏற்று நன்றி கூறுகிறோம். எமது நூலாசிரியர் பற்றி ஒவ்வொரு நூலிலும் கூற வேண்டுமோ? "அபூர்வப்பிறவி" எனப்பட்டதோடு அமரர் செல்வராசா அதிபர் சகோதர பாச நடைமுறையால் "அபூர்வ சகோதரர்" என்பதற்கும் இலக்கானவர். "பாட்டும் விளையாட்டும்" என்னும் நூலில் பதிப்புரையிலே "பல்துறை விற்பனர்" என்று உதவிப்பணிப்பாளர் செ.எதிர்மன்னசிங்கத்தார் குறிப்பிட்டு இருப்பதையும் நாமும் உறுதிப்படுத்துகிறோம். எழுத்துலகில் பலவற்றை வெளியிடத் திட்டமிட்டுள்ளார். எனினும் வாழ்க்கை நிலையால் அருமைச் சகோதரன் முன்பே அமரனாகி விட்டதால் மனமொடிந்த நிலையிலே பெயர் நிலவப் பாடுபடுகிறார். மிக விசேடமாகக் குடும்பக்கலையில் பாலியல் உணர்வுகளையெல்லாம் காட்டி போதைனையூட்டல் தேவை என்கிறார்.

பத்திரிகையில் பற்பல செய்திகள், தொலைக்காட்சி முதலியவற்றில் பாலுணர்ச்சியூட்டும் பாடல் காடசிகள் வெளிவரும் போது பாலியல் கதைகளைக் கழித்து விடுகின்றனரே! அப்படியிருந்தும் தில்லை நடராசா அவர்களின் நிர்வாண அட்டைப்படம் நிர்வாண கதைக்காக கவச்சியூட்டலாமா? இவற்றையெல்லாம் எழுத்துலகில் அபிப்பிராய பேதங்கள் எனலாம் பாடமூட்டக்கூடிய பாலியல் நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை வட்டத்துள் சரிவர அமையா விட்டாலும் எவ்வகையிலாவது வெளியிடுதல் சமூகப்பணியாகலாம் எனக் கருதுகின்றோம். சிலர் ஆக்கங்களை வெளியிடும்படி வேண்டுகின்றனர். காலநிலை பார்த்து ஆவன செய்யக்காத்திருக்கிறோம். ("திருமணப்பரிசு" எனும் நூல்) அச்சிலிடம் பெறக் காலம் பார்த்துப் பதினைந்து ஆண்டுகளாகப் பலர் பார்வையில் கையெழுத்துப்பிரதியாக ஊர்சுற்றிக்கொண்டிருக்கிறது.

"மாறிவரும் மட்டக்களப்புத்தமிழகம்" எனும் புத்தகத்தை கனடாவிலிருந்து விசாரித்து அனுப்பும்படி புத்தகசாலைகளை வினவியதென்றால் பார்க்க வேண்டியதுதானே!. பிறந்த மண் தங்கப்புதையலாகும். இச்சிறுகதை நூலும் வெளிநாடுகளிலிருந்து விசாரிப்பு வரக்கூடிய நிலைகொண்டதாகலாம்தானே. ஆற்றலில்லாச் சிலர் விமர்சனம் செய்வது அகலவேண்டும்.

1964லே பாலர் பாமாலையின் பதிப்புரையிலே இரண்டாம் பந்தியில் குறிப்பிட்டுள்ளதையும் பின்னர் பொதுப்பாமாலையிலே 5ம் 8ம் பந்திகளில் கூறப்பட்டுள்ளதையும் கடவுள் எங்கே வி.த.வித்துக்கள் என்ற நூலின் இறுதிப்பந்தியில் வேண்டுகோளையும் கண்ணகையும் தன்னகையும் என்ற நூலிலே மூன்றாம் பந்தியையும் நினைவு படுத்தி வேண்டுதல் விடுகின்றோம்.

இக்காலக் கணணியுக நடைமுறையில் எமது நிறுவனத்தைச் சார்ந்த "கொம்செல்" நிறுவன அச்சுவடிவமைப்பாளாகள் சிறந்த முறையில் கணனி அச்சுவடிவமைத்தமைக்கும், அச்சிட்ட கத்தோலிக்க அச்சகத்தார் பங்குறற சேவையாளர்க்கும், கதையமைப்புக்கேற்ப அச்சுவடிவமைப்பாளர் துணையோடு ஓவியம் வரைந்த கலைஞர் ஈஸ்வரராசா. குலராஜ் அவர்களுக்கும், புத்தகங்களைக் கொள்வனவு செய்துவரும் இந்துகலாசாரப் பகுதியினருக்கும், வாசிகசாலைகளின் நிர்வாகத்தினருக்கும், புத்தகசாலையினருக்கும் நன்றி. பங்குற்ற யாவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

கதைப்போக்கு நாட்டுக்குத் தேவையான நோக்கு.. இவைகளின் உண்மை உணரக் காலம் எடுக்கும். எமது கலாசூரி ஆற்றல் பல நிறைந்தவர். எனக்காட்டவேதான் அன்னாரின் என்னுரைத் தொடர்ச்சி பின்னுக்குமுண்டு. இன்றைய காலகட்டத்தில் மூன்றுமாவட்ட கிழக்கிழங்கையில் தேசிய வீரர் தின வரிசையில் நிறைவேற்றதிகார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி அவர்களால் பட்டமளித்துப் பாராட்டப்பட்டவர். இந்நூலினால் .அறிவு பெருகட்டும். அறியாமை அகலட்டும். கற்பனைக் கதைகளான இவை படிப்பினை ஊட்டட்டும்.

1950, 1960 களிலே நான் வெள்ளவத்தை ஹம்டன் லேனில் வசித்த வேளை வானொலி நேரடி ஒலிபரப்பான காலத்தில் பேசிவிட்டு "ரக்ஷி" மூலம் புகைவண்டி பிடித்த பயணச்செலவெல்லாம் கலைத் தொண்டென்றும், நம்மவர் ஈடுபடத்தூண்டும் செயல் என்றும் கூறியவை பயன்படக்கண்டு பாராட்டுகின்றோம். இலாப நோக்கமின்றி இலக்கிய கலைச்சேவை செய்வோரைப் பாராட்டத்தானே வேண்டும். எட்டாவது நூலுக்கும் கொட்டாவி விடும் கலாசூரி எண்ணம் நிறைவேறுமோ? இறையருள் நிறையட்டும். திருமணப்பரிசு இளைஞர் கைகளில் கிடைக்கட்டும்.

மேலும் வெளிவருகின்ற பொன்னாச்சி பிறந்த மண் (14) கற்பனைக் கதைகளும் ஆசிரியரது கற்பனையே. இவை சித்திரப் படங்களுடன் வருவதும் மகிழ்ச்சியூட்டட்டும்.

**எஸ். கந்தசாமி**
**முன்னாள் அதிபர்**

*பசிமுக நிறுவனம்,*
*(பகுத்தறிவுச் சிந்தனை முத்தமிழ்க் கழகம்),*
*2, வன்னியனார் தெரு,*
*மட்டக்களப்பு.*
*10.12.1998.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடிணையற்றோரை இதயத்திருத்துவோம்



*ஈடிணையற்ற இலக்கியவாதியான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் நுற்றாண்டு விழாக் கொண்டாட்டம் நிகழ்வதாலும்.*

*ஈடிணையற்ற அரசியல்வாதியான தந்தை S.J.V.செல்வநாயகம் அவர்களின் நூற்றாண்டு விழா 1999ல் அடுத்து நிகழவிருப்பதாலும்.*





*ஈடிணையற்ற மதிப்புக்கொண்டு இவர்களைப் போற்றிய பண்பாளன் அதிபர் செல்வராசா அவர்களின் நினைவு கூடுவதாலும்*

இம் மூவரின் படங்களைப் பதிப்பித்துப் போற்றுகின்றோம்.

*இவ்வண்ணம்*

**பகுத்தறிவுச்சிந்தனை முத்தமிழ்க் கழகம்**

சி.கந்தசாமி, ஓய்வுற்ற அதிபர்

ச.பத்மநாதன் (B.A. Dip)

தெ.அழகுசுந்தரம்

ச.சங்கரலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரேவேளை ஒரே மேடையில் இருநூல்களை வெளியிடப்படுவதற்கான வரவேற்பில் வித்துவான் சா.கமலநாதன், சி. கந்தசாமி அதிபர், அண்மையில் காலமான அறிஞர் கார்த்திகேசு முதலானோர்




பகுத்தறிவு அண்ணா பரிசளிப்பு விழாவும் கலாசூரியின் 75 வயதான "பவள விழா" நிகழ்வுகளில் கௌரவ மேயர், கலைக்கோட்டன், தவராசா முதலானோர்.



ஆரவாரமேதுமில்லாத அக்காலத்தே மதிப்புப்பெற்ற புலவர்மணி அவர்களின் ஆசிர்வாதம் பெற்ற பாமாலை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மாவட்ட நீதிபதி மட்டக்களப்பில் மாண்புற்ற அட்வகேற் மயில்வாகனம் முதலான கணவான்களின் உபசார நிகழ்ச்சி.



மட்டக்களப்பின் கூட்டுறவுச் சேவையிலுயர்ந்த கௌரவ தேவநாயகம் அவர்களின் விருந்துபசாரம்



பாமாலைப் பாராட்டு விழாவில் பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை பராட்டுரை நிகழ்த்து கிறார். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, மகாவித்துவான் F.X.C., மாநகர முதல்வர் திசவீர சிங்கம், கண்ணாடிச் சிற்றப்பா முதலானோர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வையத்து
வாழ்வுக்கு
வழிகாட்டும்
வள்ளுவரை
நாவற்காடெனும்
நல்ல சிற்றூரில்
சிலை அமைத்துப்
போற்றிய நிகழ்வு




நிறுவனத்தாரின்
ஆரம்ப அறுவடை
விழாவில் G.A.
காசிலிங்கம், AGA
கணேசநாதன், M.P.
இராசதுரை, SRD
சுப்பிரமணியம்,
வெற்றிவேல்
செல்வராசா
முதலானோர்.



உழவுஇயந்திர
சாரதியாகக்
கலாசூரி
வெற்றிவேல்
விநாயகமூர்த்தி
அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பாடு

"குடுக்கிற தெய்வம் கூரையப் பொத்துக் கொண்டு குடுக்குமாம் தங்கம்! நம்மட கஷ்ட காலமறிஞ்சிதான் கடவுள் குடுத்திருக்கிறாரு. பேசாம விடுவம், ரகசியமாக இருக்கட்டும்." என்று விண்ணப்பம் விட்டான் கண்ணப்பன், தன் மனைவியிடம் மனம்வேறு வாக்குவேறாக.

"அத்தான்! எனக்கெண்டால் கொஞ்சமும் விருப்பம் இல்ல எனக்குப் பயமா இருக்கு. மானம் மரியாதையாக வாழ வேணும். நமக்கு கஷ்டமெண்டால் ஆரிரையும் பொருள அடாவந்தியாக எடுக்கலாமா?" என்றாள் மனைவி தங்கப்பிள்ளை, படுக்கைக்கு ஆயத்தப்படுத்தும் போது.

"நான் என்ன அடாவந்தியாக அபகரிக்கச் சொன்னேனா? வலிய வந்த சீதேவி! அத வழுவ உடலாமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வலிய வந்த சீதேவி புறகு மூதேவியக் கூட்டியுடும். அந்தப்பாவம் நமக்கு வேணாம் அத்தான்"

"பெரிய பாவத்தக் கண்டாவு! நாமென்ன வலியப்போய் களவெடுத்தோமா? வாதாடிக் கேட்டோமா? ஆரும் ஐமிச்சம் கொள்ள மாட்டாங்க."

"அப்பிடியான குடும்பம் என்ட படியாத்தானே இப்பிடியாக நடந்திருக்குது. அவங்க நம்மில கொண்ட நம்பிக்க. எத்தன சாமானத் தொலைச்சுப் போட்டிங்க"

"அதுகள தூண்டிப் பேசிக்கதைச்சா இப்ப எண்டாலும் "ஏ.கே" தூக்க எனக்கு ஏலும்."

"ஏ.கே தூக்கிற கதையாலதானே அப்பாவும் மாமாவும் தப்பாக நடந்திட்டாங்க. நான் என்ட படியாகக் காட்டாம நடந்து வாறன். நகை நட்டு விசயம் நம்மட அப்பா அம்மாவுக்குத் தெரியா. ஊருக்கையும் தெரியா. ஆருக்குமே தெரியாததால்தானே அவங்க தெரியாத்தனமாக வாங்கித்தந்திட்டாங்க."

"எப்பிடியோ மாறித்தந்திட்டாங்க இனி நம்மடதானே! இஞ்ச கொண்டா நான் கொண்டு தைலாப்பெட்டிக்க வைக்கிறன். உன்ட நகநட்டெல்லாம் தொலச்சுப் போட்டன் ஆனப்பந்திப் புள்ளையாரும் அடுத்தாப்ப இருக்கிறாரு, நீ குடுக்கப் பாக்கிறா நானே கொண்டு வைக்கிறன்."

•

"நீங்களே கொண்டு வைச்சாக் கேக்காமலே மறுகா எடுத்திட்டுப் போகலாம் என்டு பார்க்கிறையளா? எத்தனையத்தான் கேட்டும் கேளாமலும் எடுத்துக்கொண்டு போய்த் தொலைச்சுப் போட்டு கல்லுப் புள்ளையாராட்டம் புள்ளையாரச் சொல்லிப்போட்டுக் கலங்காம இருக்கிறீங்க. இன்னும் நாலுபேர் அறியாமத்தானே நடக்கிறன். நான் காட்டிக்குடுத்துச் சண்டை புடிச்சா-----"

"சண்டை புடிச்சா நான் சண்டைக்குப் போவன். என்ட கூட்டாளிமாரு எத்தின பேரு வீரனாயிருக்கிறானுகள் பட்டணத்தில் கூடப்படிச்சவனுகள்-----------"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்படியே இதச் சொல்லிச் சொல்லியே எல்லாரையும் அடக்கி வாறிங்க! நான் பெத்த மகளப் பார்க்கப் பேர் எடுத்து வாறபடியாப் பொறுத்துப் பொறுத்து வாறன். இன்னமும் காட்டிக் குடுக்கல்ல, இனிமேலும் காட்டி குடுக்க மாட்டாள் இந்தத் தங்கப்புள்ள------"

"தங்கப்புள்ள தங்கமான புள்ளதான், இதையும் பேசாம எடுக்கலாந்தானே ஒத்துவாவன்"

"எனக்கொண்ணா, இதமட்டும் சொல்லாதீங்க! நம்மட குடும்பத்து மானம் மரியாத எல்லாம் பறக்கும். அவதந்திரம் தனக்கந்திரம், வேணாம் வேணாம்." எல்லாத்துக்கும் உட்டுக்குடுத்த என்டு என்னிலதான் அப்பா, மாமா, மாமியெல்லாம் குத்தம் சொல்லுவாங்க."

"நீ, உட்டுக்குடுத்தபடியால்தான் நானும் கண்டபடி நடந்து நகநட்டெல்லாம் தொலைச்சுப் போட்டேன், இப்ப பழைய கண்ணப்பன் இல்லத்தானே! இத மட்டும்---------"

"இந்தக் குணம் வந்தா எந்தக் கண்ணப்பனோ? இனிமேலாவது மானம் ரோசமாக வாழுங்க. இப்ப படுப்பம்.விடிஞ்ச புறகு யோசிப்பம்" 10620

இப்படி இருவரும் பேசிக்கொண்டனர். நாடறிந்த நல்ல பெரிய குடும்பத்தைச் சேர்ந்த புதுக் குடும்பம் இவர்கள். காலத்தின் கோலத்தால் கிராமப்புறமிருந்து பட்டணவாசிகளாகக் ஆகிக் கொண்டனர். தனிமையில்இருந்தால் தங்கப்பிள்ளையை ஆட்டி அடக்கலாம் என்று எண்ணியிருந்த கண்ணப்பனுக்குப் பெற்றோரும் அனுசரணையாகிக் கொண்டனர். மட்டக்களப்புப்பட்டணத்துப் புது வாழ்க்கையிலே கண்ணப்பன் செலவு கூடிய வகையால் அளவுகணக்கற்ற செலவாளியானான். ஊதாரியானனான்.

தங்கப்பிள்ளை வளர்ப்புப்பிள்ளை ஆனதால் அடக்கொடுக்கமாக வளர்ந்தாள். நாவலூர் குஞ்சாப்போடியார் குடும்பமென்றால் பெருமதிப்பு. பணமும் குணமும் இருந்தும் குஞ்சாப்போடி பண்பட்ட உள்ளமுடையவர் பிள்ளைப்பேறில்லாது கவலையோடு வாழ்ந்தவர். ஏழை எளியவர் என்றால் கூடிய இரக்கமுடையவர். தமது இனத்திலே சொந்தமான ஏழைக்குடும் பத்துத் தங்கப்பிள்ளையைத் தத்தெடுத்து சொந்தப்பிள்ளைகளைப் போன்றே நன்றாக வளர்த்தவர். அக்கா மகன் கண்ணப்பன் தாய் தகப்பன் சொற்படி கேளாமல் சரிவரப்படியாமல் கூட்டத்தால் கெட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதறிந்து படிப்பை நிறுத்தி இருபது வயதுக்குள்ளே தங்கப்பிள்ளைக்கு தாலி கட்ட வைத்தார்.

தங்கப்பிள்ளையும் ஆனைப்பந்தி பாடசாலையில் ஏழாம் வகுப்போடு படிப்பை நிறுத்தி கண்ணப்பனின் ஆறு பவுண் தாலிக்கொடியைக் கழுத்திலேற்றினாள். கண்ணப்பன் எங்கிருந்தாலும் கூட்டாளிமாரைத்தேடிப்பிடித்துவிடுவான். பட்டணவாசத்தில் தமக்கேற்ற கூட்டமும், கோணர்வாரும் சீட்டாட்டமும் செல்லப்பிள்ளையாகக் காட்டின, கூட்டாளிமார் ஆடாத ஆட்டமெல்லாம் ஆட்டுவித்தனர். கண்ணப்பன் காசு பணம், அவர்களின் பொதுவுடமையாச்சு.

குஞ்சாப் போடியார் ஏதொன்றும் அறியாது துவக்குத் தூக்கப்போன பிள்ளைகளோடு அக்கா மகனை சேர்ந்து விடாது வாழ வைத்து விட்டேன் என்று மகிழ்ச்சியுடன் இருந்து வந்தார். தங்கப்பிள்ளைக்குக் கொடுத்துப்போடப்பட்ட தங்க நகைகள் அத்தனையும் கில்ற் நகைகளாக மாறிக்கொண்டே வந்தன. கட்டிய தாலி கூட குஞசாசுப்போடி செய்து கொடுத்ததுதான். அது மட்டுமே தங்க நகையாக மிஞ்சியிருந்தது.

தங்கப்பிள்ளை ஆண்டுக்காண்டு ஈச்சந்தீவுக் கண்ணகையம்மன் கோவிலிலே கண்ணகை பிரசங்கக் கதைகேட்டுக் கேட்டு பண்புள்ளம் கொண்டவள். கண்ணப்பனைத் திருத்தியும் சாடைமாடையாக அடிக்கடி பழைய நடைமுறையிலே நடந்தான். சிறுபிள்ளையிலே சொந்தமென்ற படியால் அத்தான் முறை சொல்லியவருக்குக் கணவனாகி அத்தானாகிப் போனான்.

வளாப்புப்பிள்ளை ஆனதால் வீட்டிலே முறைதலை டமுறையெல்லாம் தங்கப்பிள்ளையிடம் உச்சமாயிருந்தன. னாலேதான் இளமையிலே அத்தான் எனப்பட்ட கண்ணப்பன் புருஷனாகப் போனபின்பும் அத்தான் என்றே அழைக்கப்பட்டான். கண்ணப்பனின் அப்பா குஞ்சாப்போடியாரின் அக்காவின் கணவராவார். அவருக்கு பிள்ளைகள் கூடி அக்காவை குடல் கழுவ வைத்தாச்சு. அப்படியிருந்தபடியால் கண்ணப்பனை படிப்புச் செலவு கொடுத்துப்படிப்பித்தார்.படிப்பிலே சிறிது கவனக்குறைவென்றாலும் “மாமா” என்றதும் பயபக்தியுடன் படிப்பைத் தொடர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான காலகட்டத்திலே வீட்டுக்குக் கண்ணப்பன் வந்தால் பள்ளிப்படிப்பில் நாட்டம் செலுத்தாது கூட்டநாட்டம் ஏற்படலாயிற்று. இதனாலேதான் இளம் தம்பதிகளாக ஆக்கப்பட்டு பட்டணம் அனுப்பப்பட்டனர். ஆனைப்பந்திப்பிள்ளையார் கோயில் வட்டாரத்திலேதான் வாடகைக்கு வீடெடுத்துக் கொடுப்பது பொருத்தமென்று மச்சான்மார் இருவருமாக வந்து பார்த்தெடுத்து இரண்டொருநாள் தங்கிவிட்டுச் சென்று விட்டனர். அப்படியான நிலைகொண்ட கண்ணப்பன்தான் இப்போது இவ்வாறான நடைகொண்டவனாகிவிட்டான்.

மழைவிட்டும் தூவாணம் விடாத நிலைபோல் நடந்து வந்தான் கண்ணப்பன்.நாட்டுப்பக்கமெல்லாம் போடிமார் குடும்பப்பெண்கள் போட்ட போட்ட நகைநட்டுகளோடே ஜொலித்துக் கொண்டிருப்பர். விசேடமான தினங்களின் போது மேலதிகமாகவும் அணிந்து அழகூட்டுவர். ஒருசில உறவினர்கள் தேவை எனக்கண்ட போது கைமாற்றாக வாங்கி அணிந்து பின்பு ஒப்படைத்து விடுவர். அந்த வகையிலே தங்கப்பிள்ளையின் பக்க வீட்டு அமராவதிக்கும் நகை கொடுக்கல் வாங்கல் இருந்தது.

"குடுக்கிற தெய்வம் கூரையைப்பொத்துக் கொண்டு குடுக்குமாம்" என்ற பழமொழி காட்டி விண்ணப்பம் செய்த கண்ணப்பன் உரையாடல் இதுதான். அமராவதி வாங்கிப் போட்டுப் போன காப்புக்கூட்டம் களவு போக ஐயந் தோன்றாத வகையில் அதே போன்ற இரண்டு பவுண்கூட்டத்தை கழுத்துச்சங்கிலியை விற்று வாங்கி அமராவதி அனுப்பியிருந்தாள். நகைநட்டு விசயம் கண்ணப்பன் நன்கறிவான். இது தங்ககாப்புக்கூட்டம். நான் வாங்கிய கில்ற் காப்பு கூட்டமும் ஒரே மாதிரியாகத்தானே இருக்குது. எனக்கு வாய்ப்பாகிக்கொண்டதென்ற எண்ணத்துடன் கணவன் போலி நித்திரைகொள்ள மனைவியும் கண்ணுறக்கம் போன்று காட்டாப்புக் காட்டினாள்.

இரவெல்லாம் கண்ணப்பன் எப்போ விடியும் விடியுமென்ற எண்ணத்திலே இருந்து தங்கப்பிள்ளை நித்திரை எனக்கருதிக் கொண்டு நகையை எடுத்து மறைத்து விட்டுச் சிறிது நித்திரையாகிக் கோழி கூவும் போது கோழிக்கு 'நாசமாப் போன கோழி இப்ப கூவிக்காட்டணுமா? இல்லா விட்டா விடியாதா? என்று ஏசிப்புறுபுறுத்துக் கொண்டு விடியற்சாம விடி நிலவிலே தான் வைத்திருந்த இடத்து மனைவியால் மாற்றப்பட்ட கில்ற் காப்புக் கூட்டத்தைக் கள்ளனைப் போல் அங்கிங்கெல்லாம் பார்த்து விட்டு எடுத்து மடியிலே வைத்துக் கொண்டு கடைத்தெருப்பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனான். கடை திறக்கும் வரை காத்துக் கொண்டிருந்தான்.

வீட்டிலே நிலந் தெளித்து வாசலும் கூட்டமுதல் "அக்கா! அமராவதி அக்கா!! என்ன நடந்தது இது ஆரிடையோ மாறித்தந்திட்டீங்க போல. இந்தாங்க இது எங்கட காப்புக் கூட்டமில்ல" என்று சொல்லிக் கொண்டு காப்புக் கூட்டத்தை தங்கப்பிள்ளை நீட்டினாள்.

அமராவதி மேலும் அச்சங் கொண்டு, "என்ன தங்கப்புள்ள இது சரியில்லையா? இவ்வளவு காலமும் நடக்கல்ல. இப்ப நடந்து போச்சு. எடுத்துக்கங்க புள்ள"

"இதன்ன அக்கா உங்கட வேல. இது தங்கக் காப்புக் கூட்டம். என்னிடம் வாங்கின கிலற் காப்புக் கூட்டம். இந்தக்காலத்துக்கு ஏத்தாப்போல நகை நட்டுகள ஊட்ட அனுப்பிற்றம். இருக்கிற எல்லாம் கிலற்தான். இதோ இது மட்டும் தான் தங்க நகையா இருக்குது" என்று தாலிக் கொடியைக்காட்டினாள் தங்கப்பிள்ளை.

இதனைக் கேட்ட அமராவதி விறைத்துப் போன நிலையில், இப்படியும் படுவான்கரையில் ஆட்கள் இருக்கிறாங்களே. கண்ணப்பரு எங்க போனவரு? என்றாள். "அவரு வெள்ளனை வெளிக்கிட்டிட்டாரு வயலுக்க போ்றாரோ கூட்டாளி மாரோடு கூடுறாரோ தெரியா. அவருக்கு புத்தி சொன்னாலும் அக்கா நீங்க. ஆனைப்பந்தி புள்ளையாருக்குப் பக்கத்தில இருந்திட்டு அறியாயமா நடக்கலாமா?"

"அவனும் இளந்தாரிப்புள்ளதானே இன்னமும் புத்தி புடிபடல்ல. ஏன் உங்கட படுவான் கரைப்பக்கத்தில நல்ல ஆக்கள் இருக்கிறாங்க தானே! இருந்தவங்க தானே?"

"ஏன் அக்கா ! எங்கட பக்கம் படிச்சி பெரிய உத்தியோகம் எடுத்த சிவலிங்கடகுத்தருடைய அண்ணன் துரையப்பா மாஸ்ரா் பெரிய பணக்காரன். எல்லாருக்கும் குடுத்துக் கெட்டாரு." ஆரிட்டையும் அபகரிச்சாரா?

ஏன்புள்ள உங்கட அன்ன கேசரி சேமனும் இஞ்ச பட்டணத்திலையும் வந்திருந்து அன்ன சத்திரம் போல ஊட்டில வாற போற ஆக்கள நடத்தின எண்டு நல்லாக கதைப்பாங்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏனக்க எங்கட வேலாப் போடி விதானப் பெத்தப்பா ஊருக்க நல்ல பேரு எடுத்தவரு. எங்கட அத்தாண்ட ஆக்கள் கொச்சிக்கா வாத்தியர் எல்லாம் நல்ல பேர் எடுத்தவங்க” ஆரிட்டையும் அபகரிக்கல்ல.

“அப்படியான வமிசத்தில வந்த புள்ளையள் நீங்க. கண்ணப்பனும் உன்னாலதான் புள்ள நல்லமனிசனாகணும். இப்ப கொஞ்சம் கூட்டாளி மாரிற கூட்டநாட்டம் குறைவு போல...”

“அவரும் நல்ல குடும்பத்து ஆள்தான் அக்க! கூட்டம் படுத்திற பாடு. அவருக்கு இதுகளப்பத்தித் தெரியா. பேசாமக் கொண்டு வையுங்க. அதுக்கிடையில எங்கட காப்புக் கூட்டத்துக்கு என்ன நடந்தது அக்க!”

அதை ஏன் கேட்கிறா புள்ள? என்ற மடத்தனம்! இதுக்கு முந்தியும் வாங்கி போட்டுக் கொண்டு தரல்லையா? தீத்தக்கரையில, கோயில் குளத்தில நகைநட்டு ஏன்? இது ஒரு பாடம் புள்ள. இடக்கையில மணிக்கூடு சோத்துக்கையில உங்கட காப்புரெண்டும்; ஆலமரத்துக்குக்கீழ படுத்துக்கிடந்து சோத்துக்கையால் கட்டிப்புடிச்சிக் குழந்தை புள்ளைக்குப்பால் குடுத்திட்டு அரைக்கண் நித்திரையில் இருந்த நான் தானே, பின்பக்கத்தில பெரிய புள்ளையள் படுத்திருந்த. அந்த லயிற்று வெளிச்சத்தில காப்பு “பளபள” எண்டு ஜொலிக்கப் பக்கத்தில படுத்திருந்தவள் செய்த வேலபுள்ள. நல்ல காலம் கழுத்துச் சங்கிலியக்களட்டல்ல, அதை வித்துப் போட்டுத்தான் இதை வாங்கித்தந்தனான். இனி நமக்கொரு பாடம். வேற ஆருமெண்டாத் தருவாங்களா புள்ள?

“தேத்தண்ணியும் குடிக்கல்ல இனி வந்திடுவாரு” என்று சொல்லிக் கொண்டு வீடு திரும்பிய தங்கப்பிள்ளை, “கோவலன் கண்ணகையம்மன் கால் சிலம்பை விக்கப் போனமாதிரி காப்பு விக்கப்போன இவருக்கு ஒரு ஆபத்தும் வந்திரப்படா ஆனைப்பந்திப்பிள்ளையாரே” என்று வேண்டிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்னாச்சி பிறந்த மண்

விடியற்சாமம் கோழி கூவிய விடி நிலவு. ஆறுமுகத்தான் குடியிருப்பில் இருந்து பன்குடாவெளிக்கு மட்டக்களப்பு மேலந்த வாவியினூடாக தோணி சென்று கொண்டிருக்கிறது.

இந்தக் கால நிலைமைகளால் மீன்பிடித்தோணிகள் குறைவு. தன்னந்தனியாக தோணியில் போய்க் கொண்டிருக்கின்றான் வரதன். பன்குடாவெளி புலையக்காடென்னும் சவக்காலைக் காட்டோரமாக கோவிலடித் துறைக்குப் போகும் போது விடி நிலவு மறைந்து நிலமும் தெளிந்தது. அப்படிப் போகையில் சவக்காலைப் பேய்ப்பயமும் பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது வரதனுக்கு. அந்த வேளை மேலே ஒரு "ஹெலியும்" பறந்துகொண்டிருந்தது. மேலே பறந்து வரும் ஹெலியைப் பார்த்தபடி அவன் மேலும் வேகத்தைக்கூட்டினான். தோணியில் கூடிய வேகச் சவள் வலிப்பு சலசலவென்ற ஓசையை உண்டாக்கிப் பேய்களையும் ஓடச் செய்யும் என்று நினைத்தான். பயத்தினால் வேகம் கூடினாலும் மனக்கற்பனையும் ஓடியது. வாவியின் நிலைமையால் பக்கம் மாறி மாறி கைகள் வலிக்க கவலையூட்டியது.

"காலரக்கட்டைக்கு அங்கால இருந்த ஆற்றங்கர எங்கட கண்ணோட கிட்ட வந்திற்றடா. இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கிறது அணையக்கட்டி அலையடிச்சிக் கரையாம தடுக்கலாமே. ஒங்கட காலத்தில ஊரும் ஆத்துக்குள் போகும் போல இருக்கடா எவ்வளவு கிட்ட வந்திட்டுது ஆறு. பங்கிடான்வெளி என்டால் ஒத்துமையப் பாருங்கடா, போடி குடும்பம் ஒத்துமையாக இருந்து அரசாண்டதாண்டா எண்டு கல்வெட்டெல்லாம் இருக்குதுதாண்டா. இப்படியான எத்தனையோ தொல்லைகளால் தமிழண்ட ஊரெல்லாம் பாழாய் போய்க்கொண்டிருக்கிதே" என்றெல்லாம் பொன்னாச்சிப் பெத்தா முன்பு சொல்லிக் காட்டியதையும் அந்த நேரத்தில் நினைத்து மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க தோணியை ஓட்டினான் வரதன்.

பொன்னம்மாவின் வயிற்று வார் பேத்தியின் மகனான வரதன் பருவமான இளந்தாரி., கட்டுமஸ்தான தேகம், வேளாண்மையோடு மீன்பிடித் தொழில் செய்பவன், அடிக்கடி ஆமிக்காறர் அடித்த அடியென்று அடையாளங்களைக்காட்டி. பெருமைப்படுபவன். பொன்னாச்சிப் பெத்தா வென்று கூடிய இரக்கமுடையவன். அடிக்கடி சோறுகறி முதலியன கொண்டு கொடுப்பவன்.

முதல் நாள் பெரிய கண்டத்து ஓடையில் பெரிய அத்தாங்கு குத்தி ஓடை கலைக்கும் போது நல்ல விரால் மீன்கள் பிடிபட்டதால் பெத்தாவுக்கு விரால் மீன் கறி சோறு கொண்டு போகத் தீர்மானித்த செயற்பாடுதான் தோணியோட்டம்.

பொன்னம்மாவும் அந்த நாளில் அத்தாங்கு கொண்டு மீன், இறால் வடித்து விருப்பமாகச் சாப்பிட்டவள்தான். விரால் மீன் என்றாலே அவளுக்கு அதிக விருப்பம். விரால் மீன் பொரியலும் குளம்புக்கறியும் என்றால் பல்லில்லாத போதும் வயிறு புடைக்கச் சாப்பிடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையெல்லாம் நன்கு அறிந்தவன் வரதன். அதனாலேதான் அக்கிழவிக்கு விரால் மீன் கறி சோறு கொண்டு போகிறான்.

பொன்னம்மாக்கிழவியை அக்கம் பக்கத்து ஊருக்கெல்லாம் நன்றாகத் தெரியும். தேனும் பாலும் செழிப்புடை வளமும், மருத நிலமும், மங்காச் செல்வமும் கொண்டிருந்த பன்குடாவெளியென்னும் கிராமம்தான் பொன்னம்மாவின் பிறந்த மண்.

வேளாண்மைத் தொழில், மீன்பிடித் தொழில், சட்டிபானை முதலிய மட்பாண்டத்தொழில், பன்பெட்டி, பாய், உமல், குட்டாப்பெட்டி இளைத்தல், முதலான தொழில்களோடு, மாட்டுப்பண்ணை, கோழி வளர்ப்பு, உப்பட்டி அடித்தல், அரிசி குத்துதல், முதலிய எல்லாவற்றாலும் அந்தக்கிராமம் கமக் கைத்தொழிற்சாலையாகவே இருந்து செழிப்புற்று வந்தது.

மட்டக்களப்பிலே மண்டூர்க்கீரைக்கு மதிப்பு என்பது போல், பன்குடாவெளி எருமைத் தயிருக்கும், முடாப்பானைச் சட்டிக்கும் மதிப்புக்கூட. பொன்னம்மாக்கிழவியின் வீட்டில் இவைகளுக்கு அயலூரவரும் ஆலாய்ப் பறப்பர்.

பொன்னம்மாவை, பொன்னிப்பெத்தா, பொன்னாச்சி, அட்டாளையம்மா என்றெல்லாம் அழைப்பர். 90 வயதையும் தாண்டிய பல்லேதும் இல்லாத பொக்கைவாயக் கிழவி. நரை விழுந்தும் கூனல் விழாத கிழவி. காதிலே பழங்காலத்து தங்கப் பூத் தோடும், கழுத்திலே தங்கச் சரடும் அவளை விட்டகலாத ஆபரணங்கள். "கடேசிக்காலத்துக்கு இதுகளாவது எனக்குதவும். இந்தக்காலத்தில ஆரயும் நம்ப முடியாது என்று அடிக்கடி கூறிக் கொண்டு வருவாள்." ஏதோ சொன்னாப் போல் பதினாறு பிள்ளைகளைப் பெற்று பேரெடுத்த போடி குடும்பத்துப் பொம்பள என்றும் பேசிக்கொள்வார்கள். அப்படியென்றால் பார்க்கலாம் தானே!.

பரம்பரைப்போடி வம்சமும் இனசனப் பெருக்கமும் உடையவள். "நாலு பணம் இருக்காட்டியும் நாலு சனமாவது இருக்கத்தானே வேணும்" என்றெல்லாம் பேசிக் கொள்பவள்..நாட்டு நடைமுறைகளினால் இனசனமெல்லாம் பிறந்த மண்ணை விட்டு பிறவிடங்களுக்குச் சென்றதால் கவலைப்பட்டவள். கவலைப்பட்டாலும் "நம்மட சாதி சனங்களும் இந்தப் பூலோகம் எல்லாம் அமெரிக்கா, கனடா, வெள்ளக்காறன்ட சீமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவூஸ்த்திரேலியா, இந்தியா, சவூதி எண்டெல்லாம் போனா நமக்கும் பெருமதானே என்ற எண்ணமெல்லாம் கொண்டவள் பொன்னம்மா.

பொன்னியின் செல்வங்கள் உலகில் பல இடங்களிலும் பரவலாயின. இப்படியெல்லாம் இருந்தும் வயது போன காலத்திலும் சட்டிபானைத்தொழிலை விட்டவளாய் இல்லை. முடாப்பானை வனைவதில் பொன்னி கெட்டிக்காரி. நாலைந்து கூட்டத்தவருக்கு தலைவியான நிலையிலே ஆடி ஓடி அலையாமல் அட்டாளைக்குள் இருந்து சட்டிபானையால் வருமானம் பெற்று வந்தாள்.

பொன்னியின் சட்டி பானைச் சூளை, பிரிப்பது கேள்விப்பட்டால் வியாபாரிகள் நான் முந்தி, நீ முந்தி என்று நிற்பர். பன்குடாவெளிச் சட்டிபானை வாங்குவதற்கு அந்தக்காலம் காத்தான்குடி ஒட்டான் குத்தி பாய்வள்ளம் எல்லாம். பன்குடாவெளி முந்தியிருந்த நிலையில் துறைமுகம் போல் காட்சி காட்டியது. இலங்கை சுதந்திரமடைந்த முதல் பிரதமரான கௌரவ டீ.எஸ்.சேனநாயக்க அவர்களால் 1949லே தேசத் தொண்டன் திரு.வி.நல்லையா "எம்பி" அவர்கள் ஊடாக சட்டிபானைச்சங்க கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது. அந்த விழாவிலே பொன்னம்மாவும் அறிமுகப்படுத்தப்பட்ட தொழிலாளி. படிப்பறிவு குறைந்தாலும் பகுத்தறிவோடு பண்பாடுடையவள்.

"யப்பான்காறன் குண்டு போட்டான், 57ம் ஆண்டு கழுத்தளவு வெள்ளம் புரண்டோடிச்சி, 77ஆம் ஆண்டோ, 78ஆம் ஆண்டோ கடும் புசல் அடிச்சிது. ஊடுவளவுட்டு ஒள்ளுப்பமும் அசையல்ல, அசலூருக்கெல்லாம் போகல்ல, இப்ப நம்மட நாடு என்ன பாடு படுகுது?. நம்மட புள்ளைகளுக்கு நாட்டில கரிசின இல்ல. நாலான பக்கமும் நாயாக ஓடும் காலமாச்சி " என்றெல்லாம் வாயால் சொல்லிக் கொண்டே மண்வேலை செய்பவள்.

நமக்கு சாவறிதிகாலம், நம்மட கந்து கவரெல்லாம் கிட்டடியில இல்ல, தூரத்துத் தண்ணி ஆவத்துக்கு உதவாது. என்னக் கூப்பிடுறாங்களே அவங்களோட இருக்க வரட்டாம். இந்த பொறந்த மண்ண உட்டிற்றுப் போவனா நான்? பொறநாட்டுச் சம்பாத்தியம் பொறந்த நாட்டுக்கால் தூசி. பேரன் பேத்திகளுக்குப் புத்திகூறுகிற பெத்தாவை நினைத்துக்கொண்டதால் தூரம் காட்டாமல் பன்குடாவெளி கோயிலடித் துறையைத் தோணி எட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹெலி" மேலே பறந்துகொண்டிருப்பதால் சிந்தனையெல்லாம் கூடப் பயம் கூடியது. தோணியை இழுத்து வையாமலே சவளைத் தோளிலே வைத்துக் கொண்டு பொன்னாச்சிக்கான சோறு கறியையும் தூக்கிக் கொண்டு ஓட்டோட்டமாக ஓடினான்.

"பெத்தா, பெத்தா, பொன்னாச்சிப் பெத்தா! இன்னும் எழும்பல்லையாகா? விரால் மீன் கறியோட சுடுசோறு ஆக்கிக்கொண்டு வாறன் பெத்தா, ஹெலியொண்டு என்ன மேல தொரத்தி வாறாப்பல இருக்கு, வெட்டையால வராதகா. அட்டாளைக்குள்ளதான் இரு பெத்தா" என்றெல்லாம் ஆத்திரப்பட்டு சொல்லிக் கொண்டு அட்டாளைக்குள்ள புகுந்தான்.

"என்ன......தா...த..ம்..பி வரதா இந்த ஏ..ம....ஞ்...சாமத்தில இருட்டோட துவக்கப் போல சவளக் கொண்டோடி வாறா? இளந்தாரிப்புள்ள .வெட்டக்கிறம்பலாமாடா? விரால் மீன் கறிசோறு ஆசதான். அதப்பாக்க பொறந்த மண்ணிலதான்டா ஆச கூட. எங்கடா ஹெலி பறக்குதா? எனக்கென்ன தெரியும்? சத்தம் கேட்குதா? " என்றெல்லாம் தட்டுத்தடுமாறிப் பேசிக் கொண்டு வெளியே வந்தாள் பொன்னாச்சி.

"படபட" வென்று வெடிகள் பறந்தன. வாசல் மண்ணிலே தங்கப் பூததோடும் சரடும் பளபளக்க மரணப்படுக்கையானாள். வரதனுக்கு ஒரு சன்னம் கூடப்படாமல் அப்படியே சிலையாகி நின்றான். பயங்கரவாதி பலியென்று ஹெலி பறந்தது.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்வினை

காலை உச்சிப் பொழுது உக்கிரத்தை ஒன்பது மணிப் பொழுது காட்டிக் கொண்டிருந்த வேளை, "சுற்றிவளைத்தெல்லாம் ஆறு, குளம், கடல், ஏரியெல்லாம் இருந்தும் இவ்வளவு வெயிற் கொடுமை ஏன்? மட்டக்களப் பென்றால் வரட்சியா? பங்குனி வெயிலிற் போவோனைப் பாத்திருந்தோனும் பாவியாம் என்பது பழமொழி, இதென்ன டாப்பா? சித்திரையும் போய் வைகாசி பிறந்து...." என்றெல்லாம் எனது மனச் சிந்தனையோடு சைக்கிள் ஓட்டம், மூடிய தலைச்சால்வையால் தடைப் படுகின்றது.

தலைமூடிய சால்வை யைச்சற்று விலக்கிக் கொண்டு தடைப்பட்ட சைக்கிளை உருள வைக்கிறேன். அவ்வேளை வைத்தியசாலை வாசலில் அளவுகணக்கில்லாத சனங்களின் கூட்டம். இந்தக்கால நிலை மையிற் சனக்கூட்டத்தைக்கார

10620



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்காட்டிச் சொல்லத் தேவை யில்லை. இரண்டு தேநீர்க்கடை களைத் தாண்டிச் சைக்கிள் ஓட்டுவதே பகீரதப் பிரயத்தனம்! வைத்தியம் பெறவந்தோர் நமக்கு மருந்து கட்டும் காயங்களைக்கூட உண்டாக்கியும் விடக்கூடும். அவதானமாகப் போய்க் கொண்டிருக்கிறேன். ஆரவாரத்திடையே பல குரல் ஒலிகள் கேட்கின்றன.

"என்னகா? புள்ள! ஒங்கட ஊருக்காரன், ஊருக்குதவி செய்யிற உத்தியகாரன், பார்த்தும் பாராமல் போறாரு............."

இரண்டாவது குரல். அவருக்கென்னடா தெரியும்? தெரிஞ்சாக்கூட தெரியாமப் போற காலங்கா இப்ப! ஆமி, அவங்க, இவங்க இல்லையாகா இப்ப? நம்மிடதுகளும் தலகால் தெரியாமல் துள்ளுதுகள்!"

"அப்படியெல்லாம் இருந்தாலும் அந்த ஐயா பசமில்லாமல் துணிஞ்சி வந்து கேக்கிற பாக்கிறவரு" என்றது மூன்றாவது ஒரு பெண் குரல்.

மூன்று குரல்களும் செவியைக் குடைந்து கொள்ளத் திரும்பிப் பார்க்கிறேன். குமரப்பருவ மங்கையுடன் நடுத்தரமிருக்கும் பெண்ணும் இரண்டு ஆண்களும் என்னை முடுகி வருகின்றனர்.

கிட்ட முடுகியதும் அவர்களது அழுகையும் பேச்சும் மீன் வியாபாரி வேலன் வைத்தியசாலை விடுதியிலே இறந்து விட்டான் என்பதைக்காட்டி ஆயித்தியமலை வீட்டுக்குக் கொண்டு போக உதவியைக் கோரின.

தாயும் பிள்ளையுமாக நின்றவர்கள் ஓரளவில் பழக்கப்பட்டவர்கள். மீன் வியாபாரி நெடுங் காலமாகத் தெரிந்தவன்தான். பட்டணத்து வீடொன்றில் ஒரு பெரிய துரை வீட்டு வேலைக்கு ஏழெட்டுப் பிள்ளை குட்டிக்கார வேலனை வேண்டாத மாதிரியெல்லாம் புத்தி சொல்லி வேண்டிக் கொண்டதால் எனக்காக ஒரு பிள்ளையை விட்டவன். அந்தத்துரை கொழும்புக்கு மாற்றமாகிப் போகும் போது சிறுமியையும் கூட்டிக் கொண்டு போனவர்கள். ஆறேழு ஆண்டுகளாகியும் வீட்டுக்குச் சிறுமி வரவில்லை. கொழும்புக்குச் செல்லும் போதெல்லாம் கண்டு வருவது வழக்கம். குமராய்ப் போன பிள்ளையை வீட்டுக்கு அனுப்பி விட்டு அவர்கள் வெளிநாடு சென்றுவிட்டனர். அதனால் தாயை விடப்பிள்ளையே அறிமுகம் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்புச்சி செத்துப் போயிட்டாரு ஐயா! சவத்தைக் கொண்டு போக உதவி செய்யுங்க ஐயா!!"

"என்னகா நீ பாத்திட்டு நிக்கிறா? ஆரிற காலில உழுந்தெண்டான அந்தச் சவத்தக் கொண்டு போகத்தாங்கா வேணும். ஆளப்புடிகா! என்று கண்சாடை காட்டுகிறான் இரண்டாவது குரல் காரன்."

"என்ட அய்யாவே! ஆருக்குத் துரோகஞ் செஞ்சாரு? குடல் அழுகிச் சாகிறதுக்கு. செய்வினை செஞ்சி போட்டானுகளே. அவனுகளுக்கெல்லாம் இடிவிழுறல்லையா? ஆயுதக்காரனுகள் சுடுரல்லையா? ஒங்கட காலப்புடிச்சன் அய்யா. ஒங்கள நெனச்சுக் கதைச்சவருதான் அய்யா! புத்தி சொல்ற எண்டு.

"சரி சரி!! செத்துப் போனவர் போனவருதான். நாம அழுது புரண்டாலும் அவர் வரப்போறல்ல ஆகவேண்டியதுகளைப்பார்ப்போம்! இந்தாங்க ஒரு நூறு ரூபா இருக்கு. நானும் வந்த அலுவலப்பார்த்திட்டு சவப்பெட்டியும் எடுத்திட்டு ஓடி வாறன்." என்று புறப்பட்டேன்; 'கடவுள்தான்கா கூட்டிவந்து விட்ட மாதிரி' என்பது எனக்குக் கேட்கிறது ஒரு குரல். எனது கற்பனையும் நடந்தவையும் முப்பது ஆண்டு கால இடை நிகழ்வுகளையும் சைக்கிள் வேகத்தை விட மனோவேகமாய்க் கூட்டின. வாழ்க்கையில் எப்படியெல்லாம் வறுமையைப் பிடிவாதமாகப் பிடித்துக் கொண்டு கடவுளைக் குறை கூறுகின்றதோடு செய்வினை சூனியம் என்றெல்லாம் மூடச் செயல்களை நாடுகின்றதை மாற்றலாமா.?

முப்பது ஆண்டுக்கு முன்பு மட்டக்களப்பு வலையிறவு வவுணதீவுப் பாலம் போடவில்லை. படுவான் கரை மக்கள் படாதபாடுபட்டு தோணி, வள்ளம், ஊன்று பாதைகளில் பார்த்திருந்து, காத்திருந்து அக்கரை இக்கரை என்று சேர்வர். பட்டணத்து மக்களும் அப்படித்தான். அந்தக்காலத்தில் எல்லாம் ஏறுமாறாகப் போய்ச்சாவதுமுண்டு. எப்படியென்றாலும் மீன் வியாபாரி வேலன் மீன் நாறிப் போகும் என்பதால் இடம் பிடித்து விடுவான்.

மீன் வியாபாரத்தில் இரட்டிப்பான வியாபாரம். உன்னிச்சைக் குளத்துக்கு விடிவெள்ளி பார்த்து இருட்டோட முதலே பக்குஸ் பெட்டியைக் கட்டிக்கொண்டு ஓடுவான். செத்தல், விரால், கணையான், ஜப்பான் என்றெல்லாம் பலவகை. ஜப்பான் மீன் விசேடமாகப்பரவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம். மலிவாகவும் வாய்க்கு ருசியாகவும் இருந்தமையால் கூடுதலான விற்பனை. சைக்கிள் ஓடும்போதே பெட்டியிலிருந்து மீன் துள்ளித் துள்ளிப் பாய்ந்து தெருவோரத்துச் சனங்களுக்கு காசில்லாமல் கறியாவதும் உண்டு. வவுணதீவுப்பக்கம் தோணியிலே சைக்கிள்கள் ஏற்றப்பட்டிருந்தாலும் சிலதை இறக்கிவிட்டு வேலன் மீன் பெட்டிச் சைக்கிள் இடம்பிடித்து விடும். அக்கரை சேர்ந்து முகத்துவாரம் போகும் வரை குளத்து மீன் வியாபாரம் வேலனைப் பார்த்துக் காத்துக் கொண்டிருப்பர் மீன்வாங்குவோர்.

குளத்து மீன் வியாபாரம் முடிந்ததும் கடல் மீன் வியாபாரம் மாறிவிடும்! பெரும்பாலும் கீரி, சூடை மீன்கள்தான். தொண்டன் கீரியை கீரி என்றும் லாகனைச் சூடை என்றும் ஆட்களைப் பார்த்து வியாபாரம் செய்வதில் வேலன் கெட்டிக்காரன். எப்படியும் சாய் பொழுது மூன்று மணிக்கிடையில் அக்கரைப்பட முடிந்தால் வீடு திரும்புவது வழக்கம்.

எக்காலமும் ஒரு காலம் மாதிரி இருக்குமா? இரட்டிப்பான வியாபாரம். இரட்டிப்பான நாளாந்த உழைப்பு. காற்று மழை என்றால் அக்கரைப்படுவது தாமதமேற்பட்டு வியாபாரம் மந்தமாவதுமுண்டு. இத்தனைக்கும் வியாபாரத்திற்கு உயிர் நாடி சைக்கிள். மீன் பெட்டி கட்டி பிலால் நாற்றமடிப்பது போல் சைக்கிலும் மீன் நாற்றமே வீசும்.

தலையிலே அகலமான பன் தொப்பி. மடித்துக்கட்டிய சாறன். அரைக்கை சிலுக்கு வெனியன். வெற்றிலை குதப்பிய வாய். கையிலே பெரியதொரு கொண்டையுள்ள ஆணி. மடியிலே காசு வல்லுகம். வீடு திரும்பும் போது அரைப் போத்தல் சாராயம் இடையிடையே பிளேன் டீயும், வீடியும், இடம் வாய்க்கும் போது இரண்டு ட்றாம் சாராயமும் சீரணிப்புக்குள் சேர்ந்து விடும். நித்திரையிலும் வாய்புலம்பும் வியாபாரியாகினான் வேலன்.

கடல் மீன் கொண்டு திரும்பும் போது வேலன் வருகையை எதிர்பார்த்திருப்போருக்கு வேலன் வாய் ஸ்பீக்கராக மாறிவிடும். மீன் மீன்! கீரி ரூபா இருபதுக்கு எட்டு, இருபதுக்கு ஆறு சூடை ரூபா இருபதுக்குப் பதினைஞ்சு. பதினெட்டு என்றெல்லாம் பலவாறு. சைக்கிள் மணியை அடிப்பதற்குத்தான் கையில் ஆணி. இத்தகையவர்தான் இறந்து போன வேலன். சிலவாண்டுகள் ஓடிப்போக வேலனுக்கு அறிமுகமானோர், பழக்கமானோர் அநேகர். இந்த மீன் வியாபார நிலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணக்காரனாக்கக் கூடியது. ஆனால் வேலன் மட்டும் இரட்டிப்பான வியாபாரப் பணம் கூடினாலும் வாழ்க்கையை வறுமையாக்க வழிதேடிக் கொண்டான்.

வலையிறவுப் பாலம் அந்தா வரும் இந்தா வரும் என்றெல்லாம் அரசியல் கதை உலவிய காலம். மீன்கார வேலன் இடையிடையே தங்கல் போட வேண்டி ஏற்பட்டது. வியாபாரம் செய்வோர் பலரது வீடுகளிலும் நோட்டமிட்டுப் பலதும் அறிந்திருப்பர். ஆலையடிச் சோலையால் உச்சிப் பொழுதிலும் நடமாடப்பயந்திருந்த காலம். வலையிறவுத் தங்கல் ஒரு கைம் பெண்ணை மூன்று பெண் பிள்ளைகளுடன் குடும்பமாகச் செய்து விட்டது. ஊர் அறிந்த மாதிரியும் அறியாமலும் நிலைமை இருந்தது. ஆயித்திய மலையிலே ஏழெட்டுப்பிள்ளைகள் உள்ள குடும்பம். நல்ல வேளையாக மூத்த ஐந்தும் பெண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகள் என்றால் அடிபிடி நடக்கும். அத்தோடு உன்னிச்சைக் குளத்தோரக் குடும்பத்தோடும் சிலர் தொடர்பையும் வைத்திருந்தான் வேலன். காசுப்புழக்கம் கூடியதால் கண்கடை தெரியாத நடை கொண்டான். அதற்கேற்றாப் போல் வறுமைக்குள்ளான குடும்பங்கள் தொடர்புகளைக் கூட்டின.

சாராயம் வாங்கி வைத்திருந்து உபசரிக்கும் அனுபவசாலியான பெண் இருவருமாகக் குடித்து வெறித்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினர். இதனால் மீன் வியாபாரப் பணத்திற்கு முட்டுப்பாடு ஏற்படவும் இருந்த சில நகை நட்டுகளும் வட்டிக்கடைக்குப் போய் வட்டிகளைக் குட்டிகளாய்ப் போட்டன. வேலன் ஆணியால் மணியடித்துக் கொண்டு வந்த சைக்கிள் அலங்கோல நிலையானது.

சைக்கிள் பெடில் கட்டைகள் இல்லாத கம்பி. சீற்றிலே ஏதும் இல்லாத பீத்தல் சீலைத் துண்டுகள் சுற்றிய நிலை. சில்லுகளுக்கு மட்காட் ஏதுமில்லை. இப்படியான நிலையோடு காலிலே வாட்டாச் செருப்புமில்லை. காலிலே பிறேக் கம்பியமர்த்துவதால் பழஞ்செருப்பு என்றாலும் போடமுடியாத நிலைமைகள் இவற்றையெல்லாம் காட்டிச் சிலரிடம் உதவி பெறுவதும் உண்டு. இப்படியிருக்கையில் வலையிறவுப் பாலமும் கட்டுப்படலாயிற்று. செயல்வீரன் இராஜன் செயலாயிற்று.

பாலங்கட்டிய பின்பு, நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு போக்குவரத்துப் பண்ணும் போதே பலதும் பத்தும் பேசுவோம். பேச்சிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான நிகழ்வுகளைக் கூறுவான் வேலன். "நான் என்ன செய்யட்டும்? சைக்கிள் திருத்தினால் மீன் வாங்கக்காசில்லாமல் போகும். மூண்டு குடும்பம் ஐயா நான் என்ன செய்யட்டும் பெத்த புள்ளைகளையும் பொறா மக்களையும் சேர்த்து பதினாறு ஐயா! வாழப் போற குமருகளும் இருக்கு. அதில் ஒரு புள்ளையத்தானே உங்களுக்குத் தெரியும்."


"கூலிவேலை செய்து உழைக்கக் கூடிய பிள்ளைகள் இல்லையா? நல்லாக் குடிக்கிறாப் போலத் தெரியுது. பெரில்கட்டையில்லாத சைக்கிள் ஓட்டம் காலை புண்ணாக்கி விடுமே. சைக்கிள் ஓடியோடிக் கால் பெருத்துமிருக்கு சிரங்குகளுமிருக்கு. மிச்சம் கவனமாக இல்லாவிடில் ஏற்புவலியும் வரக்கூடும். முதலில் குடிக்கிற பழக்கத்தை விடவேணும்." நான் சொன்னதும் வேலனுக்கு வந்ததே கோபம்.

"ஏன் அய்யா? உத்தியோக ஆக்கள் குடிக்கிறல்லையா? படிச்சவங்க குடிக்கிறல்லையா? உங்களப்போல கவித பாட்டு எழுதுறவங்க எல்லாருந்தானே குடிக்கிறாங்க. எனக்கும் வாங்கித் தருவாங்க. நீங்க குடியாட்டிப் போங்க. குடிக்கிறபடியாத்தான் இந்த தொழில் செய்யிறன். ஏதுங் காசு பணத்தத் தராமப் புத்திமட்டும் சொல்றயளா?" என்று சம்பாஷனையுடன் பிரிந்த பின்பு அவன் இறந்து போனதை செய்வினை என்று கூறுகின்றார்களே! இப்படியெல்லாம் அறியாமையும் விதியென்று கூறி வேண்டும் என்ற செயலும், முறைகேடான நடத்தையும் நமது நாட்டில் இன்னும் இன்னும் நிலவுகின்றதே என்று எண்ணங் கொண்ட நான் எனது அலுவல் முடித்து சவப்பெட்டியுடன் வைத்தியசாலைக்குச் சென்றேன்.

மதிய வேளையாயிற்று. வேலனுக்காக பரிதாபப்பட்ட பலர் கூடிநின்றனர். வேலன் குடும்பம் மூன்றானபடியால் பெண்களின் வாய்த்தர்க்க சண்டைகளும் சேர்ந்து கொண்டன. ஓரளவில் சமாதானப்படுத்தி ஆகவேண்டிய கருமங்களை முடித்து, ஒரு உழவு மெசின் பெட்டியிலே வேலனின் இறுதிப் பயணம் ஏற்புவலி கொடுத்த சைக்கிளோடு சென்றது. வேலனே தேடிய வினை ஊரவர்க்குச் செய்வினையாயிற்று. நம்முடைய சனங்கள் என்றுதான் மாறப் போகிறார்களோ? மூடச்செயலை ஓடச்செய்வார்களோ? அவரவர் வினை செய்வினைதானே! என்றார் பக்கம் நின்ற ஒரு பெரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதைக்குள்ளே கதை

திருக்கார்த்திகை விளக்கீடு இந்துக்களுடைய வீடு வாசல்களையெல்லாம் ஒளிமயமாக்கி பூரண நிலவையும் இணைத்து பேரொளிமயமாக்கிக்கொண்டிருந்தது. இருட்டு வேளையென்றால்தான் திருட்டுத்தனமான வேலை செய்வோருக்கு ஒத்தாசையா யிருக்கும். நிலவொளி, மின்னொளி, விளக்கீட்டொளிகள் யாவும் வானை நோக்கிப் பிரகாசித்தன. இந்த பிரகாசமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்து முன்னிரவு தேவிகாவின் உள்ளத்திலும், இல்லத்திலும் இருள் இருளாக மண்டிக்கிடந்தன. பிள்ளைகள் வாசலில் தீபம் ஏற்ற முற்பட்ட போதும் இருள் மண்டிக்கிடந்த தேவிகாவின் உள்ளம் தடுத்து விட்டது. நடந்த செயலை மனம் தூண்டி விட்டது.

எட்டுப்பத்து பன்னிரண்டு வயது கொண்ட பெண் பிள்ளைகள் இந்த நிலைமைக்கு ஆக்கப்பட்ட துர்ப்பாக்கிய நிலையினைத் தாயார் நினைவூட்டி கண்ணீர் வடித்தாள். இரண்டாண்டுகளுக்கு முன்பு இப்படியான ஒரு விளக்கீட்டு வேளை நடுச்சாமத்திலே நடந்த வெடிகளின் ஓசை அயலிலுள்ள இராணுவ முகாமில் இருந்துதான் கேட்டது. விடிந்ததும் விடியாததுமாக சாறனோடு போவது மதிப்பில்லை என்று லோங்சையும் குளிருக்கான கறுப்பு நிறச் சேட்டையும் அணிந்து கொண்டு தேவிகாவிடம் சொன்னாலும் தடுத்து விடுவாளே என்று, பேசாமல் எழுந்து முகாமில் அருகில் உள்ள சந்திக்குச் சென்ற போது வெடிகள் ஓய்ந்திருந்தும் மீண்டும் இரண்டொரு வெடியோசை. அந்த வெடியோசை ஆராய்ந்து அறிந்து கொள்ளப் போன விதானையாரையே முட்டி மோதி உயிர் போகச் செய்து ஓய்ந்து நின்றது. அந்த வேளையில் அக்கம் பக்கத்தவர் அசுப்பேதும் காட்டாமல் அடங்கினர்.

"காத்தமுத்து ஜி.எஸ்! காத்தமுத்து ஜி.எஸ்!" என்று அழைத்து கலகலப்பாகப் பேசும் காக்கிச் சட்டைக்காரர் இரண்டு மொழிகளிலும் பேசிக் கொள்வது வழக்கம். தான் அறிந்தவர்கள் தானே என்ற எண்ணத்திலேதான் விதானையாரும் விசாரித்துப் பார்ப்போம் எனப் போனார் பழக்கப் பட்டதால்.

பொழுது உதயமாக முன்பே புலர்ந்து வரும் வேளையிலே இது நடந்து முடிந்து விட்டது. ஏழெட்டு வீடுகளுக்கு அப்பாலிருந்த விகாவும் எழுந்து கணவனைக்காணாமல் வழக்கம் போல போய் ாரித்து வருவாரென காத்திருந்தாள். அப்படி எதிர்பார்த்திருந்தவளுக்கு ிப்பொழுதிலேதான் சேதி அறிய முடிந்தது. அவ்வாறான சூழ்நிலைத் தொல்லைகள். கணவன் இறந்து ஈராண்டாகி விட்ட நிலையினை நினைந்தே விளக்கீடு ஒளியில்லாத வீடாயிற்றறு, அறிந்தவர்களும் நினைந்து வருந்தினர்.

அத்தகைய நிலைமை கொண்டவர். பண்பாடான குடும்பத்தில் வளந்தவர். பட்டணத்தை அடுத்த பிள்ளையாரடியில் நல்ல குடும்பத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயத்தில் இருந்தாலும் பிற சமயத்தை வெறுக்காது நேசித்தவர். இவ்வாறான காத்தமுத்து விதானையார் தமிழர் பண்பாடு பாழடையாத பழக்கவழக்கங்களையும் கொண்டவர். அதனால் வாழ்க்கைத் துணைவியான தேவிகாவும் படித்த பட்டணத்து நாகரீகம் எல்லாம் கைக்கொண்டிருந்தும் ஒத்துழைக்கும் துணைவியாக இருந்து வந்தாள். இதனால் மக்களும் கட்டுப்பாட்டுக்குள்ளாக்கப்பட்டனர். நாகரீகம் என்று பல பேர்களை வையாமல் செந்தமிழ் பேர்களையே பிள்ளைகளுக்கு வைத்தனர்.

வீட்டிலே பேசும் போது டடா, டடீ, மம்மி, அங்கிள், ஆண்ரி என்றெல்லாம் நாகரீக வார்த்தைகளைக் கையாளவிடவில்லை. சமயநெறிப்பழக்கங்களையும் பழகிக் கொள்ள ஆவன செய்தவர். ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில் அக்கம் பக்கம் வசிப்பது. பிள்ளைகளின் படிப்பிற்கும் பண்பாட்டிற்கும் வசதியாகுமென்றே ஊறணி வீடு வாசலை விட்டு ஆனைப்பந்தி மகளிர் வித்தியாலயத்திற்கு அண்மையிலே வாடகைக்கு வீடெடுத்து வாழ்ந்து வந்தனர்.

காத்தமுத்து விதானையார் பட்டணத்து அதிகாரிகளையெல்லாம் ஓரளவு அறிமுகம் கொண்டு அலுவல்களை முடித்துவருபவர். எவருக்கும் முன் சென்று உதவிகளைச் செய்வதில் முன்னோடியானவர். நாட்டிலே நடக்கிற வன்செயல் நிலைமைகளால் நமதினம் பாதிப்புற்று வருதல் கவலை கொடுத்ததால் தமக்கு இயன்ற அளவில் ஏழை எளியவருக்கு உதவி செய்யும் இயல்புடையவர். இத்தகையவருக்கு இப்படியாக நடக்கும் என்று யார் அறிவார் என்று அறிந்தவர்கள் கூட வருந்தினர். அழுது கண்ணீர் சிந்தினர்.

விடிந்தெழுந்ததும் தேவிகா மலர்களைக் கொண்டு சுவாமி படங்களுக்கு வைத்து கணவனது படங்களுக்கும் வைத்து கண் கலங்கி மேலும் தான் நடந்து கொண்ட நடத்தைகளையும் எண்ணி வருந்தினாள். மக்களை பாடசாலைக்கு போகச் செய்து விட்டு தனது வயிற்றிலே நாலாம் பிள்ளை ஒன்று உதயமாகியிருப்பதை, கணவனது ஆத்மா மன்னிக்குமா என்று மனவேதனைப்பட்டாள்.

நாலாம் பிள்ளைக்குத் தந்தையான வைரமுத்து காலையில் எழுந்ததும் மைத்துனியின் கவலைக்குறி கண்டு பேசிவிட்டு "நம்மட அரசியல்வாதிகள்ற செயலாலதானே இதுகள் எல்லாம் நடக்குது. எத்தின

10620



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் போச்சி, ஊடுவாசல் போச்சி, நகநட்டுகள் போச்சி, நாணயம் போச்சி இப்ப களவோட கற்பழிப்பும் கூடிப் போச்சி. இதுகளக்கண்டு இயற்கையான காலமும் மாறிப் போச்சி. செய்த வெள்ளாமை எல்லாம் தீஞ்சு போச்சி என்னசெய்யலாம்? நானும் வயலப் பார்த்திட்டு வாறன். அண்ணன் போன கவல உனக்கு மட்டுமா? அதலெல்லாம் உட்டுப்போட்டு குமராப்போற பிள்ளைகள நல்லாப் பார்க்க வேணும் என்று கூறி போனார்.

போன பின் சிறிது நேரத்தால் யாருடைய சத்தமோ கேட்டது. காலைப் பொழுதாய் இருந்தாலும் சூரியன் உச்சிப்பொழுது சூட்டையே கக்கிக்கொண்டிருந்தது. சவூதிக்குப் போன ஊறணிச் சின்னத்தம்பி அரக்கைச் சேட்டோடும் மடித்துக்கட்டிய வர்ணக்கோட்டுச் சாறனோடும் தேவிகாவின் வீட்டு வாசலில் நின்று கொண்டு சத்தமிட்டான்.

அம்மா! அம்மா! விதானையார் அம்மா! நேத்துத்தான் வந்தனான்கா சவூதியால. பலதும் பத்தும் கேள்விப்பட்டன். உங்களிட்டக்கிடந்து ஊழியஞ்செய்த என்ன ஊரோடச்சொன்னாங்களே என்னகா பேசிராஸ்ல! அப்போது வீட்டு வேலையிலிருந்த தேவிகா வெளியால வந்து "ஆரிராப்பா இது சின்னத்தம்பியாடா? நேத்தா வந்தனி? விதானையாரைய்யா காலஞ்சென்று போனத அறிந்துதானே இருப்பா".

என்னகா பின்ன இந்த விதானையார அறியாமல் இருப்பனா பின்ன? புத்தி மதியெல்லாம் சொல்லி சோம்பேறியில்லாம ஒரு உழைப்பாளி ஆக்கினவர் அலுவா? மற்றெல்லாரையும் போலவா நம்மட விதானையாரு?

"என்னடா செய்வம் சின்னத்தம்பி அய்யாவுக்கு நாப்பது வயசும் ஆகல்ல குமராப்போற பிள்ளைகள் மூன்றோட என்ன விட்டிற்றுப் போய்த்தாரே! போக வைச்சிப்போட்டானுகளே!. என்னண்டாலும் சத்தம் கேட்ட உடனே ஆருக்கு என்று பார்க்காமல் உதவி செய்யத்தான் ஓடிற. வெடிச்சத்தம் கேட்டாலும் அவருக்குப்பயமில்ல றவூண்டப்பண்ணினாலும் புடிச்சிப்போற ஆக்களச் சொல்லி விலக்கிப போடுவார். நம்மடையவனுகளப் போட்டு அடிச்சி உதச்சி சித்திரவத செய்ய விடமாட்டார். அண்டைக்கும் வெடிச்சத்தம் கேட்ட என்னெண்டு அறியத்தானே விடிஞ்சி வாற பொழுதில பார்க்கப்போனவரு. நல்லா விடியல்ல எனக்கிட்ட எழுப்பிச் சொல்லாம போயித்தாரு. ஊட்டுக்குப்பக்கத்தில நடந்த செய்தி உச்சிப் பொழுதாகிற நேரந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தெரிந்துதடா சின்னத் தம்பி. அப்படியான காலம் இந்தா இரண்டு வருஷம் ஓடிப் போச்சி............" என்றெல்லாம் சொல்லும் போது தேவிகாவின் உடலைப் பார்த்து சின்னத்தம்பி முகத்தில் சந்தேகம் தோன்றியது.

"என்னகா இரண்டு வருஷமா போய்த்தா நான் சவூதிக்குப் போய் இரண்டு வருசத்துக்கும் கூட........."

காலம் இப்படியெல்லாம் ஓடிப் போகுதுடா எனக்கு கவலையும் கூடி வருகுதுடா.

"என்ன கவலகா கூடி வாற ஏன்கா நீ இப்ப ஒரு மாதிரியாப் போனா? அசிப்பில்லாம அல்லுத்தொல்லில்லாம ஊறணியில் இருந்த உனக்கு என்னகா நடந்தது? கோடேறையும் வச்சிப்போட்டாங்களாமே" என்று தேவிகாவின் வயிற்றை குறியிட்டுக் கொண்டே வினவினான் சின்னத்தம்பி.

"அடா நீ ஒன்டும் தெரியாமக்கதைக்கிறாடா. நான்தான்டா கோட்டுக்கு நீதி நியாயம் கேட்டுப் போனனான். எத்தின நாளைக்கு பொம்பிளை எண்டாப்போல பொறுமையா இருக்கிற."

"அது சரிதான்கா நாலு சனத்திர வாயில வாறத்த எல்லாம் நாம எப்படிகா அடக்கிற ஊர்வாய மூட உல மூடி இருக்காகா?".

"ஊர் வாய மூட உல மூடி போடத்தாண்டா போறன். இருந்து பாரன். குமராப் போகப்போற பிள்ளைகளெல்லாம் வைச்சிற்று அலுப்பில்லாம அல்லுத் தொல்லில்ாமத்தாண்டா இருந்தனான். இப்பத்தைய காலத்தப்பாத்து நடக்க வேணும் இல்லையா?. காலம் கெட்டுப் போச்சி கற்பழிப்பு கூடிப்போச்சி உனக்கென்னடா தெரியும் ஊரோடி!. காலத்த பார்த்து நடக்க வேணும்."

"காலத்துக்கு தக்கதாக நடக்கத்தான்கா வேணும்". "அடிக்கிற கச்சான் காத்தில பறக்கிற கடுதாசி" மாதிரி நாமளும் நடக்கத்தானேகா வேணும் எண்டு நானும் கப்பலில பறந்தன். சவூதிக்குப் போனன் காசி காசெண்டு அனுப்பினன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காசிகாசெண்டா காசி. இஞ்ச இருந்தே நாலஞ்சி பங்கு உழைக்கிறானுகள் அவனுகளுக்கெல்லாம் வாச்சிப் போச்சி. நமக்குத்தான் கஸ்ரம். நம்மளக் காத்தவரு காத்தமுத்து விதானையாரு. ஊரையும் காத்தவருதான். ஊரவனுக்கெல்லாம் ஓடி ஓடி என்னத்தக்கண்டாரு பாத்தயா? சாகிற வயசா தம்பிக்காரன் வயிரமுத்து மச்சான்ட உதவி எனக்கு தேவைப்பட்டுது."

"பொறங்கா கொஞ்சம் நான் சொல்லி முடிக்கல்ல அதுக்குள்ள நீயும் அவசரப்படுறா நீ சொல்லிறாப்போல காசி காசெண்டு அனுப்பினனா? ஊடும் கட்டெல்ல அத்திவாரம் போட்டாப்போல கிடக்கு மனிசி படிக்கிற பொடியன் ஒருவனோட ஓடிப்போயிற்றாளாம் அவனுக்கு மீசையும் முளைக்கல்லையாமேகா"

"அப்ப மீச மொளைக்க முன்பு ஆச மொளைச்சிட்டாக்கும் இப்ப எல்லாம் முந்தி நடக்குதடா நானும் கேள்விப்பட்டதான் இதற் கெல்லாம் உலக அனுபவம் தேவடா. நானும் கோடேறின அதால தானே."

"அதாலதான் கோடேறினதாகா? நீயெண்டா நல்லாப்படிச்சனிகா நானென்ன நல்லாப்படிச்சதா? கையெழுத்துப் போடத் தெரியாது. இப்ப பேர் மட்டும் எழுத விதானையார் தான் பழக்கினவரு அதையும் மறந்தாப் போல கெடக்கு .ஆரிட்டையும் சொல்லி எழுதிற காயிதத்த அந்த பொடியன்தான் வாசிச்சிக் காட்டிறதாம். எட்டாம் வகுப்பிலதான் படிக்கிறவனாம்கா. அவன எண்ட மனிசிதான் கூட்டிட்டு ஓடிற்றாளாம். எங்கெண்டு தெரியா. அவனுக்கென்ன பதினாலு வயசு தானாமே ஒனக்கிட்ட வந்தனான்கா புத்திமதி கேக்க அதற்கிடையில ஓங்கட வீட்டிலையும்........"

"பதினாலு வயசு பருவ கால ஆரம்ப கால வயசுடா, படிக்கிறாப்ப படிச்சி பத்து வயசிலயும் புள்ளப்பெத்த கதையெல்லாம் பேப்பரில வந்து படிச்சனான்தாண்டா. அதெல்லாம் அறிஞ்சநான் இப்ப பென்சனும் இல்லாம இருக்கிறன்டா! அதுதாண்டா சின்னத்தம்பி நானும் உட்ட தவறு. குமராப்போற பொம்பளப் பிள்ளையளோட தனியா இருக்காம உதவி தேடினன். நாலாம் பிள்ளையெண்டான ஆம்பிளப்பிள்ள பொறக்கட்டும் எண்டு கவலப்பட்டு காத்த முத்தரும் காத்திருந்தவரு. அந்தக் கடமைக்கு தம்பிக்காரன் மச்சான் வைரமுத்து என் ஆசைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பட்டு பணம் பொருள் பண்டத்துக்கும் ஆசப்பட்டாரு எப்படியெண்டாலும் மனம் ரெண்டும் ஒன்டு பட்ட மாதிரித்தான். நானும் ஆசப்பட்டிட்டன் போகப் போகத்தான் தெரியும். வாழ்க்கையில நடுத்தரமான வயசுடா. இருந்தாலும் விதானையாரிட்ட சட்டதிட்டமெல்லாம் அறிஞ்ச நானே பிளஉட்டிட்டனே புதினமாப் போச்சு......."

"என்னகா பெரிய புதினம்? பென்சன் காசிற்கும் இதுக்கும் என்னகா சம்பந்தம்.. புருசன் செத்தபிறகு வேற கல்யாணம் முடிக்கிறாங்கதானே"

"நான் கல்யாணம் முடிச்சாலும் அவருக்குப்பொறந்த புள்ளைகள் மூன்டுக்கும் பென்சன் இல்லாமல் போக விடுவனா? அதுதான்டா கோட்டுக்குப் போனனான். நீயும் ஒருமாதிரி பார்க்கிறா. ஏழெட்டு மாசமாக இந்த வயித்த கண்டவளுகளிற வாய் சும்மா இருக்குமா? மாப்பிள கொள்ளிகள் கதைச்சிக்கதைச்சி பென்சன நிப்பாட்ட வச்சிப் போட்டாளுகள்."

"இப்ப எண்ட பாடும் கோட்டுக்குப் போற துண்டா போச்சிகா அவன் மைனர் புள்ளையாம் எண்டாலும் நான்தான் புள்ள பொறந்தா செலவு கட்ட வேணுமாம் . நான் கலியாணம் முடிச்சி அஞ்சாறு நாள் கூட அவளோட இருக்கல்லையே மூணாம் நாத்து சவூதிக்கு ஓடிப் பொயித்தன். இப்ப என்னகா செய்யிற வழக்குப் போடலாமா?"

"நீ வழக்குப் போடத் தேவையில்ல சின்னத்தம்பி. பொடியன்ர தாய் தகப்பன் சும்மா இருப்பாங்களா. வழக்காடுவாங்க இல்லாட்டி பொலிசி வழக்குப் போடும். இதெல்லாம் நீ உட்ட பிளதாண்டா. நீ ரெண்டு வருஷமா போய் கெடந்தா அவளுக்கும் ஆச இருக்குந் தாண்டா. அதுவும் வயித்துப் பசி போலதாண்டா."

"இந்தா பாரன் நானும் அதாலதானே பட்டுக்கெடக்கிறன். வயித்துப்பசியை மிஞ்சினதுடா இந்தப்பசி. இந்த வயிறுதாண்டா ரெண்டையும் காட்டிக் குடுக்குது. கடுமையா சாப்பிட்டாலும் காட்டுது. கருவில புள்ள உண்டாகினாலும் காட்டுது. இந்தா என்னப் போல என்று வயித்தை தொட்டுக் காட்டினாள்.."

"சின்னத்தம்பியும் புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டு நானும் வந்த உடனே கண்டு ஜமிச்சம் கொண்டனான்தாங்கா வெக்கத்தில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேக்கப்படாதெண்டு இருந்தனான்தான்கா. மனுசன்ட வாழ்க்கை எப்பிடியெல்லாம் போகுது" என்று வெட்கப்பட்டனான்தான்.

"இதில என்னதாண்டா வெக்கம் இப்படியான கதைகளெல்லாம் கேக்க வேணும். கதையோட கதையாக ஒன்றிரெண்டு சொல்லிறன் கேளு. இதுகளையெல்லாம் கேட்டு படிப்பினை கொள்ளு. நல்லாக்கேழு. விளக்கமாகச் சொல்ல ஏலா. ஓரளவாச் சொல்லிறன். இந்தப்பசீ ஆக்களப் போட்டு ஆட்டிறடா. ஆம்பிளப்புள்ள ஆச பொம்பிளப்பிள்ள ஆச என்றெல்லாம் சொல்லிற சும்மா பேருக்கிடா. ஆம்பளப்புள்ள பொறக்கிதோ பொம்பளப்புள்ள பொறக்கிதோ ஆரு கண்டா. அப்படியெல்லாம் சொல்லிற சாட்டுக்கிடா. அதுக்கெல்லாம் மூல காரணம் ஆசதாண்டா. வாற ஆக்களெல்லாம் என்ர வயித்தத்தான் பார்க்கிற. உன்ட பொஞ்சாதிக்கும் வயிறு காட்டிக் கொடுத்தாத்தான் உனக்குக்கஸ்ரம். அப்பிடி இல்லாட்டி நீ கோட்டால தப்புவா."

"என்னகா கத ஒண்டிரெண்டு சொல்லிற எண்டு போட்டு சொல்லலல்லயே. புத்திவாற கதையெண்டா சொல்லன்".

இப்படியான கதையெல்லாம் கண்டபடி சொல்ல முடியாடா அனுபவத்தாலதாண்டா அறிய வேணும். அதுக்கொரு பாட்டு படிச்சறிஞ்சன் நம்மடையவன் பாட்டு .

"அப்பா தப்பா அறிவோம் எப்போ
அப்பாவாகி அறிவோம் அப்போ"

பாத்தையாடா என்ன தத்துவமான பாட்டிடா. அப்படியாக அப்பாட தப்பு அம்மாட தப்பெல்லாம் புள்ளப்பருவத்தில தெரியாது. நானெடுத்த கதையை சுருக்கமாக சொல்லிறேன். பத்திரிகையில எல்லாம் நாளாந்தம் வந்துகொண்டிருக்கிற கததாண்டா. இந்தக் காலத்தில ரீ.வீக்காட்சியெல்லாம் இப்படியான செயலுக்கு தூண்டுகோல்தாண்டா. குமர்ப்புள்ளையுடைய அம்மா ரீ.வீப் படத்தப்பார்த்து அண்டு ராவெல்லாம் பட்ட வேதனை ஒரு கதை. இதே போல இன்னொரு கதை.

ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்களைப்பார்க்க கூடுதலாகப் பெண்களைப் பற்றிப் பெருகும் கதை. ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டருடைய மனிசி அவர் உறவிற்கு இடம் கொடாமல் தனது கந்தோர் சகபாடிப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களோடு உறவாடி நடந்துவரும் வேளை அவவுடைய கூட்டாளிக்கு நாங்க பேசின, காட்டிக் கொடுத்த வயிறுமாதிரி உண்டாகிற்றாம். இதனுடைய மார்மம் என்ன? அவவுடைய கணவராலே கூட்டாளியின் அந்தரங்கத்தை வயிறு காட்டிக்கொடுக்காது மர்மமாயுள்ளது. இப்படியானவற்றையெல்லாம் மேலும் விளக்கிச்சொல்ல முடியாது நாமெல்லாம் பட்டுத்தேறினம். கதைக்குள்ள கதையாக புத்தி சொல்லத்தான் வேணும். வந்தநீ மத்தியானம் சாப்பிட்டிற்றுப்போ மற்றதெல்லாம் புறகு ஒருநாளைக்குச் சொல்லிறன் என்று உரையாடலை முடித்தாள். சின்னத்தம்பியும் தொடந்த சிந்தனையோடு மௌனமானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பக்தியும் சித்தியும்

மாணிக்க கங்கை நுரை கக்கிக் கொண்டு "சல சல"த்து ஓடிக்கொண்டிருக்கிறது. மேலே இரண்டு பாலங்கள். இக்காலம், உற்சவகால்மாதலால் சனநெருக்கடி பக்தர்கள் கூட்டம் பாலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

பாலத்தின் மேலிருந்து கீழே பார்த்தால் நீராடிக் கொண்டிருக்கும் பலவின மக்களைப் பார்க்கலாம். பெரியவர்களால் "சுவாமி அரோஹரா! அப்பனே முருகா!! முருகனுக்கு அரோஹரா கதிர்காமத்தையனுக்கு அரோஹரா" என்றெல்லாம் ஓசையொலிகள் பெருக்கெடுக்கும். பிள்ளைகளும் விளையாடி விளையாடிக் குளிப்பர். அவர்களோடு போட்டிபோட்டு மீன்களும் துள்ளி விளையாடும். பார்ப்போருக்கு வேடிக்கையாகவும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டை முடிச்சுக்களோடு ''அரோஹரா! அரோஹரா!'' எனக்கோசமிட்டபடி செல்லும் பக்த்தர்களோடு ஒருவராக கருணாகர முதலாளி போய்க்கொண்டிருக்கிறார். பாலத்தின் அந்தத்தில் கங்கைக்கரையை அண்மித்ததும் திகைப்புற்றபடியே இறங்கு படிக்கட்டுகளில் முட்டிமோதிக்கொண்டு நிற்கின்றார்.

அங்கே கங்கைக்கரையில் வீட்டு வேலைக்காரன் கதிரவேலன் நீராடிக்கொண்டு கையிலே தேங்காயுடன் கோயிலை நாடிச் செல்ல, எத்தனிப்பது தெரிகிறது. கண்களைக்கசக்கிக் கொண்டு மீண்டும் பார்க்கிறார்.

“அ...ட! இவன் எப்படி இங்க வந்தான்? அதுவும் எனக்கு முந்தி எப்படித்தான் வரமுடியும்? மாறி மாறி வாகனம் ஏறி வந்த எனக்கே ரெண்டு நாளாப் போச்சி. சேச்சே! அவன்தானா? அவனாக இருக்க மாட்டான். இது வேறாரோ! எண்டாலும் கூட கூப்பிட்டுத்தான் பார்ப்பமே என்று எண்ணிக் கொண்டு மனம் குளம்பியவர், கதிரவேல்! கதிரவேல்!! கதிரவேல்!!! என்று கத்துகிறார்.

பக்தியால் கத்துகிறார் என்று எண்ணிக்கொண்டனர் கூடச்சென்ற பக்தர்கள். வேலைக்கார கதிரவேலுக்கு இச்சத்தம் கேட்கவில்லை. கேட்டாலும் அவனுடைய உண்மையான பக்தி ஆவேசத்தில் கவனித்திருக்க மாட்டான். நீராடி நடுக்கத்தோடு போய்க்கொண்டிருந்தான்.

கந்தப்பெருமானே! கதிர்காமத்து முருகா!! இவனநம்பித்தானே ஊட்ட உட்டுட்டுவந்தனான். வழக்கம் போல “அடுத்தவருஷம் போகலாம், அடுத்த வருஷம் போகலாம் எணடு சொல்லி நிப்பாட்டித்தானே வந்தனான், ஆறேழு வருஷமாக இப்படித்தானே சொல்லக்கேட்டு நடந்தவன். கடவுளே! ஊட்டில பொண்டாட்டிமாருக்கு ஆரு துணையோ? நகநட்டு காசுபணம் எல்லாத்துக்கும் யாரு காவலோ? அப்பனே முருகா“ என்றெல்லாம் வாய்க்குள்ளே முணுமுணுத்துக்கொண்டே கூட்டத்தோடு நடக்கிறார்.

கருணாகரன் முதலாளி மட்டக்களப்பிலே பகட்டுக்காட்டாத பெரிய பணக்காரன். ஐந்தாறு கடைகளைக்கட்டி வாடகைக்குக் கொடுத்துச் சிறிய ஒரு கடையைப் பழையபடி நடத்திக் கொண்டு வந்தார். பலவழிகளாலும் வருமானத்தைக் கூட்டிக்கொண்டே வந்தார். நல்ல மூளைசாலி.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பாரைப் போன்று வேளாண்மைச் செய்கையிலே அதிக நாட்டம் செலுத்தவில்லை. "செட்டிக்கு வேளாண்மை சென்மப்பகை" என்பதை வலியுறுத்திக் கொண்ட வியாபாரி ஆனார். வேளாண்மைச்செய்கை நன்கு அறிந்தவர். அதில் ஈடுபடவில்லை. வேளாண்மை செய்வோருக்கு வட்டிக்குப்பணம் கொடுத்து உதவி என்றவகையில் நல்ல பெயர் எடுப்பார்.

நெல்லைக் கொள்வனவு செய்வார். அரிசியாக்கி மூடைகளை விலை கூடும் வரை அடுக்கி வைப்பார். ஒற்றை மாட்டு வண்டி ஒன்றையும் வைத்து பட்டணத்திலே கூலி வேலைக்கும் விடுவார். விசேடமாக அந்த மாட்டு வண்டிக்காரன்தான் கதிரவேலன். வீட்டு வேலைகளையும் செய்வான் நம்பிக்கையான உள்வீட்டு வேலைகளையும் செய்வான். நம்பிக்கையான உள்வீட்டுப்பிள்ளை போன்று ஆறேழு ஆண்டுகளாக நடந்து வந்தான்.

கருணாகரன் முதலாளி மூளைசாலியானதோடு கடும் உழைப்பாளியும் கூட. கதிரவேலனோடு வேலைக்காரன் போன்றும் வேலை செய்வார். கதிரவேலன் மட்டக்களப்பிற்கு வந்த அயலூரவனாவான். "வந்தான் வரத்தான்" என்ற அவனைத்தனக்குத் துணையாக்கிக் கொண்டார்.

கதிரவேலன் வேலைக்கு வர முன்பே கட்டிய மனைவியின் சகோதரியையும் வீட்டிலே வேலைக்குதவியாக வைத்திருந்தார். அவளும் பருவமடைந்த பெண்ணாகி திருமணச் சுவையால் வாயூறிக் கொண்டவளாயிருந்தாள். கதிரவேலன் கட்டுமஸ்தான தேகமும் நம்பிக்கையான நடத்தையும் அவளைக்கனவுலகில் சீவிக்கவும் வைத்தன. அதே வேளை "மூத்த மச்சாளான மூத்தம்மாதான் போனாலும் இளைய மச்சாளான செல்லம்மா இருக்கிறாள்தானே" என்று எண்ணிக்கொண்டு நடக்கும் இராசதுரையும் நடந்து வந்தான்.

கதிரவேலன் ஒரு சில வேளைகளில் செல்லம்மாவின் நடத்தையால் தடுமாறுவான். கருணாகரன் முதலாளியும் அடிக்கடி இச்சையூட்டி நடத்துவதும் அவன் மனதில் ஒரு மூலையில் இருக்கத்தான் செய்தது. இதனால் கதிரவேலன் உழைப்பிலே உற்சாகமாக ஒத்துழைத்தான். தானும் ஒரு யாழ்ப்பாணத்தாரின் கடையில் நின்றே அவர்களின் பண்பாட்டால் முன்னேறி முதலாளியாகியிருக்கிறேன் என்றெல்லாம் சொன்னதைப் புத்திமதியாகக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாகரன் முதலாளி பெரிய கடையொன்று வைத்து நடத்தாமல் சிறிய ஒரு தேநீர்க்கடையை இரகசியமான சாராய விற்பனையோடு நடத்திக்கொண்டே வந்தார். இதற்கு கதிரவேலன் செயலே மூலகாரணமாய் அமைந்து கொண்டன. இத்தகைய நிலையிலே பத்தெட்டு ஆண்டிலும் புத்திரப்பேறில்லாத கவலைதான் கருணாகரத்தார்க்கு மனதைக் குடைந்து கொண்டிருந்தது. இராசதுரையெனும் மச்சான்காரனும் “அட்டங்காத்து”த்திரியிறான் அவன் நமக்குள்ள வந்தாலெண்டா நமக்குச் சரிப்பட்டு வராது என்ற எண்ணமெல்லாம் இடையிடையே இடித்துக்கொண்டிருந்து மனந்தெளிந்த ஒரு முடிவுக்கு வந்தார்.

செல்லம்மாவை இளையமனைவியாக்கிக் கொள்ளத் திட்டமிட்டு முத்தம்மாவைப் பல காரணங்கள் கூறி கைக்குள் போட்டுக் கொண்டார். மூளைசாலியான கருணாகரன் காரணம் பல காட்டினார். வேறு யாருக்கும் சீதனம் கொடுத்து ஆதனம் கூறு போடுவதாலும், இராசதுரையன் சில வேளை எதுவும் செய்யக்கூடிய காவாலி என்பதாலுமே முத்தம்மா மூத்தமனைவியாகிக் கொண்டாள். “தங்கச்சிக்காவது புள்ளையள் புறக்கட்டும்” என்று எண்ணிக்கொண்டாள். ஆனால் வெளியில் எவருக்குமே தெரியாத செயல்திட்டம் கொண்டனர். இந்த ஆண்டிலே எப்படியும் செல்லம்மாவுக்குக் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை கொண்ட கருணாகரன், கதிரவேலனை இந்த வகையிலும் ஏமாற்றி விட்டார். கதிரவேலன் இதை அறியாமலேதான் நடந்து கொண்டான்.

வீட்டுச் சாப்பாடு, வீட்டிலே ஒருபுறம் தனியறை, கதிரவேலன் பக்கத்துணையானபடியால் கருணாகரத்தார்க்கு இராசதுரை போன்றோரின் இடையூறு ஏற்படாமல் இருந்து வந்தது. கதிரவேலனை நம்பியே ஆண்டுக்காண்டு கதிர்காம உற்சவத்தின் போது கருணாகரமுதலாளி கதிர்காமம் போய் வருவது வழக்கம்.

கருணாகர முதலாளி நல்லவர் போல் தென்பட்டாலும் கருணை உள்ளங்கொண்டு ஏழைகளுக்கு இரங்குவதில்லை. கோயில் பூசை திருவிழாக்களை ஆடம்பரமாகச் செய்துகொண்டு வருவார். அடிக்கடி “ஆண்டவன் கொடுத்த பணம்பொருள்தானே என்று பகட்டுக்காட்டிப் பேசிக்கொள்வார்” ”ஈயாப்பிசினி எச்சிற் கையால் காகம் துரத்தமாட்டார்.” என்பதை மூத்தமனைவி முத்தம்மா நன்கறிவாள். இப்போது இளைய மனைவியும் அறிந்து கொண்டு வந்தாள். கதிர்காமம் போக இவர்களுக்கெல்லாம் ஆசைதான். காட்டிக்கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த வருசம் நானும் வாறன் முதலாளி" என்று கதிரவேல் கேட்டதிற்கு வழக்கம்போலே சொல்லுவது போல்ச்சொல்லி "இந்த வருசமாவது ஒரு புள்ள புறந்தது எண்டால் அடுத்த வருசம் நீ மட்டும் சந்தோசமாகப் போயிட்டு வாவன்! இந்த வருசம் ஊட்டில நில்லு; நான் என்ன நேத்திக்கடனுக்குப் போறன். நாலு நாள் தூரம். மற்ற ஆக்களைப்போல அஞ்சாறு நாள் நிற்கமாட்டன் சாமி தீத்தம் ஆடினாலும் ஆடாட்டியும் நான் நாலம் நாள் இஞ்ச நிப்பன்" என்று பலவாறு சொல்லி புறப்பட்டவர்தான் கதிரவேலைக்கண்டார்.எப்படி கதிரவேலன் கதிர்காமம் போனான் கவலைப்பட்டவன் சிந்தனையை ஓட விட்டான் .ஆறேழு ஆண்டுகள் அந்தக் குடும்பத்தை நன்கு அறிந்தவன்தானே நடந்தவை சில முன்னே வந்தன மனதில்.

பெரியஅம்மா சின்னஅம்மா ரெண்டுபேரில ஒரு ஆளையெண்டான கூட்டிப்போற இல்லையா? புள்ள வரங்கேட்கிறவரு பொஞ்சாதியையும் கூட்டித்தானே போகணும், "பெரியம்மாவத் தவற உட்டிட்டன் சின்னம்மாவக் கவனிக்கப்போறன் என்டெல்லாம் மச்சான் உரிமை கொண்டாடுறான் இராசதுரையன். எனக்காகத்தான் இராசதுரை பாத்துப்பாத்து வாறானாம். செல்லம்மாவைக்கூட்டிட்டு எங்கெண்டான ஓடப்போறன் நீ தடையாக இருக்கப்படா! அண்டைக்குகொருநாள் கதிர்காமம் எப்பபோறாரு என்டெல்லாம் விசாரிச்சானே! என்ன செய்யப்போறானோ? அவன்ட கூட்டாளிமாரும் கெட்டவனுகள் இந்த எண்ணமெல்லாம் சுற்றிச்சுற்றிவரக் கதிர்காமம் போகத்துணிந்தவனானான்.

"பெரியம்மா சின்னம்மா ரெண்டுபேருக்கும் முன்னால நான் சொலறன். நீங்க கோபிக்கப்படாது முதலாளி உங்களையும் ஏமாத்தி என்னையும் ஏமாத்திக் கொண்டுவாறாரு உங்கட மச்சான் இராசதுரையன் சொல்றதும் சரிதான், நம்மையெல்லாம் ஒரு நாளும் கூட்டிப்போகமாட்டாரு இந்த வருசம் சாமி என்னையும் அழைக்கிறாரு இனி என்னால நிற்க ஏலா காலால நடந்தெண்டான கதிர்காமம் போகத்தான் போறன். இன்டைக்கு செய்யிற வேலையெல்லாம் செய்து போட்டு விடியச்சாமம் வெளிக்கிட்டுப் போயிருவன். என்னில குத்தம் சொல்லாதங்க! நான் பேசாமப் போகல்ல சொல்லிப்போட்டே போகப்போறன் என்று வேண்டியதைச் செல்லிவிட்டு சாய்பொழுதில் வண்டி மாட்டை தேடிப்போனான். வண்டிமாட்டைக் கண்டு கொள்ளவில்லை மாட்டைக்காணல்லை நான் போயிட்டுவந்து மாடுவராட்டித் தேடிப்புடிச்சித் தாறன்" எனச் சொல்லிக்கொண்டு இராசதுரையனிடம் மாட்டைவிசாரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமம் போறதையும் சொல்லிவிட்டான் கதிரவேலன். அறியாமையாலே அவசரப்புத்தி.

கதிரவேலன் அன்றிரவு நித்திரையே கொள்ளவில்லை. மாட்டையும் கண்டுபிடித்துக் கொண்டு கட்டவில்லை. போகத்துணிந்த கதிர்காம யாத்திரை கவலையைக் கொடுத்ததாலும் வீட்டிலிருந்த உண்டியலை உடைத்துச் சில்லறைகளைக் கூட்டிப்பார்த்தான் நூறுருபாவுக்கும் குறைவாகவே இருந்தது.

"பிச்சையெடுத்தெண்டாலும் கதிர்காமம் போகப்போறன்" எனத் துணிவு கொண்டான் விடிநிலவில்லாத பூரணைக்கு முந்திய தினம் நிலவுபடும் வேளையிலே அரசடிக் கோவில் சென்று வாசலிலே தேங்காய் உடைத்துவிட்டு காவிஉடையோடு அரோஹரா! கதிர்காமக்கந்தனுக்கு அரோஹரா!!எனவாய்விட்டு அலறிக்கொண்டுகல்முனை வழியாகப் புறப்பட்டுப்போனான்.

மதியப்பொழுது ஆகும் வேளை கல்முனையை அண்மித்துக்கொண்டான். காலிலே செருப்புமில்லை "ஆ ஊ" என்றெல்லாம் ஆரோஹரா ஓசையோடு கலக்க வெயர்த்து விருவிருவென அந்தப்பக்கம் இந்தப்பக்கம் என்று ஓடியோடி நடந்தான். பாண்டிருப்புத்துரோபதையம்மன் கோவிலை முன்னமே கேட்டிருந்தவன் போய்த்திரும்ப எத்தனிக்க, பின்னாலே வந்து கொண்டிருந்த வாகனத்தில் ஓருகனவானும் அம்மையாரும் தமது மோட்டார் வண்டியிலே அழைத்து, விசாரித்து ஏற்றிக்கொண்டனர்.

கல்முனைச்சந்தியிலே கொடிய வெயிலென்றும் பாராத சரியான சனக்கூட்டம். அதற்குள்ளும் இளங்கன்று தாய்ப்பசுவோடு வாளி பாய்ந்து துள்ளி விளையாடி ஒடத் தாய்ப்பசுவுந் தொடரச் சனக்கூட்டமும் அலைமோதியது. கதிரவேலன் ஏறிய கனவானது வண்டி ஒரு வயோதிபரைச் சாடையாக காயமுறச் செய்தது. அதனால் அவரையும் ஏற்றிக் கொண்டு கல்முனைப் பொது வைத்திய சாலையில் கதிரவேலனால் இரத்தமும் கொடுபட்டு குணமடையும் நிலை கண்டு பயணத்தைத் தொடர்ந்தனர். ஐந்து மணியளவில் கதிர்காமத்தை அடைந்தனர். கதிர்காமம் போகும் கனவானுடைய வண்டி கந்தனருளாலே கதிரவேலனுக்குக்கிடைத்தது போலும்! கதிரவேலுக்கு அந்தக் கனவான் புத்திமதிகளும் கூறி கைச்செலவுக்கென்று ரூபா முந்நூறும் கொடுத்தார். கதிரவேலன் தேவையில்லையென்று மறுத்தும் கேட்டபாடாயில்லை மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையிலே மாணிக்ககங்கையில் நீராடிக்கொண்டு கோவிலுக்குப் போகும் போதே முதலாளி கண்டார். கதிரவேலன் கும்பிட்டு மன்றாடிக் கர்ப்பூர விளக்கெல்லாம் எடுத்து விட்டு முதலாளியைத் தேடிப்பார்க்கலானான்.

கதிரவேலனைக் கண்ட முதலாளி கதிர்காமத்தில் நின்றால்தானே கதிரவேலன் காணமுடியும்? அன்றிரவு நடுச்சாமமே புறப்பட்டு அடுத்த நாள் நடுப்பகல் வேளை வீட்டையடைந்தார். வீட்டுக்கு வந்த கருணாகர முதலாளி கண்டகாட்சி மண்டையிலே அடித்து அழுது புலம்ப வைத்தது.

கூரை ஓடுகள் கிளப்பப்பட்டுச் சாமான்கள் களவு போயிருந்தன. மூத்தமனைவி முத்தம்மா அழுது புலம்பிக் கொண்டிருக்க, இளைய மனைவி செல்லம்மா எங்கே என்று தேடிக் கொண்டிருந்தார்கள். வண்டி மாட்டைக்கொடுத்துக் காசு வாங்கித்தான் கதிரவேலன் பயணமானான் போல் என்று மூத்தமனைவி எரியும் நெருப்புக்கு நெய்யூற்றினாள்.


கதிரவேலால்தான் இதெல்லாம் நடந்திருக்கும் என்று நம்பிக்கொண்டு பொலீஸ் முறைப்பாட்டிலீடுபட்டனர். பொலீஸ்காரர் இராசதுரை போன்றோர் நிலையினை எண்ணிப்பார்க்க முடியவில்லை.

முகமூடியணிந்தவர்களே களவுமெடுத்து செல்லம்மாவையும் நகைநட்டுடன் கடத்தியிருக்கின்றனர். கதிர்காமத்தால் கதிரவேலன் வந்ததும் பொலிசில் அடைபட்டு நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்படுகின்றான். இராசதுரை தான் மாட்டை முதலில் மாறாட்டஞ்செய்து நடந்தவைக்கொல்லாம் காரணமாவான் என்பதை பொலிசார் கண்டுபிடிக்கமுடியாமல் திண்டாடினர்.

நீதிபதி கதிரவேலனை அழைத்து இப்போது நான் யாரென்று தெரிகிறதா எனக்கேட்டுக் கதிர்காமம் கூட்டிப்போன நான்தான் விடுதலையாக்குகிறேன் என்றார்! பொலிஸ்காரரை எச்சரித்து நடந்தவற்றைக் கண்டு பிடிக்க உத்தரவிட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்படியும் ஒருத்தி

"அய்யோ அம்மோய்! ஆரோ தூரத்தாக்கள் வாறாப்ப இருக்குதுகா! கண்ணக்கசக்கிட்டுக் கத்துகா! வழக்கம் போல முந்தானையால முகத்த மறச்சிக்கோகா! ..ஊம்" காசி எடுக்கையும் போகணும் கச்சேரிக்கு.

"முப்பத்தொண்டும் கழிஞ்சிபோச்சி. ஆரடிபுள்ள வாற ஆக்கள்? திருக்குணாமலையில இருந்தும் கேள்விப்பட்டா வருவாங்க தானே...! வாசலுக்கு வந்திட்டாங்கடி

"எண்ட ராசாவே! எண்ட துரையே! உண்ட சவத்துக்குக்கிட்ட இருந்து கத்தக்கிடைக் கல்லையே! காசு பணம் பெரிசா?....... தாராங்களாமே!"

"வயசு போன கிழவன் எண்டாப் பறவாயில்ல. நாலு புள்ளையளப்பெத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ட மருமகன் இளந்தாரிப்புள்ளதானே! சிங்காரி குடும்பத் துக்குக்ண்பட்டாப்போல. காத்திருந்து கெடுத்துப் போட்டானுகளே!........."

மகளும் தாயும் வந்தோரைக் கட்டிப்பிடித்தழுது புலம்பினார்கள். உச்சிப் பொழுது மதிய வேளையிலும் கட்டிய பீத்தல் படங்குக் குள்ளிருந்து வேதனையைக் காட்டினார்கள்.

அருளப்பன் ஆசிரியன் திருகோணமலைப் பகுதியிலும் நல்ல சேவையினால் பெயர் எடுத்தவன். வன்செயலால் இறந்ததெனக் கேள்விப்பட்டதும் வாறவழியிலதான் எல்லாம் அறிந்தோம் என்றார்கள்.

வந்தவர்களையெல்லாம் சொந்தபந்தங்காட்டி நடிப்பதில் தாயும் மகளும் கைதேர்ந்தவர்கள். "விதான வேலயாலதான் கட்டையும் தராமலுக்கு பத்தவச்சிப் போட்டானுகளாமே! என்றெல்லாம் பேசிக் கொண்டாள் சிங்காரியின் தாய் அழகம்மா. அழகம்மா பெயரளவில் மட்டும்தான். ஆளும் அழகில்லை. குணத்திலும் அழகில்லை. திடகாத்திர தேகமும் ஆண்மூச்சுக்காரியும் ஆவாள். வியாபாரத்திலும் பல தொழில் பார்ப்பதிலும் வாய்ச்சாதூரியத்திலும் கெட்டிக்காரி. இதனாலேதான் இரண்டு பேருக்கு வாழ்க்கைப்பட்டும் சிங்காரி மட்டும் ஒரே பிள்ளை. உடல் பாங்காலே.

சிங்காரி இளமையிலிருந்தே துடிப்புத் தனம் மிக்கவள். முதலில் தாய் பிற மொழி முதலாளி ஒருவனைக் கணவனாகக் கொண்டதால் இனக்கலப்பு என்றுஞ் சொல்லலாம். சண்டித்தனம் காட்டும் குடும்பத்தில் பழக்கப்பட்டு வளர்ந்தவள். நாட்டு நிலைமையால் குமராக முன்பே தகப்பன் ஊரை விட்டு ஓட வேண்டியதாயிற்று 1983ல்.

செங்கலடிச்சந்தி மட்டக்களப்பிலே பெரிய போக்குவரத்துச் சந்தியாகும். ஒரு பக்கம் பதுளை பண்டாறவளைக்கும், மறு பக்கம் கொழும்பு திருகோணமலைக்கும் தெருக்களான சந்தியாகும். இதனால் பலவினத்தவரும் கலப்புற்று வியாபாரம் செய்யும் சந்தியும் ஆகும்.

அழகம்மாவும் சிறுசிறு வியாபாரம் செய்தாள். அப்பம், புட்டு, வடை, பனங்கிழங்கு முதலியன. வாய் வீச்சுக்காரியானதால் பிறமொழியாளன் தொடர்பாகிச் சிங்காரி பிறக்கப் பிறமொழியாளன் கணவனானான். தயிர் மீன் வியாபாரம் ஏற்றுமதிக்காரனாவான். சிங்காரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்காவிட்டால் தட்டிக்கழித்திருப்பான். சிங்காரியும் தாயோடு சேர்ந்து வியாபாரம் முதலிய ஈடுபாடும், சீட்டுப்பிடித்தலும் காசு கொடுக்கல் வாங்கலும் செய்தவள் ஆவாள். குமராக முன்பே அவள் குமரான பெண்போன்று தோற்றமுடன் கவர்ச்சியானவளாய் இருந்தாள்.

நீளமான பாவாடை சட்டையுடன் கடைத்தெருவிலே சென்றால். வாய்ச்சண்டையோடுதான் திரும்புவாள். தகப்பனும் தாயை விட்டோடியதால் பக்குவப்பட்ட அடுத்த வருஷமே சொந்தக்கார அருளப்பு வாத்தியாயரை அவ்வூர் போதகர் மாப்பிள்ளையாக்கினார். அருளப்பும் வேதபாட நடைமுறையும் நல்ல பண்பானவனும் ஆனபடியால் அவ்விடத்தில சிங்காரிக்குக் கணவனாக்கப்பட்டான்
அருளப்பன் பண்பான குணமும் ஆசிரியனுக்கேற்ற நடைமுறையும் கொண்டவன். சிங்காரியின் தாய்மாமன்மாரில் இளந்தாரிகளும் சிலர் இருந்தனர். கால நடைமுறைக்கேற்ற கோலங்களும் இடம் பிடித்தன.

“ஏ.கே” தூக்கிய பேர்வழிகள் அக்கம்பக்கமெல்லாம் அதிகரித்தனர். இடமோ இரவும் பகலும் போக்குவரத்து மிகுந்த பிரதானமான சந்தி. கலகங்களும், கைகலப்புகளும், சண்டை சச்சரவுகளும் மிகுந்த சந்தியாகும்.

இரண்டொரு வருடங்களால் அருளப்பன் திருகோணமலையில் ஓர் பெரிய பாடசாலைக்கு அதிபராக மாற்றப்பட்டான். அருளப்பன் பண்பான நடைமுறைக்கும் சிங்காரியின் முரண்பாடான நடைமுறைக்கும் ஏட்டிக்குப் போட்டியான மோதல்களும் வந்து போய்க்கொண்டிருந்தன. சிங்காரியின் சித்தப்பாவாக இடைக்காலத்தில் சேர்ந்திருந்தவரும் தாயை விட்டுப்பிரிந்து போக தாய் மகள் குடும்பம் ஒன்றாகவே இருந்தது. மகளையும், மருமகனையும் ஆட்டிப்படைக்கச் சிங்காரியும் தாய் செயலுக்கு உடந்தையாகிக் கொண்டாள். இவ்வாறு ஆண்டு ஐந்தோடிக்கொண்டன.

அருளப்பன் மூன்றாம் பிள்ளைக்கும் தந்தையாகிக் கொண்டிருந்தான். மாமியாரின் அப்பம், புட்டு வியாபரம், சாராய வியாபாரத்தையும் மறைவாகக் கொண்டதால் அருளப்பன் அறிவுரைகள் அவர்களைச் சேராது பகையினைக் கூட்டியது. அவன் புத்திமதியெல்லாம் “செவிடன் காதில் ஊதிய சங்காச்சு”. ”சண்டை சச்சரவுகளும் கூடுதலாச்சி. அருளப்பன் உண்மையிலேயே அருளுடையவன்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பிள்ளை கைக்குழந்தை. மூன்று பிள்ளைகளும் பெண் பிள்ளைகள். இவையெல்லாம் மாமியாரின் வாய்ச்சண்டைக்கு காலத்தோடு சேர்ந்து ஒத்தாசையாச்சு.

நாடெங்கும் கலகம் தேசப்பற்றுக்கூடிய சில இளைஞர்களின் நடைமுறைகளும் நாசச்செயல் கொண்டவர்களின் நடைமுறைகளும் நாசகாரச் செயல்களும், ஆள்சேர்ப்புகளும் அதிகரித்தன. சிங்காரியின் மாமன்மாரும் சிலர் ஆயுதபாணிகளாக ஓட்டம் பிடித்தனர். சிங்காரியின் தாய்க்கு அதுவும் உறுதுணையாச்சி. இந்தச்சூழ்நிலைகளைப் பயன்படுத்தி மருமகனைச்சாட மகளையும் உஷாரப்படுத்தித் தன் ஆசை வலைகளை வீசத்தொடங்கினாள். இளந்தாரி மகன் ஒருவனையும் சிங்காரிக்கு ஒத்தாசையாக நடக்கும்படி பல்லவி பாடிப்பாடி சேர்த்துக் கொண்டாள். மகளுக்கும் பிடிப்பான போதனை புகட்டி ஆசையூட்டினாள்

"என்ன புள்ள சிங்காரி! நீ என்ன இன்னமும் சின்னப்புள்ளையா? மூன்று புள்ளைகளப் பெத்தனி, அதுவும் மூன்டும் பொம்பிளைய் புள்ளைகள மட்டும் பெத்தாப் போதுமா? வாறவருசம் நாலாம் பிள்ளையும் வந்திடும். அதிலமட்டும் அவருக்குக் குறைச்சலில்ல. பார்க்கலையா மகளாரே'', "கொள்ளிகட்டி விக்கிறவன்ட பொஞ்சாதி சுள்ளிபோல இருந்தாலும் போட்டிருக்கிற நகநட்டென்ன? ஊடுவாசல் என்ன? கலாதி என்ன? ஊடுவாசல் இல்லாமல் கிடந்த பக்கத்து ஊட்டுக் கமலன் விதானவேலைய எடுத்த புறகு மெத்தஊடும் கட்டிப் போட்டான் பாக்கல்லையா?. நாம சாராயம் வித்துச் சம்பாதிச்சா சண்டைக்கு வாறாரு."

"என்னகா செய்யச் சொல்றா என்ன ஆக்கினையாப் போச்சு? கடைப்பக்கம் போனா அவருக்கு மானம் மரியாத போகுதாம், புள்ளைகளுக்கு பால்மாவு வாங்கிறதுக்கும் கடன் கடனா கேக்க வேண்டியிருக்கிது. சீட்டுப் போட்டு வாற காசையும் நீ எடுத்துப்போடுறா. ம்...ம்.. அவரும் அந்தா வாறாருகா என்ற இந்த சம்பாசனை முடியமுதலே அருளப்பன் வந்துகொண்டே....."

"புள்ளைகளெல்லாம் புழுதியில விளையாடுதுகள் தாயும் மகளுமாக் கூடி திட்டம் போடிறியள் எனக்கு விதான வேலையும் வந்து எட்டிப்பாக்கிறாப்போல இருக்கு இன்டவியூ எல்லாம் முடிஞ்சுதுதானே. நீங்க சாராயம் விக்கிறத விட்டுப் போடுங்க என்று சொல்லிக்கொண்டே வீட்டுக்குள் சென்று உடுப்பை மாற்றினான். விதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை என்றதும் தாய்க்கும் மகளுக்கும் உச்சியில பூப்பூத்தமாதிரி. முந்திய பேச்சுவார்த்தை கோபதாபம் எல்லாம் மாறி சந்தோசமானார்கள். சில மாதங்களால் அருளப்பு வாத்தியார் செங்கலடிக்கு விதானையாராகப் போனார்.

அருளப்பு வாத்தியார் கிறிஸ்தவ நடைமுறைகளைப் பின்பற்றினாலும் சைவ நடைமுறைகளில் சில பகுத்தறிவு இல்லாததைக்கூறினாலும் முந்திய சமயம் என்று நல்லவற்றை பாராட்டிப் பேசுவான். சாதி சமய வேற்றுமை கொள்ள மாட்டான். விதான வேலை எடுத்ததும் நல்ல கொள்கைகளைக் கைக் கொண்டான.

உள் நாட்டில் வன்செயல்கள் கூடக்கூட விதானைமாரும் கூடுதலாகத் தேவைப்பட்டனர். வேறு வேறு உத்தியோகங்களில் இருந்தவர்கள். புதிய கிராமசேவை உத்தியோகத்தர் ஆனார்கள். அப்படியாகவே அருளப்பனும் விதானையார் ஆக்கப்பட்டான். ஆசிரிய வேலையை நல்ல சேவையாகக் கணித்தாலும் அயலிடத்து மாற்றத்தாலும் குடும்பத்தின் நச்சரிப்பாலுமே விட்டு விலகி செங்கலடி விதானையார் ஆகிக்கொண்டான்.

அருளப்பன் விதானை வேலையாகிப் போனதும் ஏழை எளியவர்கள் சாதியில் குறைந்தவர்கள் என்றெல்லாம் பாராது, அரசாங்க உதவிகளை எல்லாம் பெற்றுக்கொடுத்தான். வீடு தேடிச் சென்றும் ஏழைக் குடும்பங்கள் வாழ வழிகாட்டினான். பிரசித்தமான செங்கலடிச்சந்தியில் இலஞ்சம் தலைவிரித்தாடியது. அவையெல்லாம் அருளப்பன் செயலால் சூரியனைக்கண்ட பனிபோல் ஆச்சி. இந்த நல்ல செயலால் அவனுக்குப் பகையும் கூடலாச்சு.

கல், மண், மணல், மரம் முதலியவையெல்லாம் களவாகக் கொண்டு வியாபாரம் நடைபெறும் சந்தி செங்கலடிச்சந்தி. இவையெல்லாம் அருளப்பனின் நேர்மைகளால் பாதிப்புக்குள்ளாகின. யாரேனும் இலஞ்சம் கொடுத்தால் வாங்க மறுத்து புத்தி சொல்லி நல்ல வழி காட்டுவான். அநேகமாக ஏழைப்பெண்கள் அநாதைகள் எந்த நேரமும் வீடுதேடிவந்து உதவிபெற்றுச் செல்வர். சிலவேளை தனது பணத்தைக் கொடுத்தும் உதவி செய்வான். இதனால் குடும்பத்தினரின் பகையும் கூடியது. சாராய விற்பனை தடைப்படல்லாச்சி. சாராயம் குடித்து வந்தவர்களும் அருளப்பன் பகையை வளர்த்தனர். இந்த வகையான நிலைமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச பதவியில் உள்ள சிலரும் இலஞ்சம் வாங்கிப் பழகியவரும் பகையை வளர்த்துத் திட்டங்கள் தீட்டினர். அத்திட்டத்தையெல்லாம் தாயும் மகளும் ஏற்றுக்கொண்டனர்.

வன்செயலால் இறப்போர் குடும்பம் ஐம்பதாயிரம் ரூபாவும், உத்தியோகத்தில் இருந்தால் ஓய்வு வயதுவரை மாதச்சம்பளமும், பின்பு குறிப்பிட்டபடி பென்சனும் இடையிடையே வேறு சலுகைகளும் பெறலாம் என்பதைக்காட்டி வன்செயலுக்கு உள்ளாக்கினர்.

நள்ளிரவில் ஆயுதம் தாங்கியோர். விதானையாரை அழைத்துச் சென்றனர். என்ன நடந்ததென்று எவருக்கும் தெரியாது. யாரோ கொலைசெய்து உடலையும் கொடாது, எரித்துப்போட்டனராம் என்ற வதந்திதான் நிலவியது. ஆயுதம் தாங்கியோருக்கு சிங்காரி குடும்பமும் ஒத்துழைத்திருக்கலாம் என்ற கதையும் உலவியது. இதனால் இப்படியும் ஒருத்தி இருக்கிறாளே என்று நல்லவருடைய அடிமனது அலறிக் கொண்டிருக்கிறது. அருளப்பனுக்காகக் கண்ணீர்விட்டன ஆயிரமாயிரம் மனித இதயங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெண்பாவும் என்பாவும்

"ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டார் வரப்போவதில்லை மாநிலத்தே.....!
ஏண்டா நமக்கு "கோண்டா யமகா"
வேண்டாம் வேண்டாம் வீதியில் சாவு....."

எனும் கட்டுப்பாடலை கவிதையாகப் பாடிக் கொண்டு வந்தார் கூத்தாடி அனுபவப்பட்ட குமரப் போடியார்.

காரணமில்லாமல் குமரப் போடியார் கவிதையையும் பாடமாட்டார். கட்டுக்கதைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையுங் கட்டிக் கதைகளும் கூற மாட்டார். குமரப் போடியார் என்றால் மட்டக்களப்பு மண்வாசனைக்கும் குலம் குடி நடைமுறைக்கும் கூத்துக்கலைகளுக்கும் இடமாகிக்கொண்டிருப்பவர். ஏனிந்தக் கவிதை போன்ற புதிதான கவிதையைப்பாடிக்கொண்டு வீட்டுக்குள் நுழைகிறார் காரணம் கண்டறிய வேண்டாமா?.

பிள்ளைகுட்டிக்காரன் படுவான்கரையிலே பெயர்பெற்ற பெரியபோடியார். பாலக்காடு வட்டையிலே பாதிக்கு மேலாக காணிபூமி உடையவர். இளந்தாரிப்பிள்ளைகளையும் பருவக்குமர் பெண்களையும் வைத்துக்கொண்டு தெறித்துப்பார்த்து மாப்பிள்ளை பெண்ணெடுக்க அடிமனதை உறைய வைத்துக்கொண்ருப்பவர். மோட்டார் சைக்கிள்காரர் பின்னாலே ஏறுங்கள் என்று சொன்னாலும் "மாட்டன்" என்று சொல்லி கால் நடையிலே போகிறவர். மக்களுக்காகத்தான் இந்தப்பாடலைக் கட்டிப்பாடியிருப்பதைக் காணலாம்.

ஆண்டாண்டு தவறாமல் ஆறுமுகம் என்பவன் எட்டாம் வகுப்பிலே பட்டணப்படிப்பை வெறுத்து எருமைமாட்டுப்பட்டிக்கு ஆளானான். அடுத்தவன் இளையதம்பி "ஏ.எல்." வகுப்பிலே இரண்டாம் முறையிலும் மூன்று "எவ்"போடு முழுக்குப் போட்டான். அடுத்து மூத்த பெண் பிள்ளை இப்போது குமராகிய பின்பும் ஏழாம் வகுப்போடு விடாது படிப்பேன் என்று விடாப்பிடியாக நிற்கிறாள். தாயான கருணையம்மா ஐந்தாவது கல்வீடும் கட்ட அவதிப்படுகிறாள். இளையதம்பிதான் இந்தப்பாட்டுக்கும் இலக்காகி விட்டான் போலும். கட்டுப் பாட்டென்றாலும் கருத்துள்ள பாட்டு.

மச்சான் முறையான கருணையம்மாவின் தமையன் கந்தவனப் போடியும் ஓரளவில் போடியார்தான். என்றாலும் குமரப் போடியின் திறமையும், குரல்வளமும், வாய்ச்சாதூரியமும் பலர் மெச்சக்கூடியன. கூத்தாடிக்கூத்தாடி பாட்டுப்பாடுதலோடு திடகாத்திரமான தேகமும் உடையவர் மனிதப்பண்பாடும் நிறைந்தவர். "பண்பாடு விழுமியம், வடமோடி தென் மோடிக் கூத்துக்கள் நாட்டார் கவி எனறு பலர் பலதடவைகளில் ரேடியோ முதலியவற்றால் கூறுவதைக் கேட்கும்போதெல்லாம் கொழும்பிலே இருந்து கொண்டு கூக்குரல் இட்டால் போதுமா. இந்தக்காலம் எங்களப் போல இக்கட்டான காலத்திலும் வாழ்ந்து காட்ட வேணும். கோவில் குளத்திலும் பிரசங்கம் வைப்பாங்க ஏழைக்கு இரங்காம அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓடுவாங்க......." . இவ்வாறெல்லாம் பேச்சுகளைக் கேட்டுக் கேட்டுச் சலிப்புக்கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மச்சான் கந்தவனப் போடியாரும் மத்தியானமாகிற வேளையிலே வாசக்கடப்பால வந்துகொண்டிருக்கிறார். குமரப் போடியார் கதைப்பதைக் கேக்கிறார்.

“டே தம்பி மகனே இங்க பார் !. ஏழெட்டு எருமைகளை வித்துப் போட்டு கோண்டா மோட்டசைக்கிள் வாங்கப் போறீயாமே அருமையான யோசனதாண்டா. ஏண்டா மாட்டால வாற வருமானம் அந்த மோட்டசைக்கிளால வந்திடுமாடா? கோண்டா யமகா ஏண்டா நமக்கு எண்ட நாடகத்தை நம்மடையவன் வெற்றி மகன் ராசா அதுதான் உங்கட செல்வராசா எழுதின நாடகத்த ரேடியோவில இரா.பத்மநாதன் விளக்கமாகச் செல்லி வெளியாக்கினதெல்லாம் கேக்கலையாடா ஆ..ஆ.. சரிதான் அப்ப நீங்க சின்னப் பொடியனுகளாக்கும் எண்டாலும் அது இதெல்லாம் கேட்டு அறிவச் சம்பாதிக்க வேண்டும்டா மடையனுகளே. நாலு பேருக்கு முன்னால நாமளும் நாட்டவனெண்டு இளிச்ச வாயனுகள் சொல்ல இடம்வைக்கக் கூடாதுடா.”

இதைக் கேட்டுக் கொண்ட மச்சான் கந்த வனப் போடியார் “என்ன மச்சான் பெரிய பிரசங்கமாப் போச்சி நானும் கடப்புக்கங்கால நிண்டு கேட்டுப்பார்த்தன் வழக்கம் போல பாட்டொன்றும் வரக்காணலையே”

“இல்ல கந்தரே படிக்கிற நேரத்தில படிச்சிப் போட்டன் புறகு இப்பதானே வந்திருக்கிறா அந்தப்பாட்ட படிச்சிக்காட்டவா. பொடியன் எங்க நிக்கிறான் என்டு பாரு படிச்சிக்காட்டிறன்”

“கூத்துப்பாட்டா, கட்டுப்பாட்டா, படியுங்கமச்சான் கேப்பம்!”

“ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வரப்போவதில்லை, மாநிலத்தே
ஏண்டா நமக்கு கோண்டா யமகா
வேண்டாம் வேண்டாம் வீதியில் சாவு”

“இதென்ன மச்சான் கம்பர் வள்ளுவர் பாட்டோ நாலாம் வகுப்பில நான் படிச்சமாதிரி இப்பல்லாம் அப்படியா? குமரப் போடி வயிறு குலுங்கச் சிரித்துவிட்டு அவ்வக்கிழவிர பாட்டுறாப்பா! நான் மாத்திப்படிச்சன். அது வெண்பா! இது என்பா. என்பா எண்டால் தெரியுதா? விளங்குதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியெல்லாம் எழுதிப் போட்டு வெண்பா எண்டும் மேல போடுறவனுகள். நாமளும் விரும்பினமாதிரிப் பாடுறதானே.

"அப்படியெண்டா வீதியில மட்டுமா சாகிற?"

"இல்லடாப்பா அனியாயமா றோட்டில கீட்டில செத்துக்கிடக்கலாமா?

"அது போகட்டும் ஊட்டில நஞ்சு குடிச்சுச் சாகிறதுக்கு என்ன சொல்லப் போறயள்?"

"நாசமாப் போனவனே! சொல்லாமச் சொல்லிக்காட்டுறயா? கருணையம்மாட்டக்கதைச்சிராத! காளியாக மாறிப் போவாவு.அண்ணன் எண்டும் பார்க்க மாட்டாவு சீட்டுக்காசெடுத்து வாங்கித்தாறன் எண்டு காலங்கடத்திறாவு. பேசாம உடு! இளையவன் ஒருமாதிரியானவன். அவனக் கண்டு பாட்டாப்படிச்சனான். பார்த்தான் ஒரு பார்வ!. பார்த்திட்டு கோபத்த கொப்பளியாமப் போறான் காணலையா நீ? நாலையும் அறிஞ்சி நான் நடக்க நீங்க ஒண்டையும் குழப்பிப்போடாதங்க. கலியாணம் முடிச்சிக் குடுத்த புறகு பார்ப்பம். இப்பெண்டா கண்டகண்ட கழிசறையெல்லாம் ஏத்திக்காதல் கூதல் என்பாங்க! காசு பணத்தக்கரைப்பாங்க!"

மச்சான் நீ சொல்றதும் சரிதான். எண்டாலும் இப்பத்தையக்காலம், இளந்தாரிப்புள்ளையள், கீழ்கண்டுகள் நாலு பொமபிளப்புள்ளையள், உழைக்கிற ஆம்புளப்புள்ளையள்.

"அதுதாண்டா மச்சான் உண்ட தங்கச்சிர கெட்டித்தனம் நாலு வீடு கட்டி முடிஞ்சி. நீயெல்லாம் இஞ்சால அத்தான், அக்கா, ங்கச்செண்டு அலமோதக்கூடா. பட்டணத்து உத்தியோககாரனுகள் பறந்து வாறானுகள் படுவான்கரைக்கு........."

"வைக்கலில விளைஞ்சத வைக்கலிலதானே மச்சான் கட்டி வைக்கிறம்....."

அடநீயும் இப்ப ஒய்யாரமாகக் கதைக்கப்பேச பழியில்லாம நடக்கப்பழகிற்றா! ஆனா அவ்வையார் பாட்டெண்டு சொல்லத் தெரியா. சரிபோகட்டும்! கருணையம்மா வட்டாவோட வாறாவு எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையெல்லாம் கிடக்கு. வேணுமெண்டாத் தயிருப்பானையொண்டு கேட்டு வாங்கிட்டுப்போ. அண்ணன் எண்டாலும் வலியத் தரமாட்டாவு” என்றெல்லாம் தொடர்ந்த கதைபேச்சு அவர்களின் நிலைமையி னைக்காட்டின. காலம் அதன் வேகத்தைக்காட்டி ஓடிக்கொண்டிருந்தது. நாலைந்தாண்டுகள் மறைந்தன. எவ்வளவோ நடந்து விட்டன.

நாட்டின் நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது. எருமை மாடுகளைக் காட்டுப்பக்கம் வைத்து கஷ்டப்படுவதைப்பார்க்க ஒரு உழவுமெசினை வாங்குவோம் என்ற எண்ணத்தால் மாடெல்லாம் காசாகி வங்கிக் கடனோடு புதிய உழவு மெசின் வளவுக்குள் வந்து விட்டது.

கோண்டா யமகா ஏண்டாவெனக் கேட்டது நீடித்துக்கொண்டதால் இளையதம்பி வீட்டைவிட்டோடி தேச நலனுக்கான எழுச்சி இளைஞரோடு சேர்ந்து கொண்டான். மூத்தவன் மாட்டுப்பட்டி போக மெசின் றைவராக மாறிக்கொண்டான்.

படித்துக்கொண்டிருந்த மூத்த பெண்பிள்ளை பட்டணப்பள்ளியிலே படிப்பதோடு ரியூஷன் வகுப்புக்களில் காலநேரத்தைக்கழித்துக் காசையும் கரைப்பவளானாள். கீழ்கண்டுகள் பட்டணப்படிப்புக்குத் தயாராகிக் கொண்டனர். என்ன செய்வர்? இப்படி நடக்குமென்று தெரியுமா? மூன்று பிள்ளைகளோட அடுத்தவளும் குமராகப்போகிறாள் “இதென்னடா காலக் கோலம்? என்று புறுபுறுப்பு தொடர்ந்தது.

“கனவில கூட நாங்க நினைச்சுப்பார்க்கல்லே. படுவான்கரைப் பக்கமிருந்து பணக்காரர் எல்லாம் எழுவான்கரைக்கு ஓடிப்போனாங்க! நாமள் என்ன செய்வம். கருணையம்மா கருணையோ? கண்ணகையம்மன் கடாட்சமோ? எண்டெல்லாங் கேட்டவனுகள் பரிகாசத்துக்கிடமாப்போச்சே!

கந்தவனம் மச்சான் எந்தப்பக்கம் போவம்? என்டெல்லாம் வினவிக்கொள்ள தட்டிக்கழிச்சனே கலிகாலச் சூழ்நிலையாச்சு. அதற்கிடையிலே நடந்தவை ..................

“இதப்பார்க்க இடி உழுந்திருக்கலாமே அப்பா! தாந்தா மலையப்பனே! தாந்தோண்டீஸ்வரனே! கொக்கட்டிச்சோலை அய்யனே! இதென்ன கொடுமையப்பா! என்றெல்லாம் கண்ணீரும் கம்பலையுமானாள் கருணையம்மா!”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நஞ்சுகுடிச்சுச் செத்துப்போறவனுகளுக்கு ஏசி நடந்த நமக்கு நஞ்சு குடிக்கக் காலம் வந்தாச்சே. இதென்ன கொள்ளையப்பா? ஒன்டா, ரெண்டா? ஊட்டில உள்ளதெல்லாம் போச்சே!."

எருமைமாட்டையும் காணிரெண்டையும் வித்துப்புது மெசின வாங்கினமே! சாமன்களையெல்லாம் ஏத்திற்றுப் போகவா? இப்ப நான் என்ன செய்யட்டும் திட்டமிட்டு வாழ்ந்த எனக்கு குடும்பம் மட்டமாப் போச்சே. பட்டணத்தில மகளால மானமும் போச்சி. அங்கெல்லாம் தலகாட்ட ஏலா. என்றெல்லாம் குமரப் போடியாரின் அழுகுரல்.


நடுச்சாமம் நல்ல நித்திரை கொள்ற நேரத்தில துவக்குகளக்காட்டி முகமூடி போட்டுக்கொண்டவனுகள் ஒரு அறைக்குள்ள புள்ளகுட்டிகளோடு பொஞ்சாதி என்னையும் சேத்துப் போட்டு பூட்டிப்போட்டு படுத்தின பாட்டப்பாருங்க! பாருங்க!! என்று அழு குரலோட காட்டினார். படிக்கிற புள்ள பட்டணத்தில ரியூசன் மாஸ்டரோடு ஓடிட்டாளாம் எண்டதாலதானே பட்டணத்துப்பக்கம் தலை காட்டாம இருந்தம்.

'நகநட்டுகள் ஒன்டும் இல்ல நல்ல சீல புடவைகளும் இல்ல. ரேடியோ, மணிக்கூடு சோக்கேஸோடு சேர்ந்த சாமான் ஒனடும் இல்ல. நாங்க என்ன கொடுமையச் செய்தம் என்றது கருணையம்மாவின் கருணைகலந்த குரல். பார்த்தவர்கள் ஆரெண்டு முறப்படலாம் "உளவில்லாம களவில்ல' என்று ஊரில சொல்லுவாங்களே என்றெல்லாம் குமரப் போடியார் குடும்பத்திற்கு பார்த்தவர்கள் அறிவுரை கூறினார்கள். மகனோடு சேர்ந்த எழுச்சிக்கூட்டமாகவும் இருக்கலாம் என்றும் இரகசியமாகப் பேசிக் கொண்டனர்.

மாட்டுப்பட்டியும் இல்ல வாங்கின மெசினும் இல்ல ஊட்டில நகநட்டுமில்ல எல்லாம் உங்கட வெண்பா செய்த வேல மச்சான் என்றார் கந்தவனப் போடியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னிச்சைப் போடியார்

மட்டக்களப்புப் பட்டினத்துப் பள்ளிவாசல் "வாங்கு" ஓதும் சத்தம் அதிகாலை ஐந்தரை மணியளவில் படுக்கையில் இருந்த உம்முணிப் போடியாரை உசுப்பி விட்டது. வழமையாக மாட்டுக்காலையடிக்குப் போய் தனக்கு விருப்பமான ஒரு பசுவைக் கட்டி பால் கறந்து கோப்பியோடு கலந்து குடிக்கும் நேரம்.

காலைக் கடனுக்குப் பின் பாலைக்கறந்து பழக்கப்பட்ட போடியார் அந்த விடியாப் பொழுதிலே எழும்பி வாயில போடக் குட்டாப் பெட்டியை எடுத்து, பாக்கு வெட்டியால் பாக்கை வெட்டி வாயிலேயும் போட்டுக் கொண்டார். மெசின் றைவரான சிங்கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலன் பக்கமாகப் படுத்துக்கொண்டிருந்தான் அவனைச்சிங்கன் என்றே எல்லாரும் அழைப்பர்.

"என்னடா சிங்கா. சிங்கன்ட சிலாவன ஒண்டையுங் காணல்ல. படம் பாத்திட்டு வந்து படுத்தா எழும்புற நேரத்துக்கு எழும்புறல்லையாடா? எழும்புடா புள்ளைக்கும் ஊட்டுக்காற ஆக்களுக்கும் கரைச்சல் கொடுக்காமப் போவம். போய் வேல முடிஞ்சி கறச்சில கிடக்கிற மெசின எடுத்திட்டு வா நான் ஆத்தங்கரைக்குப் போற நேரம். அதுக்கெல்லாம் இந்த நாளையில முடியுமா? றோட்டால நடந்திட்டுப்போறன் மெசின எடுத்திட்டுவா வலையிறவுக்கு"

"அரைகுறையாச் சத்தங்கேட்ட சிங்கார வேலன் எழுந்து என்ன போடிப் பெத்தப்பா! இந்த நேரத்தில எழும்பிட்டு என்னையும் எழுப்புறீங்க? இப்த்தைய காலத்தத் தெரியாதா அறிஞ்சி வைச்சிட்டுக்கதைக்கிறையளே. நம்மட ஊரப் போலயா? நடுச்சாமத்திலயும் நம்மட விருப்பம். சும்மா படுங்க நல்லா விடியட்டும் படுங்க" என்கிறான்.

"இல்லடா சிங்கா! புள்ள நிக்கிற ஊட்டுக்கார ஆக்களுக்கு கரச்சல் குடுக்காமப் போவண்டா எழும்புடா!. மெசின் கறச்சிக்குப் போகப்பயந்தா நானும் கூட வாறனே."

"இப்ப கிழவன் கிழவி எண்டெல்லாம் பார்க்கிறல்ல எல்லாரும் பயங்கரவாதியாம் குட்டாப்பெட்டியெல்லாம் போட்டுக்குடைவானுகள் எக்கசக்கமான வேள. பாக்குவெட்டிய என்ன ஆயுதம் என்டு கேட்டு பல்ல உடைப்பானுகள். இந்த வேளயில இன்னொருபக்கம் நாய்க்கிள றோட்டால போக ஏலா. றோட்டுப்பக்கத்து ஊட்டுக்காற ஆக்களும் ஏசுவாங்க"

"நேத்து மாலைக்குள்ள போறத்தையும் நீ தாண்டா கெடுத்த நீ. உட மாட்டானுகள் இதுக்குபபுறகு புடிச்சி வச்சிருவானுகள் என்னசெயவானுகளோ ஆருக்குத் தெரியும் எண்டெல்லாம் பயமுறுத்தாட்டிப் போட்டு இப்ப எழும்ப மனமில்லாமல் படுக்கிறயா? எழும்புடா"!

"ம்...ம்... வாயில போட எனக்கும் ஒரு வாய்க்கு வெத்தில தாங்க வாயில. போட்டிட்டு எழும்புவம். "மசண்டைக்குள்ள போனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைச்சு வச்சு விடியமுதல் மண்டையில போட்டாலும் போடுவானுகள் ஆருக்குத் தெரியும் என்றான் சிங்கார வேலன். உடனே இந்தாடா என்று உம்முணிப் போடியார் குட்டாப் பெட்டியைக் கொடுத்தார். வெத்தில வாயில போட்டு எழும்ப எத்தனித்தனர்.

உம்முணிப் போடியார் உன்னிச்சைக் குளத்தில் நல்ல வருமானம் தேடிக் கொண்டவர். அயல் நாட்டுக்கு ஓடுவதைப்பார்க்க உள்நாட்டிலே உழைப்பால் உயரலாம் எனக் காட்டுகிறவர். பழங்காலப் போக்குடன் நடந்து பெரிய பணக்காரன் எனக் காட்டிக் கொள்ளாதவர். பணக்காரன் எனக் காட்டினா இனசனம் எல்லாம் பிச்சுத் திண்டுபோடும் என எண்ணிக்கொண்ட நடைமுறை கொண்டவருக்கு காலம் பிழையாப் போச்சுது.

வேளாண்மைச் செய்கையோடு ஆடு, மாடு மீன்பிடி முதலியவற்றால் இலட்சாதிபதியான பணக்காரனாகியும் காட்டிக் கொள்ளாதவர். சிறு குடும்பிக் கொண்டையும் ஏறக்கட்டிய வேட்டியும், தோளிலே துவாயும், வெத்திலை குட்டாப்பெட்டியும் கையோடு உள்ளவர். போரதீவுப் பகுதியை விட்டு பெரு வெள்ளத்தோடு உன்னிச்சைக்கு வந்தவரை உன்னிச்சக்குளச் சூழலே இலட்சாதிபதியாக்கி விட்டது. இது உழைப்பின் பரம இரகசியம்.

சிங்கார வேலன் உம்முணிப் போடியாருக்குத் தூரத்தவன் அல்ல போடியார் மனைவியின் வயிற்று வார்குடியில் வந்த பேரப் பொடியன்தான். அவனுடைய கூட்டாளி பொன்னன் உசார்ப்படுத்தியபடி சிங்கார வேலன் உம்முணிப் போடியாரையும் ஆட்டுவித்தான். ஒரு பழைய போர்ட் உழவு மெசினை தேவைதான் எனக்கண்டு போடியாரும் வாங்கிக்கொண்டார். பொன்னன் ஓரளவில் பட்டண நாகரீகப்பழக்க வழக்கமும் வாய்ச்சாலமும் பலருடைய அறிமுகமும் உள்ளவன்.

பச்சப்பசேல் என்னும் வேளாண்மை வயல் கீழ் கரைப்பக்கங் கொண்ட உன்னிச்சைக் குளம் உம்முணிப் போடியாரை உயர்த்தியது. உழவு மெசின் தேவை எனக் கண்டு வாங்கியவரை உசார்படுத்திய பொன்னன் எப்படிப்பட்டவன் தெரியுமா?

உம்முணிப் போடியாருக்கு றைவராகி சிங்காரவேலனையும் துணைக்கு ஆளாக்கிக் கொண்டான். மெசின் வேலைகளையும் பழக்கிக்

10620



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே வந்தான். வயல் வேலைக்குப் போனதும் "தண்ணி யடிச்சுக்கொண்டு" சிங்காரவேலனையே மெசின் வேலையைச் செய்ய விடுவான். முதலில் சூடு அடிக்கப்பழகி உழவுக்கும் பழகிக்கொண்டான் இரகசியமாகவே.

"ஆரும் பழக்கமில்லாத ஆக்கள் மெசினப்பழுதாக்கிடுவானுகள் ஒருவனிட்டையும் மெசினக் குடுக்காத" என்று போடியாரின் இறுக்கமான கட்டளை பொன்னனுக்கு. அதனால் சிங்காரவேலன் மெசின் ஓடப்பழகியது போடியாருக்குத் தெரியாமல் இருந்து வந்தது.

சில மாதங்களால் பொன்னன் குடிவெறியும் மெசின் வேலையில் கள்ளக்கணக்கும் சிங்காரவேலனை மெசின் றைவராகும்படி செய்தன.

சிங்காரவேலன் சொந்தக்காரன்தானே! இதனால் குடும்பத்தில் எல்லாருக்கும் நல்ல குஷி. அத்தோடு பெருமையும் கூட. இதனாலே தான் பேரப்பிள்ளையை பட்டணத்தில் வின்சன் கல்லூரியில் படிக்க வைத்தார் போடியார். அக்கம்பக்கமிருந்த ஆனைப்பந்திப் பள்ளியிலும் விடாமல் பொன்னன் திட்டமிட்ட படி வின்சனுக்கு அனுப்பி வைத்தார். அந்தப்பிள்ளை தங்குகின்ற கல்லடித்தெரு வீட்டிலிருந்து நடந்த சம்பாஷனையின்படி சின்னப்பாலத்து புது றோட்டாலே மெசினைக் கொண்டுவரச்சொல்லி உம்முணிப்போடியார் ஆஸ்பத்திரி றோட்டுச்சந்தியில் பார்த்திருந்து வலையிறவுக்கு நடக்கின்றார்.

பொன்னன் மெசினாலே விலக்கப்பட்டதால் வன்செயல் நடைமுறையில் உழைக்கும் கள்ள நடைமுறைகொண்ட இனந்தெரியாத கூட்டத்தினரில் ஒருவனாகிக்கொண்டான். ஆனால் படுவான் கரைக்குப் போவதும் பட்டணம் வருவதும் பகட்டுக்காட்டுவதும் உதவி செய்வது போல் நடிப்பதும் பொன்னன் பழக்கமாகின. இந்த நிலைமையால் உம்முணிப் போடியாரையும் ஒரு கைபார்க்கக் காலம்பார்த்துக கொண்டிருந்தான். முன்தினம் எதிர்பார்த்த மெசின் சந்திக்கு வராமையால் அதிகாலையிலே பட்டணப் பக்கமுள்ள இயக்கத்துணையாளர்களினாலே உடுப்பாலும் எடுப்பாலும் படைவீரன் போன்று காட்டிக்கொண்டு கூட்டத்தினருடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் பொன்னன். ஆஸ்பத்திரிச்சந்திக்கு ஆற்றங்கரையோரமாக வருகின்ற தமது மெசினைக்கண்டதும் சைகை காட்டிவிட்டு முன்னே நடந்து சென்றார் போடியார் வலையிறவுப்பாலத்துக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக்காலம் வஞ்சம் தீர்ப்பதற்காக இனந்தெரியாத நபர்களும் காவல் நிலையங்களில் நிற்பர். உம்முணிப்போடியார் நெருங்கியதும் அங்கிருந்த தலையாட்டிப்பொம்மைக்குப் பக்கமாகச் சென்றதும் ஏதோ ஒரு அறிவிப்பினால் போடியார் வலையிறவுக் கூடாரத்தினுள்ளே மறைவாக நிறுத்தப்பட்டு கடும் சோதனைக்கும், வேதனைக்கும் உள்ளானார். மெசின் பக்கமாக வரமுன்பே "ட்றக்" வண்டியிலே ஏற்றிக்கொண்டு எங்கேயோ சென்றனர். மெசின் றைவர் முறைப்படி காவல் நிலையத்திலே நிறுத்தியதும் சோதனை நடந்தது. அதற்கிடையில் எங்கிருந்தோ வந்தமாதிரி தன்னைக்காட்டிக்கொள்ளாமல் பொன்னனே தங்கள் கூட்டத்தினரோடு கைவரிசையைக் காட்ட முற்பட்டான். இடையிலே நின்று தரகு வேலைக்குள்ளான பொன்னன் "ஐம்பது கொடுத்தால் தான் போடியாரை விடுவாங்க போல இருக்கு" என்ற வகையில், சிங்கார வேலனுக்குப் புத்தி கூறுமாப் போல் கூறினான்.

"உம்முணிப் போடியார் கவலைப்படும் போது துரோபதையம்மன் கோவிலைப்பற்றி நேற்றிரவு பேசியதை நினைவு படுத்தினார். "இந்தக் கோவில் இனிக் கும்பிடக்கூடிய கோவிலா? சப்பாத்துக்காரனுகள் படுத்தின பாடு தெரியாதா? இப்படியெல்லாம் நடக்க பாத்திருக்கிற நம்மட தெய்வங்களும் சாமிகளும் பொய்தானா? இவனுகள் இதுக்குள்ளே செத்துக்கிடக்கணுமே" என்றெல்லாம் பிள்ளை வீட்டாரோடு பேசியதை ஆரும் ஒட்டுக்கேட்டாங்களோ? தெரியா. இதையெல்லாம் விசாரிக்கிறானுகளே என்று பயத்தினால் நடுங்கிக்கொண்டிருந்தார்.

அவ்வேளை வந்த சிங்காரவேல், ''பொன்னனுடைய திருவிளையாட்டால்தான் இதுவெல்லாம் என்று ஆதாரங்காட்டி அரைவாசித் தொகைக்கு உடன்பட்டு கறச்சிக்குக் கொண்டு வந்த மீதிப்பணத்திலிருந்து கொடுத்தனர். பொன்னன் செயலைப் பாராட்டிப் பேசிக்கொண்டு வீடு சென்றனர் பாருங்கள்! பொன்னன் புகழப்பட்டான். அவனைப்போல் எத்தனை பேர் இனங்காட்டாது உம்முணிப்போடி போன்றோரால் பணத்திலே புரளுகின்றனர். ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். உம்முணிப்போடியாரை உன்னிச்சைப்போடியார் என்று சொல்லுவதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்தது. உன்னிச்சைக் குளத்தோர வயல் வாடிக்குப் போனதும் தனக்கு நடந்த செய்திகளை எவருக்கும் சொல்லக்கூடாதென்று றைவர் சிங்கார வேலனுக்குச் சொல்லி விட்டு முன்பிருந்த நிலைமையையும் தான் வளர்ச்சியடைந்த தன்மையையும் சிங்காரவேலனிடம் சொல்ல நினைத்துப் புத்திபுகட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிங்கா! என்னடா நீ? பொன்னனப்பத்தி என்னவோ எல்லாம் சொல்லிக்கிடக்கு அவனை விலக்கத்தான் வேணும்" எண்டு சொல்லக் கோபத்தில சொல்றையாக்கும் எண்டு முதலில நினைச்சிருந்தன். இண்டைக்குத்தானே உள்ளதைச் சொல்லியிருக்கிறான். நீ கிட்டடிச் சொந்தக்காறன் எண்டு அறியல்லப் போல பொன்னன்"

"போடியாருக்கு ஊசேத்தி ஊசேத்தி பழைய .போர்ட் மெசின வாங்க வச்சன். அதுதான் வாங்க வசதிப்பட்டுது. இப்படி பழைய மெசின வாங்கினா நெடுகிலும் றிப்பயர் பார்க்கிறதும் கறச்சிக்குப் போறதும் வாறதும் ஆகத்தானிருக்கும். அதுகளில எல்லாம் நமக்கு நல்ல வாசியிருக்கு. அதுமட்டுமா? படிக்கிற குமருப்பிள்ளையிலும் ஒரு கண்வச்சிருக்கண்டா அதுவும் கைகூடினா நான் போடியாராப் போயிருவன். எண்டெல்லாம் சொல்லியிருந்தானாமே. நல்ல காலம் என்னத் தெரியாமலுக்கு உனக்கு றைவர் வேலை பழக்கினது" என்றார்.

"தெரியுமாடா சிங்கா. வெறுங்கையும் ஆளுமாகக் குளத்தில மீன் பிடிக்கலாம் எண்டு வந்தனான்தாண்டா முப்பது வருசம் படாதபாடெல்லாம் பட்டு உன்னிச்சைப் போடியாரெண்டு சொல்லிப்பாராட்டுற அளவுக்கு வந்திருக்கிறன். நீயெல்லாம் ஆளாகணும்.

"கையில சர்க்கரய நக்கினா கடகட எண்டு தேயிலையக் குடிப்பன். படுக்கிற எட்டு மணித்தியாலம். பாடுபடுற பதினாறு மணித்தியாலம். எனக்கு வாச்ச பொம்பிளையும் சீதேவிதாண்டா. நான் மாடு மேய்ப்பன் அவ ஆடு மேய்ப்பா. நான் மீன் வீசுவன் அவ மீன் வடிப்பா. நான் காடு வெட்டுவன். அவவெளியாக்கி வயலாக்குவா. அப்பிடியெல்லாம் பாடுபட்டுப்புள்ளயளோடு பணக்காரனாக இருக்கிறன். நான் பட்ட கஷ்டங்கள் பறிக்கிறவனுகளுக்குத் தெரியுமா?" ஒரு சில ...லவனுகளோடு கெட்டவனுகளும்கூட உள்ளனர் என மனம் வருந்தினார் ...ன்னிச்சைப் போடியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருப்பில்லாத புகை

“வாற போற நேரமெல்லாம் வம்புப் பேச்சே- இஞ்ச
வந்திருந்தும் பேசிடுவார் தும்பப்பேச்சே.
தும்பப் பேச்சைத் தொடர்ந்த ராவு விடிஞ்சு போச்சே
துண்டு மாறி நானும் வேட்டிகட்டலாச்சே!!..............
துண்டு மாறி நானும் வேட்டிகட்டலாச்சே!!..............”

“நாப்பது ஆண்டுகளுக்கு முன்ன படிச்சி நடிச்ச நாடகத்துப்பாட்ட நானிப்ப அனுபவிச்சுப்படிச்சுக்காட்டுற காலமாச்சே’ என்று பாட்டோடு பேசிக் கொண்டு வந்த கந்தலிங்கம், பெண் வேசம் போட்டு ஆடிய சமூகநாடகத்தில் பாடிய அந்தப்பாட்டை வாசலில் பத்தக்குட்டியரும் பெண்சாதியும் கேட்டுதிகைத்துப்போய் நிற்கின்றனர். மீண்டும் கந்தலிங்கம் படிக்கின்றான்.

“வாற போற நேரமெல்லாம் வம்புப் பேச்சே - இஞ்ச
வந்திருந்தும் பேசிடுவார் தும்பப்பேச்சே.
தும்பப்பேச்சைத் தொடந்தராவு விடிஞ்சு போச்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டுமாறி நானும் வேட்டி கட்டலாச்சே
என்ற சேல உன்ற உடம்பச் சுற்றலாச்சே"

எப்பிடியான காமரசப்பாட்டு கண்டீங்களா? உள்ளுக்கு இருக்கிற காமரசக்காட்சியாம் எண்டு காறித் துப்பி ஏசினதெல்லாம் இப்ப நினைப்பிருக்குதா? பத்தக்குட்டி அண்ணே! ஏங்கா மாதரசக்கோ! உன்ற புருசனாரிட்ட நீயும் கேட்டுப் பாருகா! என்றான் கந்தலிங்கம்.

பத்தக்குட்டியருக்குப் பழைய நாடகம்; வடமோடிக் கூத்துகளாடினாலும் நெஞ்சை விட்டகலவில்லை. வாசலைக கூட்டியவார்கலைக் கைப்பிடித்திருந்த மனைவியிடம் திடீரெனப் பறித்தெடுத்த பத்தக்குட்டியார்.........அடே கந்தலிங்கம்
(மனுசியும் கந்தலிங்கமும் பயந்திருக்க)

"என்னடா பாட்டைப் பாடினாய்
என்ன பண்ணடா உன்னைநானிப் போது
பொண்டாட்டி முன்னாலே துண்டாக்கிப் போடட்டா
பொண்டாட்டி முன்னாலே துண்டாக்கிப் போடட்டா - அடே
சண்டாளனே நீயிப்ப சதிகாரனாகிட்டா"

என்று கூத்துப்பாட்டு போல ஒரு பாட்டைக்கட்டிப்பாடி, ராவெல்லாம் அமளிதுமளிப்பட்டு எழும்பி இன்னும் வாசலக்கூட்டி முடியல்ல; மனுசிர வாயக்கிளப்பிப் போட்டையடா"

"கந்தலிங்க அண்ணர் வந்து தானா வாயக்கிளப்பணும்" ஏன்? ராவெல்லாம் எத்தனமுற கிளப்பிப் போட்டீங்க அதத்தான் கந்தலிங்கண்ணர் கனவுகண்டாரோ"

"இல்லகா மாதரசிக்க, இவருக்கு நான் பொஞ்சாதியாக இளந்தாரியாக இருக்கக்க நாடகம் நடிச்சம். எங்கட கீத்தி ஐயா நாட்டில நடக்கிறதக் கண்டாப்படிப்பினையூட்டி நாடகம் எழுதிப்பழக்கி நடிக்கவைப்பாரு. ஒரு சீன்கிளப்பியுடுற நேரத்தில நான் குசினிக்குள்ளவேல. நல்லாக் கேளுகோ! கேளு!!

"என்றபுருசன் பத்தக்குட்டியரு பட்டணம் போனவரு வாறாரு கச்சக்கட்டுத் தெரிய , ஏறக்கட்டினவேட்டி கமுக்கட்டுக்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுத்தக்குடை குடைக்குள்ள தெரியாம வெள்ளப்போத்தல், தலையில் முண்டாசுக்கட்டு இவருவாற நேரம் மசண்டையாப் போச்சு என்ற வாயிலயும் பாட்டுவரலாச்சு. அந்தப்பாட்டைத்தாங்கா நான் படிச்சுக்காட்டின அதுவும் இப்ப பொருத்தமாப் போச்சோ? காவாலிப்பாட்டு"

"ஏண்டா கந்தலிங்கம்! மாதரசு அக்க எண்டு அவக்கிட்டப் பிளீஸ் பண்ணிக்கதைக்கிறா? நீதானடா மூப்பு இந்தக்காலத்துக்கும் அந்தக்காலத்துப்பாட்டு பொருத்தந்தாண்டா. ராவையில நடக்கிற இருட்டுக்கூத்தில வேட்டி சேல தெரியாம மாறி உடுத்தம். அந்தக்காட்சிக்கானபாட்டுத்தானே அது. நாப்பது ஆண்டுக்கு முன்ன........ஆம்பிள்ள, பொம்பிள்ள வேசம் போட்டகாலம். இப்ப சண்டைக்கும் ஆண்வேசப் பொட்டையள்......................"

"இப்ப கிழவனாப் போகப் போறீங்க பேரன் பேத்தியயும் கண்டாச்சி இன்னமும் மாறிக்கட்டுற செயலக் காட்டலாமா? மதிமயங்கி நடக்கலாமா? எண்டு கேளு கந்தலிங்க அண்ண! வாசலக்கூட்டல்ல கடப்பால வந்திட்டீங்க!!"

"இப்ப கிழவன் என்கிறாவு. ராவைக்குக் குமரனாக்கிப் போடுறவ. பொண்டுகள் எண்டாப்ப போகத்த மறைக்கலாமா? அதெல்லாம் உடற் பயிற்சியெண்டு அறிவானுகள் அனுபவத்தில கண்டவனுகள் இதென்ன புதினமா? இப்பநடக்கிற சங்கதிகளப் பாக்கல்லையா? கந்தலி ங்கம்...................."

"அது மெய்தான் பத்தக்குட்டியண்ண எண்டாலும் பண்பாடு இல்லாம நடக்கலாமா? என்னகா மாதரசுக்க? கேக்கிறசரிதானே!! இந்த வேளையில படபடவென்று வெடிச் சத்தம் தெருவால சனங்களோட்டம். நாய்கள் குரைப்பு.

"ஊட்டுக்குள்ள வாங்க! ஊட்டுக்குள்ள வாங்க கெதியா!" என்று மாதரசு அழைக்க வீட்டுக்குள் புகுந்துவிட்டனர். பத்தக்குட்டியர் வீடு பட்டணத்தையண்டிய வீடு நாகரீகங்கொண்ட நடைமுறைவீடு. படித்த பிள்ளை குட்டிகளும் பருவக்குமர்களும் ரேடியோ, ரீவி என்றெல்லாம் படிப்போடு நாகரிக நடைமுறைகள், நாட்டு நடைமுறைகள் தெரியாத புள்ளைகள் ....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வெடியெல்லாம் கேட்குது. ஆக்களும் ஓடிப்போறாங்க. ரீவியா பாக்கிறீங்க? நிப்பாட்டுங்க! பாத்தையா கந்தலிங்கம்? இப்படிப்பட்ட படங்களையும் பாட்டுகளையும் காட்சிகளையும் காணக்காணக் கிழவிமாரெல்லாம் குமராகப் போயித்திருவாங்க............”

“ஏனோ கிழவன் மாரப்பத்தி சொல்லக்காணல்ல?”, “மாதரசக்க சொல்றத்திலயும் நியாயம் இருக்குத்தானே பத்தக்குட்டி அண்ண....”

“அடே நாசமத்துப்போனவனே ஊட்டுக்குள்ள இப்பிடியான கதையக் கதைக்கப்பிடாதெண்டுதாண்டா விடிஞ்செழும்பிற்று வாசக்கூட்டக்குள்ள கதைச்ச நாங்க அதுக்கிடையில் நீயும் வந்து, நாப்பது வருசத்துப்பாட்டப்படிச்சிக்காட்டி மனுசிக்கு உருவேத்திப் போட்டிருக்கறா.........?”

“மாதரசக்க அப்படியெல்லாம் உருக்கொண்டு ஆடையும் மாட்டா ஆட்டையும் மாட்டாவு. பேரே மாதரசி மறுகாப் பாக்க வேண்டியதுதானே ஊட்டுக்குள்ள நாலும் நடக்கும்”

“இதுகள உட்டுப்போட்டு வெடிக்கேட்ட கதைகள் வேலியால எட்டிக் கேளுங்க என்னவோ கதைக்கிறாங்க” என்று மாதரசி சொன்னதும் அடுத்த வீட்டில் நடைபெறும் பேச்சு கேட்டதும் கேளாததும்.

“அது நேத்துராவு நாலஞ்சி ஊட்டுக்குள்ள துவக்குக்காரனுகள் புகுந்து கெள்ளையடிச்சதாம், கற்பழிச்சதாம் அந்தக்கத பேச்செல்லாம் பரவாமலுக்கு அடக்கிறத்துக்காகத் தான் அதனோடு சார்பானவங்க வெடிய வைச்சிக்காட்டி வெருட்டுறாங்க. ஆரெண்டு நாம சொல்லலாம்? களவு போனாச் சொல்லுவாங்க? கற்பழிச்சாச் சொல்லுவாங்களா? நம்மிட இனத்தவனுகளுக்குள்ள ஒத்துமையில்ல அப்பிடி இப்பிடியெல்லாம் வேசம் போட்டு நல்லாவரக்குள்ள கெடுத்துப் போடுறானானுகளே!என்ன செய்யலாம் பழகிப்போச்சு” கந்தலிங்கம் எண்டதும் சுந்தரலிங்கம் நினைப்பு.

போரசிரியர் சுந்தரலிங்கத்தாருக்கு முத்தவெளியில் சாணியெறிய வைச்ச் சனியன்கள் ஏமாத்தினதாலதாண்டா..... என்ன நடந்தாலும் எட்டிப்பாக்கையும்புடா? எனனென்டு கேக்கையும் புடா? பொண்டுகள் சொல்லகேட்டா இந்தக்காலம்? இந்தக்காதால கேட்டு அந்தக்காதால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுற காலமில்லையா? அங்கபாரு ! கிடந்த குப்பையப்பத்த வைச்சாவு பத்தாமக் கிடந்தது "புகு புகு" எண்டு புகக்காடெழும்புது " நெருப்பில்லாத புக இதப்போல........"

"அதுக்கிடையில கந்தலிங்க அண்ணனும் வந்தாரு கதயக்கிளப்பிவுட்டாரு புள்ளகுட்டி இல்லா ஆக்களப் போல இதுகளையும் வெட்டையால கதைக்கிறதா?

"நான் தனியாள்தானே மாதரசக்க! மனுசி வெளிநாட்டில ஒரு பொடியன் ஊரோடி எங்கெண்டுந் தெரியா... என்னவோ! காக்கிச்சட்டக்காரனுகள் துவக்கோட ஓடிவாறானுகள்."

"ஓடிவாறானுகள் எண்டு சொல்லிக்கொண்டு நிற்கிறயா? எங்கெண்டான ஒளிக்காம.... உன்னால நாங்களும்..."

"ஓடியொளியுங்க, கந்தலிங்க அண்ண கோடிப்பக்கம்!"

"ஓமக்க இஞ்சயும் வாறானுகளோ என்னவோ? கோடிப் பத்தப்பக்கம் ஒளிச்சிக்கிட்டிருக்கிறன்....."

வெய்யில் சுடாதபடி சூரியன் மேலெழுந்து வருகிற பனியக்காய்ச்சுகின்ற பொழுது. சில வேளைகளில றவுண்டப்பும் நடக்கிறதான் "கடப்பச் ; சாத்திப்போட்டுவா! நான் புகையஊதிப்பத்த வைக்கிறன் " என்கிறார் பத்தக்குட்டியர்

சப்பாத்துக்காலால் கடப்புத் தள்ளுப்படுகிறது

"ஏய் மனுசி ஆரு குண்டு வைச்சது ..........."
"இல்லையா குப்பையப் பத்தவைக்கிறம்" - மாதரசி
"குண்டு வெடிச்சுட்டது ஆரு? வச்சதாரு?"
"இந்த வாசலைக் கூட்டின குப்பையக் கூட்டிப்பத்தவைச்சம் ஐய்யாமாரே! அது ஈரம் புகையிது"
"ஏய் நட கேம்புக்கு ...."
இந்த வேளையில் பின்னாலிருந்த கந்தலிங்கம்
"கடவுளே பாம்பு கடிச்சுப் போட்டுதே....! அய்யோ...!"
"அடே அது ஆரு புலி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாடா நாக்கி கொட்டியா எலியட்ட வறேங்"
"அய்யா! நான் கிழவனய்யா - பசந்து போய்..."
"அவங் கிழட்டுக் கொட்டியா, நாக்கி கொட்டியா குண்டு வெடிச்சது, நெருப்பு வைச்சது ஆரு நீதாண்டா"
"அவேங் லொக்கு நாக்கி கொட்டியா. ஏய் மனுசி நீயும் நட கேம்புக்கு"
"ஐயாமாரே! அவ என்ற பொண்டாட்டி ஐயா! அவன் கந்தலிங்கம் சொந்தக்காரன் ஐயா"
"அவேங் ஊடு கொய்யத? மொக்கட்டத மெத்தன உதயப்பாந்துர ஆவா? நட எல்லாம் கேம்பட்ட..."
"பயந்து ஒளிச்சிருந்தவனப் பாம்பு கடிச்சிப்போட்டுதாம் ஐயாமாரே! நாங்கெல்லாம் புள்ளகுட்டிக்காரங்க"
"எல்லாம் போ கேம்புக்கு புள்ள குட்டி புலிக்குட்டி"
"ஊட்டுக்குள்ள பால் குடிக்கிற குழந்தப்புள்ள ஐயா. எப்பிடி ஐயா நான் வாற..."
"புலிக்குட்டிக்குப் பால் குடுக்கிறது? எல்லாம் வா! ஊட்டுக்குள்ள எல்லாம் வா! ஊட்டுலயும்....

உள்ளிருந்து பள்ளி செல்ல வெளிக்கிட்ட பிள்ளைகள் எல்லாரும் வெளியே வந்து பயந்து நடுங்கினார்கள். இவற்றை ஓரளவில் அறிந்த பெரியவர்

"ஹரி ஹரி தாலா என்ட, ஒக்கேமே நரக்க மினுசு நெவே நயா ஹப்புவாலு".
"எல்லாம் நல்லமில்ல எல்லாம் கெட்டமில்ல" என்ட! என்ட!
"நயா ஹப்புவாலு அத்தத? "
"அபியணவா"! என்று சொல்லிக்கொண்டு சென்றனர்.
"ஏதோ நல்லவன் ஒருவன் வந்துவிட்டான். அப்பிடியும் ரெண்டு மூண்டு நல்லவர்கள். இல்லாட்டி நம்மளை உட்டுட்டுப் போவானுகளா? என்ன கந்தலிங்கம்,
பாம்பெண்டால் படையும் நடுங்குமாம் ---படைநடுங்கல்ல படையெடுக்குது"

"இவரென்ன அவனுகளைக்கண்டதும் பாம்பு கடிச்ச விசமும் போயித்தோ? ஓட்டோ ஒண்டப் புடிச்சிற்று வந்து ஆசுபத்திரிக்கு கொண்டு போங்கோ! இப்ப ஆசுபத்திரியில மருந்திருக்குது பயமில்ல..."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவசரப்படாதங்க மாதரசக்க! என்னால நான் புடிபட்டா உங்களையும் உடமாட்டானுகள் ஒளிச்சிருந்த பக்கம் வந்தா என்ற கதியென்ன? உங்கட கதியென்ன? மூளை செஞ்ச வேல. இடுப்பில கொழுவியிருந்த பூட்டுசியை எடுத்து பின்குதிகாலில குத்திட்டன் சின்னப்பல்லுப்பட்ட மாதிரி அதாலதானே உட்டுட்டுப் போறானுகள் நெருப்பில்லாத புகையாப் போச்சு". நம்மட காலம் என்றனர்.

"ஆமிக்காரன் எல்லாரும் கூடாதவனில்ல. நல்லவனுகளும் இருக்கிறானுகள். அரசாங்கம் என்டபடியா அவனுகளும் கடமையைச் செய்யத்தானே வேணும். ஆனா சாதிப் பகை கொண்டு அநியாயமாக நடக்கக் கூடாது. நம்மட ஊரிலேயும் நமக்கும் உரிமை உண்டுதானே. இதுக்கெல்லாம் நம்மடவனுகள் எல்லோரும் ஒத்துமையாகவேணும்" என்று பத்தக்குட்டியர் குட்டிப் பிரசங்கமாக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுத்தறிவெங்கே?

அந்தச்சிறிய கிராமம் மட்டக்களப்புப் பட்டணத்தை யண்டிய மணல் வெளியான முந்திரிகைகளோடு காயான் பற்றைகளையும் சூழவுள்ள தமிழர் குடியேற்றக் கிராமமாகும். பற்றைக்காடுகளும் தமிழர்களுக்கு இல்லாது போகுங்காலமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் உலகமெல்லாம் சுற்றிச் சுற்றி இடம் பெயர்ந்து வாழும் நிலைமை கூடிக்கூடி வரும் சூழ்நிலை அமைந்ததாலும் ஏழைச்சனங்கள் என்ன செய்வர்? அக்கம் பக்கமுள்ள கவனிப்பாரற்ற காணி பூமிகளைத் தமதாக்கிக் கொண்டாவது பிறந்த மண்ணிலே வாழப் பெரும்பாடுபடுகின்றனர்.

காயான்காடு என்ற பெயரோடுதான் பட்டணப்பக்கமிருந்தும் பிறவூர்களிலிருந்தும் அங்கொன்றும் இங்கொன்றுமாக குடியேறிக் கொண்டு வந்தனர். பழங்காலத்தில் சிதைவுண்ட சிறிய கோவிலும் இருந்தது. அதனை வரப்பிரசாதமாகக் கருதிக் கொண்டு தாடிவளர்த்திருந்த அறுபது வயது ஆறுமுகசாமி முயற்சி மேற்கொண்டார்.

கூரையில்லாதிருந்து பாழடைந்திருந்ததன் மேல் பந்தலிட்டு இலைகுழைகளைப் போட்டு முக்கோண வடிவமான ஒரு கருங்கல்லை வைத்துத் திருநீறுபூசி பொட்டிட்டுப் பூமாலை சாற்றி ஆறுமுகசாமி அலங்கார வேலைகளைச் செய்து கோவில் என்னும் நிலைக்கு கொண்டு வந்தார். முன்னாலே வழியமைத்து உண்டியலையும் வைத்துக் கொண்டார்.

"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற மூதுரை மொழியைப் பல்லவியாக்கிப் பிரசாரம் பண்ணி பத்தெட்டுக் குடும்பத்தினரை சொத்துப்பத்து சேர்க்கத் துணையாக்கிக் கொண்டார். சிந்தனைத் தேரிலேறிச் சவாரி செய்தார்.

"புள்ளையார் கோவில்என்டால் வருமானங்கூடுதலாக வராது. காளியம்மன், மாரியம்மன் என்டால் பேயாட்டங்கள் ஆட்டலாம், மாடு, ஆடு, கோழிகளைப் பலியாகக் கேட்கலாம். பாக்கல்லையா? பரதேசிபோல வாழ்ந்த பக்கத்துாால, சாத்திரம் சொன்ன கோவிந்தன் குருக்களாக மாறிப் பணக்காரன் ஆகியிருப்பதை" என்று நெஞ்சுத் தொலைக்காட்சியில் நிழற்படமோட்டினார்.

கோவிந்தன், காளியம்மனையும், மாரியம்மனையும் வாய்ப்பாடமாக வைத்துக்கொண்டு அரை குறைச்சாத்திரத்தக்காட்டி நேத்திக்கடன், கிரகப்பகை என்டெல்லாம் ஆண்டுக்காண்டு பொருள் பண்டம் கூடுதலாக சேத்ததையும் நூல் போடுதல், அட்சரம் கட்டுதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சனம் பார்த்தல், கழிப்புச் செய்தல் முதலியவற்றால் பணக்காரக் கோவிந்தக் குருக்கள் எனப்படுவதயையும் எண்ணி எண்ணி சிந்தனை தேர்க் குதிரைகளைத்தட்டி மேலும் ஓட்டங்காட்டினார். செயல்பட்டார்.

நானும் ஒரு சாமி பேர் கொண்டவன் தானே! சாத்திரந்தான் தெரியாது தந்திரமான மந்திரங்கள் எண்டான தெரியுந்தானே !எனச் செயல்படலானார். பிள்ளையார் கோயிலுக்குப்பக்கத்தில் ஒருபக்கம் காளியம்மனையும் மறுபக்கம் மாரியம்மனையும் வழிபடலானார். அரசவுதவிகளையும் கோவில் பேரால் பெற்றார். பிள்ளையார் கோவிலையும் ஓரளவில் பகட்டுக்காட்டும் அளவில் பலருடைய பணத்தில் சிறு தொகையையும் செலவிட்டார்.

மேலும்" பாம்பெண்டால் படையுமஞ்சும் " என்டதையும் மறந்து போன மடையனாப்போனனே!" என்பதையும் சித்தத்துள் நிலை பெறச் செய்து" "நாகதம்பிரான் " என்ற கோவிலையும் உதயமாக்கினார். இப்போது நான்கு கோவில்களையும் பேரப்பிள்ளைகளின் உதவியோடு பரிபாலிக்கும் ""ஆறுமுகசாமி" யானார். பலருக்கு அறிமுகசாமியுமானார்,

ஆறுமுகசாமி என்றால் அப்பகுதி மக்கள் மதிப்புக் கொடுக்கும் அளவில் நடந்து கொண்டுதான் வந்தார். என்றாலும் தான் நினைத்த அளவில் கோவிந்தக்குருக்களைப் போல் கூடிய பணக்காரனாகிக் கொள்ளவில்லை என்ன செய்யலாம் எனச் சிந்தித்தார்.

இடையிடையே "கனவு கண்டேன் கனவு கண்டேன்" என்ற கதையைக்கட்டியும் கோவிந்தக்குருக்கள் காளிகோவிலுக்கே கூடிய வருமானம் சேர்த்தார். ஆடு, மாடு, கோழிகளோடு, காணிபூமிகளையும் காளி கோவிலுக்கு ஒப்படைத்தனர். இதனால் மனம் வருந்திக்கொண்டிருந்த ஆறுமுகசாமிக்கு ஆனந்தமான செய்தியொன்று அயல் நாட்டில் நடப்பதாகக் காதுகளில் இரைச்சலிட்டது. கரைச்சல் வாரமலுக்குப் பாப்பம் என்று துணிந்தார். பொய்யெண்டாலும் பக்தி கூடட்டுமே.

"ஏன் என்ட காயான்மடுப்புள்ளயாருக்கு ரோசமில்லயா? வழிகாட்டிட்டாரு! நாளையில் இருந்து புதுமையொண்டு நடக்கத்தான் போகுது. உடைவுள்ள தும்பிக்கை புதுப்புள்ளையாரு வேணும்" என்றெல்லாம் வாய்க்குள்ளே முணுமுணுத்துக்கொண்டவர். பட்டணத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்மைத் திருவிழாக் கடைக்காரனிடம் சென்று ஓரடிக்குச்சிறிது உயரமான பலவர்ணம் பூசிய உள்ளே வெற்றிடமானதும் தும்பிக்கை வாய்க்கிடையில் ஊசிபோன்ற துவாரங் கொண்டதும் ஆகிய புதிய பிள்ளையார் சிலையை பலிப்பீடத்தடியில் வைத்துப் பதம் பார்த்துப் பரீட்சித்து வெற்றியுங் கண்டார். அன்று பலரிடம் தான் கண்ட கனவென்று ஒன்றைக் கூறி அக்கம் பக்கத்தோடு மாவட்டமெல்லாம் பரவும்படி செய்து விட்டார்.

"ஆறுமுகசாமியின் காயான்மடுப்பிள்ளையார் பால்குடிக்கிறாராம்."

"ஆறுமுகசாமியின் காயான்மடுப்பிள்ளையார் பால்குடிக்கிறாராம்" தந்தியில்லாக் கம்பியான வதந்தி காட்டுத்தீயையும் மிஞ்சி விட்டது. எங்கெங்கும் பரவி மூலைமுடுக்கெல்லாம் பரவிய செய்தி பத்திரிகையாளர்க்கும் கொட்டையெழுத்துச் செய்தியைக் கொடுத்தது. பத்திரிகை நிருபர் அழகேசன் முதலியார் போட்டோக்காரனையும் கூட்டிக்கொண்டு சனக்கூட்டவரிசையையும் பத்திரிகையில் பளிச்சிடச் செய்தார்.

ஆறுமுகசாமியின் ஊதுகுழலான ஐயம்பிள்ளை உதவி ஆள் அடிக்கடி சிறுகரண்டியால் பிள்ளையாருக்குப் பாலூட்டிப் பக்திப்பரவசமானார்.

வரிசை வரிசையாக ஆண் பெண் பிள்ளைகள் என்று கூட்டம் அதிகரிக்க அதிகரிக்க, பாலூற்றும் போது பக்கமிருந்த உண்டியலும் பணநோட்டுகளால் நிரம்பிக்கொண்டே இரண்டு மூன்றானது. பத்து, இருபது, ஐம்பது, நூறு, ஐநூறு, என்றெல்லாம் ஆறுமுகசாமியின் பாலுக்கான ஊண்டியற்காசு பல்லாயிரமானது. வாயிலிணைந்த தும்பிக்கையருகிலே சிறிய கரண்டியால் பால் ஊட்டப்பட்டது. பார்த்துக் கொண்டிருக்கப்பால் குறைந்து குறைந்து உறிஞ்சப்பட்டது.

"அரோஹரா! காயான்மடுப் புள்ளையாருக்கு அரோஹரா!! பால்குடிக்கும் புள்ளையாருக்கு அரோஹரா!!! என்றெல்லாம் ஓசைகள் வானைப் பிளந்தன. இரண்டொரு தினங்களில் ஸ்பீக்கரும் பூட்டப்பட்டது. வெளிநாட்டிலிருந்து வந்த வெள்ளைக்காரர் சுற்றுலா ஊர் சுற்றிகள் கூட அதிசயப்படும் ஆண்டவன் நிகழ்வாக இங்கிலீசிலும் பேசிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெரி வெரி வொண்டர் புள் இன் சிறிலங்கா ரமிள் ஹிண்டு ரெம்பிள்", "Very very wonderful in Sri Lanka Tamil Hindu Temple" எனச் சொன்னவர்கள் ஆராய்ச்சியிலீடுபடத் துவங்கினர்.

எட்டுப்பத்து நாளாக இச்செய்தி காதுக்கெட்டியும் எட்டிப்பார்க்கவோ கிட்டமுடுகவோ கோவிந்தக்குருக்களின் பொறாமை கோபாக்கினியாக மூண்டது.

இது நடக்கக்கூடியதா? நடக்கவும் கூடும்! நம்பிக்கை தானே பெரிசு" என்றிருக்கும் போது காளியம்மன், மாரியம்மன் பந்தலிலே பேயாட்டம் ஆடும் பேர்வளிகள் கோவிந்தக் குருக்களோடு குசுகுசுப்பு.

"ஆறுமுகசாமியின் சாமி பேசுது அவருக்குப் பொஞ்சாதி இல்லாட்டியும் புள்ளகுட்டிகளும் பேரப்புள்ளயளும் நகநட்டுகளோடு ஜொலிக்குதுகள். நம்மட கோவில் மதிப்பு குறஞ்சி போகுது." எண்டெல்லாம் கவலப்படலாமா? கவலவருந்தான் எண்டாலும்........

"எனக்கென்ன பேயாடி, நம்மட காலம் வரட்டுமே! நீயெல்லாம் கட்டுச் சொல்றத்த நாலஞ்சு பங்காகச் சொல்ல வேணும், தீக்குளி மூட்டித் தீப்பாயிறத்தையும் ஆடு, கோழி வெட்டிப்பலி குடுக்கிறத்யையும் தூந்து போகாம ஆவேசமூட்டுவம் "அதுகிடக்க இதிலெண்டா நம்பிக்கையில்ல. பால் குடிப்புள்ளயர்கத பரவிற்று. நாம நம்பல்ல எண்டா, நமக்கும் மதிப்பில்ல. நாளைக்கு நீ மட்டும் தனியப் போய், ஆள்சனநடமாட்டங்குறைஞ்ச புறகு புள்ளையாரைத் தூக்கிக் கொஞ்சம் தள்ளி வைச்சிப்பாரு. அதுக்குப்புறகு அசுப்பில்லாம நிண்டு நடக்கிறத்தப்பாரு! புள்ளையாரு ஊத்திற பால் எவ்விடத்தில உறிஞ்சப்படுதெண்டெல்லாம் பாரு நல்லாக! நான் வந்தா நம்மட சமயத்தில பொறாமக்காரன் என்பாங்க " என்றெல்லாம் கோவிந்தக் குருக்களின் உபதேசம். தும்பிக்கை நம்பிக்கை தொடரச் சேர்ந்து கொள்ளுவம் பொய்யெண்டு கண்டாலும் சொன்னாக் கோபிப்பானுகள்.

அடுத்த நாள் உதயப் பொழுதிலே ஆராய்ச்சிக்கிடமானது பால் குடிச் செய்தி. சடாமுடி ஆசாமிகளும் சாலம் போட்டனர். அதற்கிடையில் ஆறுமுகசாமி குடும்பத்திலே குழப்பம். பிள்ளையார் குடிக்கிற பால் உருவ மண்ணிலே உறிஞ்சப்படுவதால் நாளுக்கு நாள் பிள்ளையர் சிலை மாறிக்கொண்டிருப்பதைக் கண்டறிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோது போலிருந்த சிலை பாலூறிஞ்சப்படுவதால் ஈரமாகிப் பாரங்கூடி சிதைவுறும் நிலை கொள்ளுமென்பதாலே ஆறுமுகசாமியின் மூளையும் பிடிபடாமல் தொழில் காட்டிப்பணம் கூடியதால் குழப்பம். கோவிந்தக்குருக்களும் ஓரளவில் பொய்யென அறிந்தபின்பும் அறியாத வகையில் நடந்து கொள்ள எத்தனித்தார் என்றால் பார்க்கலாந்தானே!

"நம்மட பல்லக் குத்தி நாத்தம்" எண்டு காட்டாலாமா? இந்து சமயம் எண்டா எண்ணப்படி நடக்கிற சமயமாக்கிப் போட்டாங்களே! ஆறுமுகசாமிக்குக் கோவிந்தக் குருக்கள் மேல் பொறாமை, கோவிந்தக் குருக்களுக்கு ஆறுமுகசாமிமேல் பொறாமை. பொறாமையும் பொறாமையும் நெஞ்சுக்குள்ளே தான் நெருப்பாக எரிந்து கொண்டிருந்தன. அது பொய்யென்றால் இதுவும் பொய்யாகி அம்பலமாகிவிடுமே. என்ற அச்சமும் இருவரையும் ஆட்டிப்படைத்தது .

ஆறுமுகசாமி பால் குடிசாமியாரின் பக்திபெருகிப் பணக்காரனாகிக் கொண்டார். பின் சனக்கூட்டம் கூட்டமாகி வந்தமை குறையலாச்சு. கோவிந்தக்குருக்களும் பேயாடிகளும் குசுகுசுக்கதையால் சனக்கூட்டம் குறையத்தான் செய்தது. பட்டணப்பக்கமெல்லாம் பகுத்தறிவுள்ள இளைஞர் கூட்டமும் வாய்களை ஓலிபெருக்கியாக்கியது. அதற்குள்ளும் சமயப்பற்றுக் குடும்பத்தினர் பூட்டுப்போட்டனர் வாய்களுக்கு புராணங்களில் எடுத்துக்காட்டி.

ஆறுமுகத்தார் என்று சொன்னவார்கள் கூட ஆறுமுகசாமி என்று மதிப்புறச் சொல்லும் அளவிலே நடத்தையிலே முன்னேறிக் கொண்டார். இப்போதையத் தோற்றம், நீண்டு வளர்ந்த தாடி, தலையை மூடிய சடாமுடி எதுவும் சிறிய பொருளை உள்ளே ஒளித்துவைத்துப் பின்னர் எடுத்துங்காட்டவும் சன்மானப்புதுமையாக அருட்கொடை கொடுக்கவும் எண்ணம் உதயமாயிற்று. பிறதேசமிருந்தும் இந்தக் கால நிலையில் காணாமல் போனவரைத் தேடவும் புதைகுழிகள் தோண்டவும் தேடிவருவர். நேர்த்திக்கடன்களோடு ஓடி வருவர். இன்னமும் சொஞ்சப்பணங்கூடுதலாகச் சேரும் அதுக்குப்புறகு ஆலோசிச்சு நடப்பம் என்றெல்லாம் திட்டமிட்டுத்தனக்கு உதவியான பேரப்பிள்ளைக்கும் பழக்கிக் கொண்டே வந்தார் அதுவும் கெடுகாலமாச்சு. குமரப்பருவக் கோளாறு. குடும்பத்தில் எத்தனையோ விதமான கோளாறுகள் எதிர்பாராமல் ஏற்படத்தான் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவ பருவம் உணர்ச்சி கூட்டும். என்னதான் செய்தாலும் மனிதனுக்குள்ளே உருவ, பருவ உளவேறுபாடுகள் இருக்கத்தானே செய்யும். பேத்தியான குமர்ப்பிள்ளை பெரியவளாகி ஆறேழு ஆண்டுகள் கடந்தும் கட்டிக் கொடுக்காததால் ஆறுமுகசாமியாரின் ஒருபக்தனோடு இருந்த நகைநட்டுகளையெல்லாம் எடுத்துக் கொண்டு ஊரைவிட்டோடினாள். இதனையறிந்த கோவிந்தக் குருக்கள் குதூகலமடைந்தார் என்றாலும் காட்டிப் பேசினால் வண்ணக்குமார் பகை கூடி நம்மடைய தொழிலும் கெட்டுப்போக பகுத்தறிவாளரை வளர விடக்கூடாதெனத் துணிந்தார்.

ஆறுமுகசாமியின் குடும்பச் சீர்குலைவால் பால்குடிச் சாமியாரின் பரமரகசியச் செய்தியான புதுமை பலரும் அறியலாச்சு. நம்மட கோயிலுக்குள்ள ஆரோ தீட்டுக்காரக்கள் வந்து எல்லாத்தையும் பாழாக்கிப் போட்டாங்க என்று மன வேதனைப் பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுக்கு வழிகள்

பங்குனி மாதக் கடும் வெயிலில் உச்சித்தலை மொட்டையென்றால் பார்ப்போர்க்கு பளபளத்த கண்ணாடிதான். "பங்குனி மாதம் பாதையால் போவோரைப் பார்த்திருந்தோனும் பாவியாம்" அத்தனை கொடுமையான கடும் வெய்யில். மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவை, கல்முனை என்றெல்லாம் பழக்கப்பட்டவர்க்கல்லவா தெரியும் பங்குனி மாதச் சூரியன் சூடு.

அந்த நாள்களில்தானே வேளாண்மை அறுவடையும் சூடடித்தலும். விவசாயக் கூலியாள் வீட்டிலும் மகிழ்ச்சியால் உடம்பு வடமோடித் தென்மோடிக் கூத்துக்கான தாளம் போடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபாதையிலும் கூத்தாட்டம் கூடும். சின்னஞ்சிறு பிள்ளைகள் கூட்டம் எல்லாம் தருப்போட்டு உருக்காட்டி ஆடும். இப்படியான நிலையில் அன்றொருநாள்.

பட்டணஞ் சென்று நெல்லை விற்றுப் பணமெடுத்து வங்கியில் ஈடு வைத்த நகையெடுக்கப் போனவர் பணமுடிச்சுடன் அரை வெறியாட்டத்தோடு வருகிறார் ஆறுமுகனார். அவர் பாட்டுக்கு பாட்டுப்பாடிக் கொண்டு வருகிறார். தலையிலே தலைப்பாக் கட்டு, இடையிலே ஏறக்கட்டிய வேட்டி, இடுப்பிலே வெற்றிலைக் கடுதாசிமடிப்பு, கையிலே மாடுகன்று சாய்க்கின்ற அடிகம்பு. அந்தக் கம்பு ஆறுமுகனாருக்கு கூத்தாடும் கைக்கட்டாரியானது. பாட்டும் ஆட்டமும் பகிடியான பேச்சுவார்த்தையுடன் வருகிறார். படிக்கின்ற பட்டணப் பட்டதாரிக்கு அதுவெல்லாம் ஆராய்ச்சிக் கூத்து.

"கோழி மேய்க்கிற எண்டாலும் கோர்ணமேந்தில தான் மேய்க்கணும்" என்டாங்களே, இப்ப எப்டி பாத்தயளா? "வாசக்கூட்டலியும் வங்கியொண்டில் கூட்டு", "இல்லையெண்டா, சங்கத்தில ஓடிப்பண்றவனாகப் போ" அப்பிடியெண்டா அஞ்சாறு வருசத்தில அடுக்குமாடி ஊடு கட்டி அழகு பாக்கலாம், இபபென்னண்டா அதையும் உடப் பெரிய பணக்காரனாக இந்தக்காலத்தில வங்கிக்காரன நம்பி வட்டிக்கட வை. இதையெல்லாம் நானிப்ப ஆரிட்டச் சொல்லட்டும் '!.... காலம் மாறிப் போச்சோ? கடவுள் இதுகளக்கண்டு கண்ணில காணாம ஓடி ஒளிக்கிற காலமாச்சோ. ஊரெல்லாம் ஊடுவாசல்களைப் பார்க்க கோயில்கள்தான் கூட. பார்த்த பக்கமெல்லாம் கோயில் பார்வைக்கும் பகட்டுக்குந்தானோ? பாடுபடா உழைப்புத்தானே. இதையெல்லாம் பின்பக்கமாக வந்த அவருடைய மருமகன், மகளுடைய புருஷன் கேட்டவண்ணம் வெட்கத்தோடு மௌனமாக வருகிறான். ஈடுகள் எடுக்கப் போன மாமா மகளுக்கும் நெல்லு வித்த காசில் ஒரு நகையெண்டான வாங்கித்தான் வருவார் என்ற எண்ணத்துடனே மருமகன் வந்து கொண்டிருக்கிறான்.

சாய் பொழுதாகி விட்டது. நாலு மணிப்பொழுதிலே வயல்வெளிகளில் இருந்து வீடுவாசலுக்குப் போகும் சனக்கூட்டம் தெருவெங்கும் "மாமன் முன்னாலே மருமகன் பின்னாலே" என்று தெரிந்தவர் பரிகாசம் பண்ணுவாங்களே என்று மருமகன் வேறு குறுக்குவழியாலே வீட்டுக்கு ஓடிப்போகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வங்கியிலே வச்ச ஈடெல்லாம் எடுத்துக்கொண்டு வாறாரு" என்ற சந்தோசத்திலே தடபுடல்கள், வழிபார்ப்புகள், வருவோரை இடையிலே தங்குமடமான குட்டிச்சாராயத்தவறணைகளும் இடை மறிப்பதுமுண்டு. அப்படியான குட்டித்தவறணைகளில் புருசன் இல்லாதவள் போல புருசனை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டவள், அவளது தவறணை முக்கிய பேரெடுத்த தவறணையாகும். தாயும் பிள்ளைகளுமாகக் குட்டிகள் போடுவதுமுண்டு. இதெல்லாம் எல்லாருக்கும் நல்லாத் தெரியாது.

அந்த ஊர்க்கிராம விதானையார், ஒரு சில போடிமார், ஒரு சில தறுதலைகள் என்போர் குட்டித்தவறணைகளுக்கு உதைகால் கொடுப்பவர்களுக்கும் தெரியும்.

இங்கேயும் ஆறுமுகத்தார் வீட்டுக்கு வரும் வழியில் பாணும் வட்டரஸ்க்கும் தேனீரோடு சாராய வியாபாரமும் ஆன மாதவி வாசலில் ஒத்தக்காலில் பாவாடை சட்டையோடு நிற்கின்றாள்.அவளை எண்பதுவயதுக் கிழவனும் எட்டிப்பாராமல் போகமாட்டான். அதனால் ஆறுமுகத்தார் மனுசி நேசம்மா இடைவெளிக்கு வந்துவிட்டா.

வீட்டுக்குப் போனதும் சண்டைதான் நடக்குமோ என்ற மனப்பயமும் அதற்குள் ஒரு "ட்றாம்" வாய்க்குள்ள ஊத்திற்றுப் போக எத்தனங் கொண்டார் ஆறுமுகத்தார். நேசம்மா பிள்ளை குட்டிகளையும் கூட்டிக்கொண்டு முன்னே வந்துகொண்டிருப்பதையும் கண்டார்.

காலையும் உயர்த்தி மடிகாலில் சாய்ந்து நின்ற மாதவி வரவிருந்த பழைய பாக்கியெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டிருக்க நேசம்மா வந்து மோசஞ் செய்து விட்டாள்.

ஆறுமுகத்தார் அவ்வளவு மோசமான ஆளுமல்ல நல்ல உழைப்பாளி, முல்லக்காரன் நிலையோடு ஓரளவில் மட்டக்களப்பில் சின்னப்போடியார் எனலாம்,

போனவருஷம் மழையில்லாது வேளாண்மையெல்லாம் கதிர்குடலைக்குள் தீஞ்சி போனதால் வைத்த ஈடுகள் தாலிக்கொடி, காப்பு முதலியன மீட்டுக்கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வட்டிக்காசென்டாலும் கட்டிப்போட்டு வாங்க" என்று நேசம்மா கட்டளையிட்டும் கேட்டாரில்லை.

"வருசம் முடிய முன்ன என்னத்துக்கு வட்டிகட்டுற? ஒரு வருசம் முடிஞ்சபுறகு வங்கியால காயிதம் வரும், அதுக்குப்புறகு எடுக்க ஏலாட்டி வட்டிகட்டுவமே" இது இடையிடையே ஆறுமுகத்தார் பல்லவி, இப்போது நடக்கப்போறவழி...? என்ற யோசனையொடும் முகம் வாட்டத்தோடு

"நேசம்மா இந்தாருக்கு நெல்லு வித்தகாசெல்லாம்" என்று சொல்லி மடியில் வெற்றிலைக்கடுதாசிக்கடியில் இருந்த கட்டுக்காசைக் காட்டாமல் அப்படியே கொடுத்தார்.

"என்ன? வங்கியில் வைச்ச ஈடுஎடுக்கல்லயா?

"வைச்ச ஈடு இருந்தாத்தானே வங்கியில எடுக்க"

"வங்கியில வைக்காம வேறெங்க வைச்ச நீங்க?

"நடநட றோட்டில சண்ட புடியாமலுக்கு ஊட்டபோய்க் கதைப்போம்"

என்று சண்டைபிடியாமல் வீடு போனதும் உள்ளதைச் சொன்னார். காட்சிக்கதை போல.

"பட்டணத்து வங்கியிலே ஈடு எடுக்கப்போய் ஈட்டுத் துண்டைக்காட்டினன்."

"ஓ!..ஓ!! நோட்டீஸ் அனுப்பினமே ஏன் உடனே வந்து வட்டியாவது கட்டியிருக்கலாமே அதெல்லாம் போனகிழமை வித்தாச்சி" இதைக் கேட்டதும்

"என்ன அய்யா சொல்றீங்க? ரெண்டு வருசமாகல்லே. ஒருவருசமும் சொச்சமுந்தானே" ஆறு பவுணும் அரைக்காப்பவுணும் தாலிக்கொடி, மூண்டு பவுண் காப்புக்கூட்டம் புள்ளையிர. நாங்க என்ன காசு கூடவா எடுத்தம்?"

"அதப்பத்தி எங்களுக்குத் தெரியாது. சொன்ன தவணையில சாமான் எடுக்காட்டி வெந்தீசில போட்டு வித்துப் போடுவம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதென்ன அய்யா அநியாயம்? நாங்க போனவருசம் வெள்ளாம நட்டப்பட்டோம். இந்தவருசம் பங்குனி மாசம் விளைஞ்சத்தை வெட்டி அடிச்சிக் கொண்டு புதிரும் சாப்பிடமுதல் காசோட வந்தநான். தாலிக்கொடி கூட இருந்தும் நான் எடுத்தது நாலாயிரம் ரூபாத்தானே! புள்ளையிர காப்புக்கூட்டத்துக்கு ஒருபவுண்காசும் வோணாம் எண்டு அரப்பவுண் காசு ரெண்டாயிரந்தானே எடுத்தன். அப்பிடி எடுத்த திருப்பி எடுக்கவேணும் எண்டுதானே அய்யா"

"அதெல்லாம் கதைச்சிப்பிரயோசனமில்ல வெந்தீசில ஆரோ வாங்கிற்றுப் போயிற்றாங்க"

"வங்கிய நம்பித்தானே வட்டிக்கடையிலே வைக்கப் போகல்ல பதினஞ்சு மாசம் ஆகல்ல வித்துப் போட்டையளே போன தைக்கு வைச்ச ஈடு இந்த வருசம் பங்குனி வெள்ளாம வெட்டுக்கு எடுக்க ஓடிவந்தனே"

"கொள்ளையாகக் கதையாமப்போ! இஞ்ச பாரு உனக்கு நோட்டீஸ் கடிதம் அனுப்பின பதிவு இருக்கு" எனக்காட்டினான். இந்த வேளை அங்கு வந்த நம்மட பெரிய போடியாரின் மகன் சின்னத்துரை கூட்டிக்கொண்டு வெட்டையால வந்து வங்கியில் நடக்கிற பரமரகசியங்கள் நல்ல விளக்கமாகச் சொன்னான் நேசம்மா. வட்டிக்கும் வட்டி குறுக்கு வழிகாட்டுறவனுகள் பங்குதாரராக இருக்கிறானுகளாம் பட்டணத்தில.

"பத்தாயிரம் ரூபா நகையக் கொண்டு நாம ஆயிரம் ரூபா எடுத்தா ஈடு மூளாட்டி அவனுகளுக்கு வாசிதானே! நமக்கு நோட்டீஸ் அனுப்பின மாதிரி பதிவு வைச்சிக்காட்டுவானுகள்".

நகை விற்பனவு எண்டு விளம்பரம் போட்டவுடனே வட்டிக் கடைக்காரனுகளுக்கு விற்கப்போற நகையின்ர வரலாறெல்லாம் பரமரகசியமாக வங்கி உதவி பெற்று வருபவன் அறிந்து கொள்வான். விற்பனையில் நகைவாங்க "ஓடியிலே" காசும் எடுத்திருப்பான். ஏலம் நடைபெறும் போது அரைவாசிக்குமேல் இலாபம் எடுப்பானுகள், பங்குவைப்பானுகள் என்டெல்லாம் சின்னத்தரை விளக்கமாகச் சொன்னான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைகைகளும், குறியீடுகளும், விற்பனையின் போது வங்கியாளன் பங்காளிக்கு விளங்கும். அதற்குத்தக்கதாக அவன் மற்றோருடைய உதவிகளையும் பெற்றுச் சாமானை வாங்கிவிடுவான். வங்கியாளனுக்கு வட்டிக்கடையிலே பங்கு உண்டோ தெரியாது. சன்மானமெல்லாம் கூடுதாலாகக் கிடைக்கும். காசோலைப்புத்தகம் கண்டபடி எழுதப்பட்டு பிடிபடாமல் நடந்து கொள்வர்.

ஒரு முறை பத்திரிகையில் வந்த செய்தி “தங்கநகைகள் எல்லாம் போலிநகைகளாக வங்கியிலே கண்டுபிடிக்கப்பட்டதாம்” இப்படியெல்லாம் விளையாட்டு விடுபவர்கள் ஏழைகளின் வயிற்றிலும் அடித்து வட்டிக்கு வட்டி உழைக்கிறார்கள். வங்கியிலே சிலருக்குச் சலுகைகள் கொடுத்து ஆதாயம் தேடி அந்தரங்கமாக நடக்கிறார்கள் என்றெல்லாம் விபரங்களை சின்னத்துரை செய்தியால் ஆறுமுகத்தார் குடும்பம் அறிந்து கொண்டு, புதிய நகை வாங்க அடுத்த நாள் புறப்பட எண்ணியிருந்தனர்.

புதிரும் சாப்பிட மனமில்லாம விடிய விடியக் கவலைப்பட்டு விடிந்ததும் பட்டணம் செல்கின்றனர்.“ ஆறுமுகத்தார் சின்னத்துரை செய்தியுடன் சிந்தனை செய்தார். வங்கியாளர் சிலரின் செய்திகளோடு விட்டுவிடாமல் சங்கங்களிலும் என்னவிதமாகப் பிடிபடாமல் புத்தியாக நடக்கிறார்கள் வேளாண்மைச் செய்வோரையும் சங்கத்து அங்கத்தவர்களையும் ஏமாற்றச்சிலர் வழிகாட்டியாக நின்று திசை திருப்புகிறார்கள்”.

அடுத்தநாள் காலை “ஆறுமுகத்தாருக்கு இந்தப் போகம் நல்ல விளைச்சலாம்” என்று சொல்லிக் கொண்டே வாசலாலே வந்தான் மச்சான் போடியார் மகன் தம்பிப்போடி “நானும் வாறன்” என்று. தம்பிப்போடி “ஏ.எல்” படிக்க ஏலாமல் “ஓ.எல்” லோடு வீட்டுக்கு ஓடிவந்தவன். பட்டணத்து விஷயங்களை ஓரளவில் அறிந்தவன். நெல்லுச் சங்கத்திலே தலைவர் போடியார்தான். அதனால் மகன் தம்பிப்போடி மனேச்சராகப் போக வசதியேற்பட்டது.

அவர்களுக்கு உதவியாக ஏதும் செய்து வந்த வியாபாரி ஆதம்பாவா பட்டணத்தையடுத்தாப்போல் சின்ன அரிசி மில்லும் வைத்திருந்து அரிசி வியாபாரமும் ஏற்றுமதியும் செய்து ஓரளவு முதலாளியாகிக் கொண்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிப்போடி மனேச்சர் ஆனதும் ஆளைக் கைக்குள்ளே அகப்படுத்திக் கொண்டான். இரண்டு வருசத்தில் இலட்சாதிபதியாகினான் ஆதம்பாவாவுக்கு ஆபத்தாண்டவனாகினர் தகப்பனும் மகனும். "அதனையெல்லாம் அப்போதறியாமல் பிறகு அறிந்தே மறியலுக்குப்போகமுன்பே விலகிக் கொண்டனர். தலைக்கு வந்தவை தலைப்பாகையோடு போனமாதிரி ஆச்சுது" என்று வினவுவோருக்கு விடையளிக்கும் தம்பிப்போடி ஆறுமுகத்தாருக்கும் அறிவுரை கூறும் அளவுக்கு அனுபவம் பெற்றுவிட்டான்.

புது நகை வாங்கப் போகும் செய்தி அறிந்ததும் உதவி செய்ய ஓடோடிவாறேன் என்றான். சின்னத்துரை சொல்லாததையும் நான் சொல்லி விளங்கப்படுத்தினபுறகு நகைவாங்கப்போங்க என்று வங்கியாளார் சிலரின் தந்திரங்களை விளக்கினான்.

ஆறுமுகத்தார் குடும்பம் இபபோது மோசடி நடைமுறைகளை ஓரளவில் அறிந்து கொண்டது. சின்னத்துரையும் தம்பிப்போடியும் சொன்னவை யாவும் அந்தரங்கமானவை ஆனதால் இலகுவில் கண்டுபிடிக்க முடியாது. வங்கியில் இருப்போனுக்கு வட்டிக்கடையில் இலாபப்பங்கு இரகசியமாகவே சேர்ந்து கொண்டிருக்கும். அடுத்தடுத்த பேர்வழிகள் அறியாமலே தான் இவை நடக்கும். ஆறுமுகத்தார் நகைகள் கால்வாசிக்காசுதான் வட்டிக்காசுடன் கணக்காகும். மிகுதி முக்கால்வாசியும் வெந்தீஸ் விலையிலே மறைந்து கொணடிருக்கும் தந்திரத்தாலேதான் அந்தரங்கமாக நடப்பவை. ஆறுமுகத்தார் குழுபுதிய நகைகளை வாங்க கடைத்தெருவில் வந்து கொண்டிருக்கின்றது தம்பிப்போடியும் சின்னத்துரையும் சேர்ந்தே நகைக்கடைகளில் நடமாடுகின்றனர்.

ஆறுமுகத்தாரும் மனைவி நேசம்மாவும் மக்களுடனும் சேர்ந்த கூட்டம் நகைக்கடையோரங்களால் செல்லும் போது நல்லம்மாவின் தாலிக்கொடி "நான் இங்கிருந்து பளபளப்புக்காட்டிக்கொக்டிருக்கிறேன் பார்க்கல்லையா?என்று கேட்பது போல் ஆறுபவுணும் அரைக்காப்பவுண் தாலிக்கொடி ஷோக்கேசிலே இருந்து கொண்டு நல்லம்மாவைக்கண்டு நகைப்பது கேட்பது போலவும் காட்சி நடக்கிறது. கடை கடையாகப்பார்த்தவர்கள் குறிப்பிட்டகடையில் நல்லம்மாவைத்தாலிக் கொடி கூப்பிடுவது போல் கடைக்காரர் அழைக்க உட்செல்லுகின்றனர். சின்னத்துரையும் தம்பிப்போடியும் சேர்ந்து கொண்டனர்.வங்கிக்கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவும் நகைக்கடைக்குள் புகுந்து புறப்பட்டுப் போகிறார் பலரும் பலபேச்சு. தாலிக்கொடியை காசு கூடினாலும் வாங்குவதாகத் தீர்மானம்.............. ரெலிபோணில் பேசுவதாகச் சொல்லிக் கொண்டு வங்கியாளர் போகிறார். அவரை இவர்களுக்குச் சரிவரத் தெரியாது. "பளிச்பளிச்" சென்று மின்னிப்பிரகாசிக்கும் தாலியில்லாத கொடி நேசம்மாவை நேசங்காட்டி அழைப்பதாயிருந்தது. நேசம்மாவின் மனமும் சம்மதங் கொடுத்தது.

நாலாயிரம் ரூபாவும் வட்டியோடு சேர்ந்து ஐயாயிரம் ரூபாவுக்குள் மீட்டுக் கொள்ளவிருந்த கொடியை இருபத்தெட்டாயிரம் ரூபாக் கொடுத்துக் கழுத்திலே நேசம்மா அணிந்து கொண்டாள். தாலி வீட்டிலே இணையக் காத்துக் கொணடிருந்தது. வட்டிக்கடை ரெலிபோணும் ஒலித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10620

# தங்கப்புதையல்

திருகோணமலை கிறீன் வீதியென்றால் பேர்பெற்ற தெரு வீதி. குன்று மலைக்கூட்டங்களின் வெளிப்பாடு தங்கவொளி பீச்சும் காலை 8.30 மணி தபால்காரன் வரும் நேரம் ஆனதால் தெரு வாசலைப் பார்த்த வண்ணம் அருமைத்துரை அமர்ந்திருக்கிறார்.

தபால் சைக்கிள் மணி யோசை கேட்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமைத்துரை ஓடோடிப் போய் தபால்களை வாங்குகின்றார்.அதிலே வெளிநாட்டுத்தபால் ஏதும் வரவில்லையே! என மனம் பேதலித்துப் போனது.

"இவ்வளவுமே வேறேதுமில்லையே மோனே?
"இருந்தால் தந்திருப்பேனே!"

"கனடாவிலிருந்து கடிதம் வரும் என்று எதிர் பார்த்துக் கொணடிருக்கிறன் மோனே நேத்து, இன்று, நாளை என்று காலங்கடந்து போகின்றது"

"வந்திருந்தால் கொண்டுவந்திருப்பேன், நாளைக்குச்சிலவேளை வரலாந்தானே! கொழும்பிலேயும் வேலை நிறுத்தம் இருந்து முடிஞ்சு இப்ப இல்லத்தானே. நாளைக்கும் பார்ப்போம்" என்று சொல்லித் தபால்காரன் போய்விட்டான்.

வீட்டிலுள்ள மற்றவர்களுக்குரிய கடிதங்களைக் கொடுத்து விட்டுத் தன் பேரில் வந்த ஒன்றிரண்டு கடிதங்களைக் கூட அருமைத்துரை உடைத்து வாசியாமல் கையிலே வைத்துக்கொண்டு கவலையோடிருக்கிறார். 65 வயதாகியும் பேரப்பிள்ளைகளைக் காணாத அருமைத்துரைக்காகப் பானுமதி பரிதாபப்படுகிறார்.

கொழும்பிலே வந்து வேலைநிறுத்தக்காலத்தில் தடைப்பட்டு விட்டதோ? தொலைபேசி மூலம் கடிதம் போட்டிருக்கிறேன் என்று தானே மருமகன் சொன்னார். அடிக்கடி தொலைபேசியப் பாவிக்க முடியுமே? உதுக்கெல்லாம் காசே இருக்குது என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது.....?

"அப்பு சாப்பிடவாங்கோ கடிதம் போட்டிருந்தாக்கடிதம் எப்பவெண்டாலும் வருந்தானே அப்பு! அதுக்கென்ன கவலைப்படுறியள்? போட்டு வந்த கப்பல விசாரியுங்கோ!" பேந்தும் பேந்தும் கவலப்படாம?

"இல்ல தமயந்தி! நாடு போய்க்கொண்டிருக்கிற நிலைமையில நாங்கதான் போனாலும் உன்னைப்போல பொம்பிளைப்பிள்ளயள் எங்கட நாடு நல்லாவரும் வரைக்கும் இங்கை இருக்கவே கூடாது. புதையல் குழிகள் தோண்டுவது போன்றவை போனாலும் ரீட்டா மனோகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற புதுத் திருமணப்பெண்ணின் கற்பழிப்பும் கொலையெல்லாம் எண்ணிப் பார்க்கப்பார்க்க மூளை கலங்குது பிள்ளை. உவையளுக்கு புருஷன் இருந்தென்ன? ஆண்பிள்ளைகள் இருந்தென்ன? காடைத்தனமும், கற்பழிப்பும், கொலைகளும் அளவுக்கு மிஞ்சி விட்டதே! இல்லையென்றால் புருஷனைக்கட்டிப்பிடிக்கப் புதுமணப் பெண்ணைத்தூக்கிக் கொண்டு போவாங்களே உதெல்லாம் மனக்கண்ணில் நிழலாடுதே நாலைந்து காடையர்களுக்குக் காமப்பசி யென்றால் கொலையுமே செய்வது? உவையள் மனுசன்களே'' என்கிறார்.

''அதற்குப்பிறகு கொலை செய்தால்தான் என்ன? கொத்திப்பிளந்தால்தான் என்ன அப்பு ? அவள் பிறகு வாழ முடியுமே? மானமில்லையே? புருசனிட்டபோறதிலும் பார்க்கத் தற்கொலை செய்தாவது சாகத்தான் வேணும்''.

“அப்படியான நிலைமைகளை எண்ணித்தான் மகளே நம்மைப் போன்றவர்கள் ஆயிரம், ஆயிரமாக அயல் நாடு போய்க் கொண்டிருக்கினம். சொல்லவும் வாய் கூசுகிறதே தமயந்தி'' என்று கண்ணீரை துடைத்துக் கொண்டு காலைச் சாப்பாட்டைச் சாப்பிட்டார்.

அருமைத்துரை குடும்பம் கொழும்பு வெள்ளவத்தை ஹம்டன் லேனில் மூன்றாண்டுக்கு மேலாக வசித்தும் அங்குள்ள அடாவடித்தன நடைமுறை கூடுதலைக் கண்டு மீண்டும் யாழ்ப்பாணம் போக எத்தனித்து இப்போது தற்காலிகமாகத் திருகோணமலையில் தங்கியிருக்கிறது. யாழ்ப்பாணத்துக்குத் தபால் வருவதைவிடக் கனடாவிலிருந்துவரும் தபால் முந்தி வரும் நிலையுடைய காலம் அல்லவா?.

தமயந்தியின் கணவன் உத்தியோகம் என்று இல்லாமல் அகதிகளைப்போல்தான் அந்த நாளிலே போனவர். அருமைத்துரைக்கு கீழ் கண்டுகளாக இரண்டு குமரும் ஒரு சிறுவனும் இருக்கின்றனர். தமயந்தியின் தாய் நோயுற்றிருந்து செத்த சாவுக்குக் கூட புருசன் வரவில்லை.

“குமரப்பருவப் பெண்பிள்ளைகளால் தானே நானும் மனம் பயந்து உருகிப்போறன். நான் முன்பெல்லாம் உங்களோடு இதைப்பற்றி பறையாமலிருந்தேன். இப்போ பயப்பிட வேண்டிய காலமாக்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டினம்.'' என்று கண்ணீரும் கம்பலையுமாகச் சொன்னார் அருமைத்துரை.

முன்பு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரமுன்பே மட்டக்களப்பிலிருக்கும் சகலன் அகிலேசன் வந்த போது இருந்த தங்க நகை நட்டுகளையெல்லாம் பாதுகாப்புக்காகக் கொடுத்தனுப்பி வைத்தனர்.

அகிலேசனும் வாழைச்சேனை காகித ஆலையில் உத்தியோ கத்திலிருந்த படியால் பிள்ளைகளின் படிப்பு வசதிக்காக செங்கலடியில் வீடு வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வந்தான். ஆறேழு ஆண்டுகளுக்கு பின் இரண்டாம் கட்டப்போர் நிலைமைகளாலும், பாரிய தமிழர் முஸ்லீம் இனக்கலவரத்தாலும் ஊரோடித்திரிய வேண்டியதாயிற்று. அவ்வேளை படுவான்கரைப்பக்கத்தாலே எடுக்கக்கூடிய சாமான்களை எடுத்துக் கொண்டு மட்டக்களப்புப் பட்டணத்தை நாடினர்.

அங்கிருந்து போகும் போது அருமைத்துரையர் குடும்ப நகை நட்டுக்களையும், தங்களுடைய நகை நட்டுக்களையும் இரகசியமாகப் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று தகரப்பெட்டிக்குள் பொலித்தீன் பேப்பர்களால் சுத்திக்கட்டி வைத்து நள்ளிரவு நேரத்தில் மதிப்புடைய ஓரிடத்தில் மண்ணுக்குள்ளே குழிதோண்டிப் புதைத்து விட்டுத்தான் சென்றனர். பின்பு அந்த சுற்றுவட்டாரமெல்லாம் படையினர் தங்கும் நிலையாகிக் கொண்டது.

சொந்த வீட்டு வளவில் பலபேர் இப்படித்தான் நகைகளையும் பொருட்களையும் புதைத்துச் சென்றிருக்கின்றனர். இவ்வாறான காலகட்டத்திலேதான் கொழும்பு சென்ற போது அங்கிருந்து பலரோடு கனடா சென்ற அருமைத்துரையர் மருமகன் பாக்கியராசா, மனைவியை மட்டுமாவது கனடாவுக்கு எடுக்கலாம் என்று ஆவனசெய்து கொண்டிருக்கிறார். அதனாலேதான் யாழ்ப்பாணம் கொழும்பு என்றில்லாமல் இப்போது திருகோணமலையில் இருந்து கடிதம் எதிர்பார்ப்பு நடைபெறுகிறது.

திருகோணமலை உலகத்திலே தமிழர் தாயகத்தில் மிகச்சிறந்ந இயற்கைவளம் நிறைந்த அரசுக்குகந்த துறைமுகத்தோடமைந்துள்ளது. யாழ்ப்பாணம் போவதென்றால் திருகோணமலையிலிருந்து கடலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே போக வேண்டிய காலகட்டம். அறிமுகமானவர் வீட்டிலே தங்கி விலாசமும் கொடுபட்டாயிற்று. மருமகனார் வீடு வாசல் மலைக்கு வட பகுதிக்கிராமம் அங்கெல்லாம் நிலைமை மோசம்..கனடாவிலும் கட்டுப்பாடு கூடிவிட்டதாம். தமயந்தி தலைப்பிள்ளை காணாத குமர் போன்றவள்தான் அழகுவடிவானவள் அதற்கடுத்த குமர்களுமுண்டு. இதனால் கவலை தான், காண்போருக்கும் கேட்போருக்கும் கூடியது.

மூன்று நாலுகட்டமான இட வாழ்க்கையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். சொந்த வீடு வாசல்களுக்குப் போனால் ஓரளவு கவலை குறையலாம். யாழ்ப்பாணம் போகமுன்பே தமயந்தியை மட்டுமாவது கனடாவுக்கு அனுப்பிவிட்டுப் போகும் எண்ணம் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

திருகோணமலையிலே கிறீன்வீதி பானுமதிக்கு அறிமுகமானவள். மருமகன் பாக்கியராசவுக்கும் இனமானவள். விதவையாகிப் பிள்ளைகளோடு இருக்கின்றாள். அவளுக்கு மூன்று ஆண்பிள்ளைகள் மட்டுந்தான். ஏனோ தெரியாது திருகோணமலைப்பட்டணத்திலே வசிக்க வேண்டிய நிலை அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. கொடுக்கும் வீட்டு வாடகையில் ஆயிரம் ரூபாவைக் கொடுத்தும் பானுமதியின் சிறந்த குணம் அவள் அதை வாங்கவில்லை. திருகோணமலையிலும் வசிப்போருக்கும் பேரினத்தால் தொல்லைதான்.

“இன்னும் சில கிழமைகளில் மலையிலிருந்து கப்பல் யாழ்ப்பாணம் போகுந்தானே! உங்களின் பெயரும் வரட்டுமே! அதுவரைக்கும் ஏதொரு கவலையுமில்லாமல் இருங்கள்” என்று ஆதரவு காட்டினாள் பானுமதி.

யாழ்ப்பாணம் போவதென்றாலும் அங்குள்ள நிலைமைகளை அறியும் போது போகவும் மனமில்லை. போட்டு தனித்து வாழக்கூடிய மண்ணிலும் தொல்லை. அப்படியிருந்தும் போவினம் வருவினம்தானே இருந்தாலும் பிறந்த மண்ணை வெறுக்கலாமா? பிள்ளைகளின் படிப்பு கொழும்பிலே என்றால் நல்லது என்ன செய்யலாம்? ரீட்டாவின் செய்திதானே தொலைக்காட்சியாகித் துரத்துதே. யாழ்ப்பாணத்திலும் கிரிஷாந்தியின் செயலை உலகறிந்ததாகச் சொல்லுகினம்.. அதனால் அமைதியாக இருக்கினம். அதனாலேதான் அத்தகையன சிறிது அடக்கம் தமிழர் தாயகமான யாழ்ப்பாணம், திருகோணமலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு, போன்ற வட கிழக்கு மாகாணங்களில் பிறந்த மண் என்ற பெருமையில் எப்படியாவது சாவோமே என்றும் பார்க்கினம் என்கிறார் ஒருவர்.

"மட்டக்களப்பு" அகிலேசன் பிறந்த மண், அருமைத் துரையருக்கு "யாழ்ப்பாணம்" பிறந்த மண், மருமகன் பாக்கியரா சாவுக்கோ "திருகோணமலை" பிறந்த மண். இப்படியானவர்களை எந்த மண்ணும் துரத்துகின்றதே! துரோகிகளின் செயலாலே பிறந்த மண், சொந்த மண், தமிழர் தாயகத்து மண், தமிழர்களைத் துரத்துங்காலம் நீடிக்குமா?

தேசநலனைக்கருதிப் போரிடும் தியாகிகளோடு, தேசத்துரோகச் செயல் கொண்ட கயவர்களும் காமுகர்களும் ஒரு பக்கம். அத்தோடு படையினை விட்டோடிய ஆயுதபாணிகளும் சேர்ந்து கொண்டதாலே அரசாங்கமும் முகத்தில் சீலைபோட்டு மறைக்கின்றது. இனமென்று இருந்தால் கலப்புறாமல் இருப்பதே இக்கால வருங்கால நிலைமைக்கு ஏற்றதாகும். இனக்கலப்புறாது குணமாக நடத்தலே சிறப்பு. பேரினம் சிற்றினம் கலப்புறும் போது சிற்றினம் தேய்ந்து விடும்: மறைந்துவிடும்

தேசத்தில் ஒன்றாய் இருப்போம் இனங்கள் வேறாயிருப்போம் வேற்றுமையில் ஒற்றுமை காண்போம். இப்போது சிறுபான்மைத் தமிழர்தாயகமான வடக்குக் கிழக்கு மாகாணத்து மண்ணெல்லாம் பிறந்த மண் என்ற பெருமையில் தங்கமெனக் கூடியதாக தங்கப் புதையல்கள் உள்ளதைப் புதைத்தவர்தாமே அறிவர். அயலிடமும் அயல் தேசமும் சென்றவர்கள் மீட்டெடுக்குங்காலம் ஏற்படுமோ? நாமறியோம்? ஆனால் தமிழகம்ண்ணில் தங்கப்புதையல் உண்டு என்பதே உண்மை. இவையெல்லாம் எதிர்காலம் பரமரகசியங்களின்றி பலரறிந்த இரகசியமாகித் தங்கப்புதையல்கள் தமிழகப் பிறந்த மண்ணையே தங்கமாக்கப்போகிறது. இந்த வேளை பானுமதியின் வீட்டில் கண்டெடுக்கப்பட்ட ஒரு துண்டுப்பிரசுரம் சிந்தனையில் தந்தை செல்வநாயகம் அவர்களையும் நினைவு படுத்தியது. அத்துண்டுப் பிரசுரத்தில் கீழ்கண்டவாறு இருப்பதை வாசித்துப் பார்த்து "கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்" என்று கடைசியாகச் சொன்ன தந்தை செல்வநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பாட்டை வாசித்து வாசித்து மனங்கலங்கி பாடடை நெட்டுருப் பண்ணினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாச்சி பிறந்த மண்

ஆழ் கடல்சூழ் ஈழமதில் நமது பாகம்
அரசியலில் சுயவுரிமையாக வென்று
வாழ்நாளில் பெரும் பொழுதை கழித்த நல்லோய்!
வளமான செல்வமெலாங் கரைத்த செல்வா!
பாழ்பட்ட செயல்கொண்டு பகட்டுக்காட்டும்,
பண்பிலார் நடமாடும் நமதுநாட்டில்
ஊழ்விட்ட வினையாலே வருந்துகின்றோம்!
உமைப்போன்ற வொருதலைவன் என்றே
காண்போம்?


*மக்கள் முன்னேற்றமன்றம், மட்டக்களப்பு - 29.04.77*

*"வெற்றிமகன் ராஜா"* எனப்பட்டிருந்தது. பொன்னாச்சி பிறந்த மண் போன்ற தமிழக மண்ணெல்லாம் பொன்னாச்சி எனலாமே.

இப்படியான நினைவுகளுடன் அருமைத்துரையின் காத்திருப்பு தொடர்ந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனர்வாழ்வுப் புண்ணியப்பேறு

கொழும்பு வாங்சால் வீதியாலே நாங்கள் நாலைந்து பேர் தமிழர் எனக்காட்டும் ஆடையணிகளுடன் நடந்து போய்க் கொண்டிருக்கின்றோம். கொழும்பிலே வலது இடது புறம் என்று பார்க்காமல் உயர்ந்த கட்டடக்கடைத் தொகுதிகளின் நிழற் பக்கம் பார்த்தே நடக்கின்றோம்.

நடந்து கொண்டு போகும் போது காலை ஒன்பது மணியிருக்கும் சனக்கூட்டம் அவ்வளவாகக் காணவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிக்பொக்கட்" காரர்களுக்குப் பயம். அந்தப்பயத்தோடு போகும் போது "அண்ணே கதிராமப் போடியார்" என்று ஓர் அழைப்புக் கேட்டது. ஐந்தடுக்குத்தட்டுக் கடையில் கீழே ஒடுங்கி உள் நீளமான கண்ணாடி அறைகளும் பிறவும்........ .உற்றுப்பார்க்கிறோம்.

"காத்தான்குடி ரெலி கொம்மியுனிககேஷன்" என்ற கவர்ச்சியுடனான எழுத்துகள் கண்சிமிட்டிப்பார்க்க வைத்தன. கதிராமப் போடியார் வெள்ளை வேட்டியுடன் அரைக்கைச் சேட்டும் சேட்டுப்பையை மறைத்த கழுத்தைச் சுற்றிய சரிகைச் சால்வையுமானவர். மற்றைய நாங்கள் சாதாரணமான உடையிலே இருந்தோம். வயது கூடிய நிலையில் கதிராமப் போடியார்.

"அண்ணே கதிராமப்போடியார்" என்று அழைத்தவர் வாட்டசாட்டமான நடுத்தரவயதுடைய லோங்ஸ் நீளக்கைச் சேட் ரைகட்டிய கழுத்து ....யாரிவர் என்று கதிராமப் போடியார் முகக்குறி வினாவுகின்றது.

"என்ன போடியார் ஆதம் லெவ்வைய மதிக்கல்லையா? உங்கட ஊடுவாசலில் கிடந்து பழகினதையெல்லாம் மறந்தா போயித்தையள் வளவெல்லாம் நெல்லுப்பட்டற!

"ஆ...!அந்த நெல்லுயாபாரம் பண்ணின மில்லு முதலாளியாப் போன ஆதம்லெவ்வையா டாப்பா?"

ஆமா! ஆமா!! இதெப்ப வந்த? கொழும்புக்கு என்னத்துக்கு வந்த?" என்று வினவிக் கொண்டிருக்கும் போதே ஐந்து கொக்காக் கோலா மேசைக்கு வந்து விட்டது. குடித்துக் குடித்துப்பலதும் பத்தும் பேசுகின்றோம்.

ரெலிபோன் அறைகள் நாலைந்து. போட்டோப்பிரதி நாலைந்து பெக்ஸ் என்றெல்லாம் பலவிசினஸ் பலபேர்வழிகள். மட்டக்களப்பார் எவரும் வந்தோரை உபசரிப்பர் என்பதை ஆதம்லெவ்வையும் அங்குங் காட்டினார்.

கொக்காக் கோலாவைக் குடித்துக் குடித்து நாங்கள் கடையை நோட்டமிடுகின்றோம். "சிகரட் குடியுங்க" என்று "கோல்ட்லீவ்" பைக்கற்றை



பொதுசன நூலகம்
விசேட சேகரிப்புப் பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்டுகிறார். "அடுத்திருக்கும் ஹொட்டலும் நம்மடதான். அல்லாஹ்ட காவலா நல்லாயிருக்கிறன்...."

"கடையெல்லாம் வாடகையா சொந்தமா?" என்ற வினாவை குமரப்போடியார் வினாவ,

"இதென்ன போடியார்? அஞ்சாறு வருஷம் புளங்கின உங்களுக்கு என்னையப்பத்தித் தெரியாதா? வாடகைக்கு எண்டால் மாசா மாசம் குடுக்கக் கட்டுப்படியாகுமா? இந்தக்கட்டிடம் அஞ்சு தட்டுக்கடையெல்லாம் நம்மடதான் போடியார். அகமதுலெவ்வை இஸ்மாயில் எல்லாம் தம்பிமார? உங்களுக்குத் தெரியுந்தானே போடியார்? காத்தான்குடியில் அரிசி மில்லோட மூண்டு லொறி அதெல்லாம் 'ஹரவாப்' போவானுகளிற வேலையால அழிஞ்சி போச்சி. ஒரு தம்பி இஸ்மாயில் மவுத்தாப் போயிற்றான். மற்றவன் என்ற சொல்லக் கேளாம றைவராகச் சவூதிக்குப் போயிற்றான். காக்கா தம்பி மாரு நாங்க நல்ல ஒத்தும, உங்களுக்குத் தெரியும் தானே. அவனுகள் கீழ் கண்டுகள். இளந்தாரியாக இருக்கக்க பாடுபட்டதானே? நாட்டாம மாதிரி நெல் அரிசி மூடையெல்லாம் தூக்கினதானே!"

"ஏன் முதலாளி நீங்க எண்டாப்பில சிறுவாலோட சாறண் மடிச்சிக் கட்டிற்றுப் பாடுபட்டபடியா பலன் காணுறீங்க ......... கோடீஸ்வரனா இருக்கிறீங்க......."

பாடுபட்டா மட்டும் பத்தாது போடியார் மூளையும் இருக்க வாணாமா? தெரியும் தானே நாம செஞ்ச நெல்லுயாபாரம்? எப்பிடியெண்டாலும் ஒரு நாளைக்கு பத்தாயிரம் ரூபா மட்டில அஞ்சாறு பேருக்கு நாங்க சம்பாரிச்சந்தானே. ஆனா எவனுக்கும் துரோகஞ் செஞ்சிரப்படா. அதாலதான் போடியார் இந்தக் கோடிக்கணக்கான கட்டிடத்து முதலாளியாக இருக்கிறன் ... அதுகிடக்க ...வந்த காரியம் என்ன? ஊர் கால்கள் எப்பிடி? .. மட்டக்களப்புக்கு வந்து போக ஆசைதான். நேரகாலம் கிடைக்குதில்ல போடியார்.

"முதலாளி மட்டக்கிளப்ப மறந்தே போயிட்டீங்கபோல புள்ளகுட்டிகள் பாடுபுறப்புகள் எப்படியோ எத்தனை வருசமாகப் போச்சி எங்களுக்கு ஒன்றும் தெரியாதே? ..................... "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதெல்லாம் ஒண்டுமில்ல போடியார். தம்பிமாரிர பங்கெல்லாம் எனக்கிட்டத்தான். அதுதான் கோடீஸ்வரனாயிருக்கன்...... கலியாணத்த முடிச்சா இந்தச் சொத்துப்பத்தெல்லாம் என்ட குடும்பமாகவே போய்க் கொண்டிருக்கும். உம்மாவும் ஊரில இருக்கிறாவு. காலியாணத்தை முடிக்கத்தான் சொல்றாவு. காலக் கொடுமையால தாத்தா அஞ்சி குமரோட புருஷன் இல்லாம இருக்கிறா அதுகளைக் கவனிச்சிகிட்டு ஒவ்வொருத்தனுக்குப் புடிச்சிக்குடுத்தபுறகுதான் நான் ஒரு ஏழை பொம்பிளயை முடிக்க எண்டு எண்ணியிருக்கன் !.....எப்படியோ அல்லாஹ்தான்"..........

"இதென்ன முதலாளி? உங்கட ஆக்கள் அஞ்சாறு கலியாணம் முடிச்சவங்களும் இருக்காங்கதானே,"

இடையிலே குறுக்கிட்ட .....தம்பிக்காரனான வாத்தியாரு "நான் அறிஞ்ச ஒரு லொறி றைவர் ஏறாவூர்வாசி, ஓட்டமாவடியிலேயும், கிண்ணியாவிலேயும், பசறையிலேயும் குடும்பமாகிப்பிள்ளகுட்டிகளப் பள்ளிக்கூடத்தில சேர்த்துக்கத பேசினவரு. இப்பவும் இருக்கிறாரெண்டுதான் நினைக்கிறன். என்னெண்டாலும் குடும்பத்த நல்லாப்பாக்கணும் எண்டுபேசினவரு"

"அதெல்லாம் காலநேரம் பாத்து நடக்கிறதான். ஆனா நடத்தக்கூடிய வல்லமையுள்ளவன் ரெண்டுதாரம் முடிச்சிக்கலாம். அடாவந்தியாக அஞ்சாறக்கட்டி அவதிப்பட இசிலாம் சொல்லல. பணத்திமிர் புடிக்கப்படா. இந்தா எனக்கு வயசி முப்பத்தஞ்சாவுது. தாத்தாட மூண்டு குமருகளையாவது நல்லவனுகளப்பாத்து முடிச்சிக்குடுத்த புறகு இளையரெண்டு குமரோட உம்மாவையும் சேர்த்து நடத்தக்கூடிய ஒரு பொம்பிள குணமான பொம்பிள .புருசன் இழந்தவ எண்டாலும் பறவால்ல. அதுவும் நம்மட ஊரில முடிக்கலாம் எண்டு தான் எண்ணியிருக்கிறன்."

"இஞ்ச கொழும்பில சிலபேரு கண்டபடி நடக்கானுகள்தான். நம்மட ஊரப்போல வாய்க்குமா? புட்டும் தேங்காப்பூவும் போல தமிழரும் முசிலீங்களும் இருந்ததை கெடுக்கிறானுகளே" அப்போது மீண்டும் குறுக்கிட்ட வாத்தியார் "புட்டும் தேங்காப்புமான கதைபேச்சு ஆரால பரவுன தெரியுமா?" .................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட எம்பியா இருந்து மந்திரியாயும் இருந்த பேச்சழகனும் கெட்டிக்காரனும் ஆன இராஜதுரையர்தானே புட்டும் தேங்காப்பூவும் காட்டிப் பேசின அதெல்லாம் மாத்திப் போட்டானுகளே. அதுக்கு முன்பே இப்ப நூற்றாண்டு விழாக் கொண்டாடுற எங்கட புலவர்மணி "இருதயத்தின் இரண்டு இதழ் இங்கு தமிழ் முஸ்லிம்" எண்டு பாடிப்போட்டாரு. அடுத்தவருசம் சிலையும் வைக்கப் போறாங்க. எனத்தொடரும் போது முதலாளியைப் பார்த்து கதிராமப்போடியர் "பாடுபடாமலும் புனர்வாழ்வெண்டு தெருவில திரிஞ்சவனுகளும் பெரிய முதலாளி இப்ப. உங்களப் போல முதலாளியெண்டாப் பொம்பிளயலுக்கு என்ன குறைச்சல் முதலாளி? அது கிடக்கட்டும் நாங்க வந்த காரியம் ரெண்டு மூண்டு"

அரிசி ஏத்தி வந்த லொறி ஒண்டப்பாத்து "றக்டர்"ஒன்டு கொண்டு போகணும். அந்தா இருக்கிற இளந்தாரிப் பொடியன் கட்டாறோ? கரடியனாறோ? வெளிநாட்டுக்குப் போறதிட்டம். தம்பிக்கார வாத்தியாரு வழிநடத்த வந்தவரு. பக்கத்துக்கட ஹொட்டலும் உங்கடதா?

அதாலதானே நான் செல்லாமலே 'கொக்காகோலா' எல்லாம் வந்தது. அஞ்சி தட்டுக்கடை ரெண்டும் நம்மடதான் அந்த ஹொட்டல்ற பெயரப்பாக்கல்லையா? இது காத்தான்குடி ரெலிக் கொமினிகேஷன் அது "மட்டக்களப்பு வளர்பிறை ஹொட்டல்" பேரே....

"பேரப்பாத்தாலே உங்கட நடமுறை நல்லாத் தெரியுதே"

"வேறென்னத்தக் காணப்போறம் போடியார்? பணம் பண்டம் பெரிசில்ல, நம்மட மனசையும் செயலையுந்தான் அல்லாஹ் பாக்கிற. மட்டக்களப்பிலிருந்து வாறபோற ஆக்கள நல்லாக் கவனிச்சி நடத்தணும். தமிழர் சோனகர் என்டு தனியப்புறிச்சிப் பர்ாக்கிறல்ல. மட்டக்களப்பார் என்டு தான் பாக்கிற "மக்காவுக்கு போக ஆச இன்னும் அதுகிட்டல்ல........ அஞ்சி கடமையில கடைசிக் கடம மக்காப்பயணம். வயசு போன உம்மாட நிலம உடுதில்ல. உம்மாட காலடியில் சொக்கம் இருக்கெண்டு எங்கட நடமுற நபிநாயகம் வாக்கு.

"ஊரில கடசியாக மனேச்சருக்கு வழக்கு நடந்தது என்ன முடிவாச்சோ தெரியாது. அப்பீலில கிடக்காம் தெரியுமா முதலாளி உங்களுக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த ஆளுக்குச் செய்த நண்டிய மறக்கல்ல. எண்டாலும் நடத்த சரியில்ல குடிவெறி குடிச்சிவெறிச்சித்தானே தமிழர் கனபேர் இருந்த இடம் தெரியாமப்போறாங்க. நாங்கெல்லாம் தமிழரோட தமிழூரில ஒண்டடி மண்டடியாக்கிடந்தம் தானே. அந்த மனேச்சருக்கு காசக்கண்டதும் கண்கட தெரியல்ல" கூணாக்கூவன்னா வெண்டு ஓடியாடத் துவங்கிற்றாரு. இல்லாட்டி எங்களைப் போலக்காவாசியெண்டான இருக்கிறல்லயா போடியார்?' ஆண்டவன் தாரத்தக் கொண்டு புத்தியாக நடக்கணும், ஆறு பேரும் பங்குவச்சதானே .

"அதெப்பிடி மில்லுக்காரரே! பழையபடி பேச்சு மில்லுக்கார முதலாளி எண்டுதான் வருகுது. குறையெண்ணாதங்க முதலாளி!அந்த ஆறுமுனைச் சுற்றுவட்டப்பங்கு எனக்குச் சரியாக தரல்ல என்கிறானே அதுப்பத்திச் சொல்லுங்கவன் பாப்பம்".

"அதெல்லாம் பரம ரகசியமாக இருந்த காலம் மாறிப்போச்சு சொல்றன் கேளுங்கோ! இப்ப அந்த நடைமுறை இல்லத்தானே. காத்தான்குடியார் விசினஸில கெட்டிக்காரர்தான் மூளையப் பாவிச்சிக்கருமத்த முடிப்பானுகள். அப்பிடி ஆருக்கும் கொடுக்கிற பங்க எடுக்கமாட்டானுகள். ஆறுமுனையெண்டா ஆறு பேருபாருங்க. சொல்லப்போனா ரகசியமாஉழைச்ச கெட்டித்தனத்தக்கேளுங்க! இதால அரசங்கந்தான் கோபிக்குமோ? அதிலயும் பங்குதாரர் இரிக்காங்களே! ஆறுபேரில நெல்லுச்சங்கத்தில முதலாவது தலைவர், ரெண்டாவது காரியதரிசி, மூன்றாவது கோப்பிறிட்டிஇன்ஸ்பெக்டர், நாலாவது நெல் ஸ்ரோர் கீப்பர், ஐந்தாவது நெல் மில்லு முதலாளி, ஆறாவது வங்கி மனேச்சர் இத எல்லாரும் அறியட்டும் சொல்றன்.

அந்தக்காலம் நெல் புசல்கணக்கில அளக்கிற. இப்பதானே நிறுக்கிற வாசியிருக்கு நிறுக்கிறத்தால சில்லறையாபாரிமாருக்கு சரிபுக்காக்கா பிரசித்தமான சைக்கிள் மூடையாபாரி. போடக்கூடிய அளவுக்கு கல், மண் எல்லாம் கலந்து கொண்டுதான் இப்ப மூடையாக நிறுக்கிறாங்க.

நெல்லுச்சங்கத்தில நெல்லுக்குடுக்கிற போடியார் அளந்து குடுத்திட்டுப் போயிருவாரு. அப்படியளந்த நெல் மூண்டுபுசலாக நூறு மூடையானதும் ஒரு லோட் எனப்படும். லொறிக்கு அப்பிடி நாலைஞ்சி லோட்டும் குடுபடும். நெல் ஸ்ரோருக்கு நாளாந்தம் நெல்லுக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற ஓடருக்கு தலைவரோ காரியதரிசியோவுடன் கோப்பிறட்டி இன்ஸ்பெக்டரும் மனேச்சரும் ஒப்பமிட்டே கொண்டு போவர். சங்கத்திலே நெல் வீதப்பதம்பார்த்து வாங்கியது போல் நெல் ஸ்ரோரிலும் பதம்பார்த்து அளந்து அடுக்கப்பட்டு அரிசி குத்தும் மில்லுகளுக்கு கொடுபடும். நெல்ஸ்ரோரிலே நெல்லுக்கான பணத்துக்கு றிசீட் கொடுபடும். அதைக் கொண்டு வங்கிலே காசாக்கிக் கணக்கிட்டுச் செக் எழுதிக் காசெடுப்பர். இதுதான் சரியான வழமையான நடைமுறை. இது எங்களுக்கு அடி தலை மாறின மாதிரி இஞ்ச இருந்து அங்க போகும்.

மில்முதலாளியிடம் நெல்வாங்கிக் குத்தின அரிசி இருக்கும் அதை வைச்சிக் கொண்டு எடுக்கும் நெல்லுக்கு அளவாக அரிசி மூடைகளை அரசாங்கத்திற்கு ஒப்படைப்பர் நெல் எடுக்காமலே கணக்கிட்டு யாவும் நடைபெறும் இப்ப பாருங்கவன்.!

போடியாரிடம் நெல்வாங்கினதாகக் கணக்கிட்டு லொறியிலே ஸ்ரோருக்கு கொண்டு ஒப்படைத்ததாகவும் கணக்கிட்டு மனேச்சர் வங்கியிலே காசெடுப்பர். ஒரு சில வேளைகளில் நெல் ஸ்ரோரிலே மில் முதலாளி பணம் கொடுத்தும் பரிமாறப்படும். இவ்வாறான நடைமுறையில் மனேச்சரும் மில்முதலாளியும் லோட் மாற்றம் செய்தபேரெடுப்பர். நட்டமேற்படாது லொறிக்கூலி அளவைக்கூலி பிறசெலவு என்றும் மனேச்சருக்கு ஆயிரம் அளவில் மற்றோரையெல்லாம் மில் முதலாளி பார்த்துக்கொள்வார்.ஒரு நாளைக்கு அஞ்சி லோட் மாத்தப்பட்டால் ஏறக்குறைய ஐயாயிரம் இந்தப்பணம் கோப்பிறட்டி இன்ஸ்பெக்டருக்கும் கையொப்பமிடும் பிறருக்கும் பங்குவைக்கப்படும். மில் முதலாளி குறைந்தவிலையில் ஊரெல்லாம் ஓடி நெல் வாங்கி அரசாங்கத்திக்கு அரிசி கொடுப்பார் அதிலே கூடிய இலாபம் மில்முதலாளிக்கு. இப்படியாகத்தான் அதனால் எவரும் பாதிக்கப்படுவதில்லை. அதற்குமுன்பு டாப்புக்கணக்கு நெல் எடுபடும் போது சிரமமாயிருந்திருக்கும் "விசினஸ்" மூளையப்பாத்தீங்களா? எனக்கேட்டு நம்மட ஹொட்டலில சாப்பிட்டுத் தங்கிப்போகலாம் காசுபணம் தரவாணாம்.

ரெலிபோன மட்டும் வைச்சிக்கிட்டு காலமே வந்தவன் அசறுக்குப் போகக்க நாளொண்டுக்கு நாலாயிரம் அஞ்சாயிரம் எண்டு உழைக்கிற ஊரு கொழும்பு. களவும் நடக்கும் கவனமாகப் போய் வாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிவிடையெல்லாம் முடிச்சி நாங்க வரக்குள்ள மறுகாவாறும் முதலாளி எனச் சொல்லிக்கொண்டு கதிராமப்போடியார் கூட்டம் கடைத்தெருவில் சென்றது. அந்த வேளை கதிராமப்போடியாரின் தம்பிமுறையான வாத்தியார் ஓரளவில் உலகறிஞ்சவர், ஊர் சுற்றியவர்...

"என்ன அண்ணே நாங்க படிக்கிற காலத்தில வள்ளத்தில வந்து கிடந்து நெல்லுவாங்கின காத்தான்குடி ஆட்கள் தானே பாத்தயளா? இந்தப்பெரிய பணக்காரனாய்ப் போயும் பண்பாடான பழக்கவழக்கம், குடும்பப்பற்று பாசம் . ஊருக்குத் தகுந்தாப் போல உடுப்ப மாத்திக்கிட்டு உத்தியோகாரனைப் போல..." என்றதும்.


கதிராமப்போடியார் அந்தாளுக்குச் சிங்களம் அந்த நாளையிலே தண்ணிபட்டபாடு. இப்ப இங்கிலீசும் பேசக்கதைக்கப் பழகியிருப்பாரு. தின்பாருக்குத் தேன் எடுத்துக்குடுத்த ஆக்களாம் எண்டு நம்மட ஊரில எங்களுக்கு ஏசினவனுகள் இதுகளக் கண்டா இன்னும் ஏசுவானுகள். விசினசில கெட்டிக்காரனுகள். கோடீஸ்வரனாகுவானுகள் தானே?

மூண்டு லொறி, ரெண்டு மில்லு, நெல்லுக்கடையெல்லாம் சாதிச்சண்டையால கெட்டதும் பட்டதும் புனர்வாழ்வு வந்து கைகொடுத்ததாலதான் அஞ்சடுக்கு மாளிகை நம்மடையவனுகளண்டா தலையால நடந்து புலையக் காட்டுக்கும் போயிருப்பானுகள். ஊம் நம்மடையவனுகள் கோயில் கோயிலெண்டு அறவிட்டு அள்ளிச் செலவழிக்கிறானுகள் ஏதும் ஏழச்சனத்துக்குக் குடுக்கமாட்டானுகள். அவனுகள் ஏழ எளியத நல்லாக் கவனிப்பானுகள். எங்க இருந்தாலும் சாதிசனம் நல்ல ஒத்தும. ஈராக்கில சண்டையெண்டா இஞ்செருந்து எதிர்ப்புக்காட்டுவானுகள். வாய்ச்சொல் ஏவுகணை விடுவானுகள் பள்ளிவாசலிலயும் கூட்டமாகச் சேர்ந்து ஓதுவாங்க. பகுத்தறிவான நல்ல சமய நடமுறைகள் " என்றெல்லாம பேசிப் பேசி அலுவல்களைப் பார்க்கச் சென்றனர்.

நாட்டில் சண்டையும் வந்ததான் நம்மடையவனுகள் சில பேர மண்டையில போட்டவனுகள்தான். இருந்தாலும் எத்தனையோபேர் இருக்க ஊடில்லாம இருந்தவனெல்லாம் லெட்சாதிபதியாகப் போயித்தானுகள் நம்மட தமிழனுகளுக்கும் சில பேருக்கு புனர்வாழ்வு கொடுத்த புண்ணிய பேறுதானே என்று வாத்தியார் பேசிவிட்டு இதுகள உட்டுப்போடு நம்மட விசயத்த முடிப்பம் என்று கருமங்களை முடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரட்டைக் கொலை

"நீதி மன்றம் அமைதி! அமைதி!! எனும் ஒலி கேட்டதும் நீதிமன்றத் துள்ளிருந்த அத்தனை பேரும் எழுந்து நின்று நீதிபதி வந்து ஆசனத்தில் அமர்ந்ததும் அமைதியாக உட்கா ருகின்றனர்.

வழக்குகள் இலக்கங்கள் குறிப்பிட்டு எதிரி வழக்காளி, வழக்காளி எதிரி, என்றெல்லாம் கூப்பிட்டு, திகதி குறிப்பிட்ட தவணைகளைப் போட்டு இரட்டைக் கொலை பொலீஸ் வழக்கென்று கூறியதும் சனக்கூட்டம் கூடுதலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்துள், எதிரிகள் இளவரசி சின்னத்துரை! இளவரசி சின்னத்துரை!! சிறிமதி டாக்டர் குணவதி நக்கீரன் என்ற அழைப்புகள் வெளிப்பட்டதும். குற்றவாளிக் கூண்டில் இருந்து எழும்பிப் போற நேரம் ஆரவாரம் கூடியது.

நீதிபதி 'சைலன்ஸ்! சைலன்ஸ்!!' என்று மேசையில் தட்டுகிறார். அமைதி நிலவுகிறது.

இளவரசி எதிரிக் கூண்டில் ஏறி நின்றதும் நீதிமன்ற முதலியார். இளவரசி சின்னத்துரைதானே பெயர்? என்று வினவியதும் விசாரணை தொடர்கிறது.

"இளவரசி சின்னத்துரையாகிய நான் இலங்கைப்பிரஜை. நான் சொல்லப் போவதெல்லாம் உண்மை, உண்மையன்றிப் பொய்யில்லை. இது சத்தியம்" எனச் சொன்னதும் 'நான் சுத்தவாளியா குற்றவாளியா எனக் கேளாதீர்கள்! நான் என்ன பொய்யா சொல்லப் போறன்? கேள்விக்கு மட்டும் மறுமொழி சொல்ல நான் வரல்ல. இந்த இளவரசியா இரட்டைக் கொலை செய்தவள்? நக்கீரனையும் அவர் அம்மாவான மாமியாரையும் நான் கொல செய்யவில்லை எப்படிச் செத்தார்களோ எனக்குத் தெரியாது. பொலீசுக்காரர் புடிச்சி அடிச்சி சீல சட்டையெல்லாம் கிழிச்சவங்கதானே. நான் கொல செய்யல்ல எண்டுதானே சொல்லியிருக்கிறன். நீங்க கேள்வி கேட்க முதலே நானே தேவையானதைச் சொல்லுகிறேன். ரெட்டைக் கொலை செய்ய எனக்கென்ன தேவை. மாமிக்குத்தான் மகனோட கோபம் என்னப் போட்டு கேள்விகேட்டுப் பயமுறுத்த நானென்ன குழந்தப்பிள்ளையா? நான் நல்லாப் படிச்சவள்.

நீதிபதி : வைத்தியபரிசோதனைக்கு அனுப்பச் சொல்லி தவணையடுகிறார்.

கோடென்டும் பாக்காம சாறன் உடுத்துக் கோட்டுப்போட்டிருந்த ஒருவன் கொச்சத் தமிழில "இவளக் கொல்ல ஆளில்லையா எண்டு கேட்டவன்" இடுப்பில சொருகியிருந்த கிறீஸ் கத்திய எடுத்து அசுப்பில்லாம இளவரசி வயித்தில பாச்சிகிறான் இதைக்கண்டு, புள்ள! புள்ள எண்ட மகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ! கடவுளே! ஆண்டவனே! புள்ளையாரே எண்டு கூப்பிட்டு ஆவேசங் கொண்டு படபடத்த சின்னப்பிள்ளை எழும்பியிருந்து, புள்ள இளவரசி! என்னசாதிக்கனவு புள்ள இது? புள்ளேய்! புள்ள இளவரசி! எழும்பல்லையா புள்ள? எழும்பன்! எழும்பன்!! இஞ்ச பாரன் என்ட சதுரம் நடுங்கிறத்த!.....",

"என்னகா நீ நடுச்சாமத்தில கிடந்து படுறபாடு? தலக்கோழியும் கூவிச்சோ என்னவோ தெரியா? நான்தான் மூண்டு நாளா நித்திர வராத கவலயில படுக்கிறன். இண்டைக்கு உணர்வு கெட்ட நித்திரை கொண்டிருக்கிறனே! நித்திரையில அலம்புற என்னகா? அம்மா கனவு கண்டதா?"

"அதெப்பிடிப்புள்ள நான் சொல்லட்டும்? இப்ப " டீவி " யில காட்டுற படத்துக் கதபோல கனவில வந்திருக்கே! கதச்சிக் கொள்ளையும் ஏலாம நடுக்கமாயிருக்குது. காட்டி மறைச்ச காட்சியாப் போச்சே! கோட்டில வழக்கு நடக்குது. ரெட்டக்கொல செய்த நீயாம் எண்டு குத்தவாளிக் கூண்டில அடச்சியிருந்த ஆக்களோட இருந்த உண்ட பேரச் சொல்லி அழைச்சி எதிரிக் கூட்டில நிற்பாட்ட சத்தியம் பண்ணிப் போட்டுக் கதைக்கிறா புள்ள. அவங்க கேள்வி கேட்காமலே நீதான் உடாமக் கதைக்கிறா. சொல்லவும் பயமாயிருக்கு. உடம்பெல்லாம் படபடவெண்டு நடுங்குதே! ரவுணில ரெட்டக் கொல செய்த நீயாம்; உண்ட வயித்தில கோட்டுப் போட்டிருந்த ஒருவன் குத்திப்போட்டானே அவ்வளவு சனக்கூட்டத்துக்குள்ள."

"என்னகா இப்பிடியான கனவுகண்ட? சோத்து மயக்கத்து நித்திரையில கண்ட கனவு. விடியச்சாமத்துக் கனவுதானே பலிக்கும் என்பாங்க. பேசாம படு அம்மா!"

"நீயும் வந்து கிட்டப்படு புள்ள! நடுக்கம் இன்னமும் போகல்ல. கழிமடுச்சூட்டுக்களவெட்டிக்குப் போனவரு டவுணுக்குப் போக விடியச்சாமம்தான் வருவாரு. பாயக்கிட்டக் கொண்டு வந்து போட்டுப்படு. புறகும் கனவு வருதோ. டவுணில மெத்தக்கட்டிலில படுத்த உனக்கு.............."

ஏனம்மா நீ நேத்து ரவுண்பக்கம் போனதா? குளத்து வட்டைக்குள்ள என்னதெரியும் பட்டணத்தில நடக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குளத்துவட்டை, கழிமடுக்கண்டம் எல்லாம் எட்டியும் பாக்காத நீதானே மூண்டு நாளாக வந்து நிக்கிறா. டவுணுப்பக்கம் நான் ஏன் போறபுள்ள? நாங்க போறண்டா வருசம், பெருநாள், சாவு வாழ்வு எண்டாத்தானே போறவாற உனக்குத்தெரியுந்தானே. உன்ற மாமிதான் பட்டணவாசி. நீயுங் கூட இருந்து பழகிற்றா. மருமகன் கொழும்பால வந்து நிக்கிறாரா? டிப்ளோமாப் படிக்க மறுகாவும் ஒரு வருசம் காசுகட்டினாரே அப்பா. என்ன முடிவாச்சி படிச்ச உனக்கே வாத்தி வேலைதானா? அவருக்கு என்ன வேலை?.

"அதெல்லாம் இப்ப அம்மாட்டக் கேட்டதா? ரவுண் பக்கம் நடக்கிறது நமக்கு உடனே தெரியுமா? மூண்டு நாளாச்சு. இன்னம் ஒருவருக்கும் தெரியாதே" என்றெல்லாம் வாய் முணுமுணுத்துக்கொள்ள "நேத்து வேற எங்கையும் அம்மா போனதா" என்று தாயிடம் இளவரசி கேட்கிறாள்.

"வேறெங்க நான் போற. பள்ளிக்கூடத்து ரீச்சரம்மாடஊட்டுப் பக்கம் சட்டதைக்கப் போறநான்தான் நேத்தும் போனன். டவுணில இருந்து அவங்கட ஆக்கள் வந்திருந்து பலதும் பத்தும் கதைச்சாங்க."

என்ன கதைச்சாங்க அம்மா? நேத்து வந்தவங்களா? முந்தி வந்தவங்களா? டவுணில ஏதும் நடந்ததாமா?

"நேத்துத்தான் புள்ள உன்னிச்ச வஸ்சில வந்து வட்டைக்குள்ள நம்மட மெசின் பொட்டியிலதான் வந்ததாம். அவங்கட பக்கத்தில கொல நடந்ததாம். எனக்கென்ன நல்லாக் காது கேக்கிறதா? அரைகுறையாக் கேட்டுது. அதுவும் "குசுகுசு" வெண்டுதான் கதைச்சாங்க. கொல செய்தது ஒரு பொம்பிளையாம். அதுவும் ரெண்டு கொலையாம். தற்கொலையா ஆள்கொலையா எண்டெல்லாம் தெரியாதாம். என்னையக்கண்ணால பாத்துப்பார்த்துக் கதைச்சாங்க. நானும் கேளாதமாதிரி விடுத்துக் கேக்கல்ல. ஒரு பொம்பிளயப் பொலிசு தேடிக்கொண்டிருக்குதாம். மூண்டு நாளாம் நடந்து. நீதான் இஞ்ச வந்திட்டியே. உனக்கும் அது தெரியாதானே!"

"என்ன பயமுறுத்தாட்டிற கதையாப் போயிற்று. அம்மாவும் இதாலதான் கனவு கண்டிருக்கிறாபோல. அம்மாவுக்குக் கிட்டப்படுக்க எனக்கும் பயம் வாறாப் போல இருக்குது." என்று தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சுப்படபடப்பைக் காட்டிக் கொள்ளாமல் பயங்கலந்த நித்திரை யில்லாப் படுக்கையில் ஈடுபட்டாள். தாய் நித்திரையா கிக்கொண்டதை மகள் பேசிக் கதைக்கும் போது நல்ல நித்திரை என்பதை அறிந்து கொண்டதும் மனதிலிருந்ததை வாய்தான் முணுமுணுத்துக் காட்டியது.

"தற்கொலையா ஆட்கொலையா? என்று பார்க்கிறாங்களாம் இதுவரை கண்டு பிடித்திருப்பார்கள். வீட்டில இருந்த நான் இல்லாமப் போனாக் காட்டிக் கொடுக்குந்தானே! ஐயோ பாவம்! ரெட்டைக் கொலை போகட்டும் கவலப்படத் தேவையில்ல! என்னைப் போல படித்த ஒரு பட்டதாரிப் பொம்பிள அதுவும் பிறத்தியான பிறமொழி பேசுகின்ற பேரினத்துப் பொம்பிள. அவள் ஒரு பிழையும் செய்யவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நல்ல கணவனாவதற்கு ஒருவனைத் தேடிக்காதலித்ததைப் பிழையென்று சொல்ல முடியாது". நக்கீரன் நல்ல கெட்டிக்காரன் அதால ஆச கொண்டிருப்பாள்.

மட்டக்களப்பில் எத்தனையோ பேர் 'வாசிட்டி' யில் பிறர் பணத்தால் பட்டதாரியாகி வெளிவரும் போது பிறமொழிப் பெண்களையே கைப்பிடித்து வந்திருக்கின்றனர். சொந்த இனத்தில் காத்திருந்தவர்கள் இலவு காத்த கிளி நிலைதான். நானும் கூடியமட்டும் இவை போன்றவற்றைப் பல முறை சொல்லியும் பட்டதாரியாகிய பின்பு டிப்புளோமா செய்ய ஒரு வருஷம் கொழும்பு போனவர்தான் கூட்டிவந்திருக்கிறார். அவளுக்கு என் நிலைமை தெரியாது. இனியென்ன கலியாணம்தானேயென்று அப்பாவின் பணத்திலே படித்தவர் தப்பாது முடிப்பார் என்றே உடலுறவுக்குடந்தையானேன். அதையும் விடப்பாரதூரமானது குணவதியோடு காதல் கதை பேசியது.

அனறொரு இரவு நான் பக்கத்து அறையில் படுத்துக் கேட்டுக்கொண்டிருந்தேன். எனக்குச் சொன்ன காதல் மொழியெல்லாம் அவளுக்கும் சொன்னதைக் கேட்டேன், "குணவதி! குணவதியாளே! என்ன பொருத்தமான பெயர். எங்கள் தமிழ் பெயரை மிஞ்சியதா யிருக்கிறது. எங்கட இளவரசி மாதிரி சாறியும் உடுத்தா தமிழப் பொம்பிள என்றுதான் சொல்வாங்க. தமிழைத்தான் இன்னும் தெளிவாக பேசிப் பழகணும். என் அழகு மயிலே! அமுதமொழிக் குயிலே பூரணை முகமே! பொய்யில்லா அகமே!" என்றெல்லாம் எனக்குச் சொன்னது போல் இடையிடையே இங்கிலீஷ் சொற்களும் கலந்து இளவரசியைப்பார்க்க அழகுவடிவான சுவீற் கேள்.... என்றதோட....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புடிச்சாலும் கைப்புடிச்சி வந்திருக்கான் என்ட புள்ள பெரிய புளியங்கொப்பைத்தான். மந்திரி குடும்பத்துப் பொம்பிளயத் தந்திரமாய்க் கூட்டிவந்திருக்கிறானே. குணமான பொம்பிளக்குக் குணவதி என்ட பேரும் பொருத்தந்தான். அண்ணன்ட இளவரசியப் பாக்க அழகுவடிவிலயும் கூடியவள். "அன்ரி! அன்ரி!" எண்டு என்னோட கொச்சத்தமிழில குயில் போலக் கதைக்கிற வடிவென்ன வடிவு! அண்ணன்தான் காசுகட்டிப்படிப்பிச்சாரு. அதுக்கும் இளவரசி குடுத்து வைக்கல்ல. அவ கண்டவனக் காதலிக்கிறா. அவநடத்தைதைய அறிஞ்சாத் தம்பி கொலதான் செய்வான்." என்டெல்லாம் அடுத்த வீட்டு ரீச்சரம்மாவோட தாய் கதச்சாவே! அதுதானே மகனோட சேர்ந்து மடுவுக்குள்ள போகப்போறாவு." மகன்ட கருவக்காட்டாம மணக்க ஒருவனைக் காதலித்துச் சங்கதுறையாம காதலனாக்கினன் அதுதப்பா? தொடர்ந்து இப்படியான முணுமுணுப்பு நடந்து கொண்டிருக்கையில்........... இடையிலே நடந்தவை சில.

"அடி துரோகி கொலைகாரப்பாதகி இஞ்ச வந்து படுக்கிறையாடி!" என்று கதவத்தட்டுகிறமாதிரிக் கேட்குது! நானும் பயத்தில அம்மாவக்கட்டிப்பிடிக்க அம்மாவும்,

"என்ன உடு! எனக்கொண்டுந் தெரியா! கடவுளே! தாந்தாமலையானே! கத்தியால குத்துறானே!" என்று கத்துங்குரலோடு மகளைக்கட்டிப்பிடித்து வாய்புலம்புகிறா.

மறுபடியும் அம்மா கனவு கண்டு அலறுவதால் இளவரசியின் பயம் மேலும் கூடியது. கொலை செய்த பயம் ஒருபக்கம் நக்கீரன் கரு வயிற்றிலே வளர்வது மானக்குறைவு மறுபக்கம்.விடிந்த பிறகு நானும் செத்துப் போனால்தான் தப்பலாம். ஆனால் பொலீஸ் இங்கே தேடிவந்து என்னைப்பிடிக்க ஏலாது. அம்மா அப்பாவுக்கு அவமானமாகுமே. என்ற நினைவெல்லாம் நித்திரையைக் கலைக்கக் கலைக்க மூன்று நாளாக மூளையும் கலங்கலாச்சு.

நக்கீரன் இளவரசி நல்ல ஜோடியாகட்டும் என்ற இளவரசியின் தந்தை விட்டுக்கொடுத்து ஆவன செய்ததெல்லாம் அலைகடலில் கரைத்த புளிபோலாச்சு. தற்கொலை செய்தாலும் கருகாட்டிக்கொடுத்து குடும்பத்தை அவமானப்படுத்தும். காணாத இடத்திலே சாகத் துணிந்துவிட்டாள். இளவரசியும், மூத்ததம்பியும் இரண்டு கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல சிவசண்முகநாதனுக்கும் சின்னப்பிள்ளைக்கும். பாவக் கொடிச்சேனையில் பண்பான மக்களாக இருந்தவர்கள். மூத்ததம்பிதான் முனைக்காட்டு விதானையாராகப் போக காணி பூமி மாடு ஆடெல்லாம் நடுத்தரவயதுடைய சிவசண்முக நாதனே பார்க்க வேண்டியதாயிற்று. அவ்வப்போது பட்டணம் போவதும் தங்கச்சிமகனான நக்கீரனுக்குப் பணம் அனுப்புவதும் இளவரசியைத் தங்கச்சிவீட்டிலே பார்வையிட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதும் தவறாக்கடமைகளாகும். இந்த நிலைமையுடைய சிவசண்முக நாதனுக்குத் தலையிலே இடிவிழுந்த நிலையினைக் கொடுத்தது இளவரசியின் செயல்.

விடிநிலவிலே கழிமடு கண்டக்களவெட்டியிலிருந்து வாடித்தலமாயிருந்தே வீடுவாசலாகப் போன நெல்லுப்பட்டறை அட்டாளையெல்லாம் சூழ்ந்த தனது இருப்பிடத்துக்கு வந்துகொண்டிருக்கிறார். அவரும் பட்டணத்துச் செய்தியில் பாதிக்குப்பக்கம் செவியேறலாகக் காவிக் கொண்டுதான் வீடு வந்து கொண்டிருக்கிறார். விதானை வேலை பார்க்கும் மூத்த தம்பிக்கேதும் ஆபத்து நேரலாம் என்ற கவலையும் சேர்ந்து கொண்டது. அவன் அரச கடமையில இருக்கிறவன்.

இது இவ்வாறு இருக்கப்பட்டணப் பக்கமெங்கும் டாகுத்தர் வேலை படித்த குணவதியாலேதான் ரெட்டைக்கொலை ஏற்பட்டிருக்கிறதெண்டும், இளவரசி இருந்திருந்தால் அவளும் கொலைக்குள்ளாகியிருக்கலாம் என்று ஒருபகுதியினரும், இளவரசிதான் இதற்கெல்லாம் காரணமாகி தலைமறைவாகியிருக்கிறாள் என்று இன்னொரு பகுதியினரும் மெல்லிய வலூணை வெடிக்கும் என்ற பயத்தில் ஊதுவர் போலாயினர்.

டக்டர் குணவதி படிப்பாலும் பேரினத்தைச் சேர்ந்த மதிப்பான குடும்பத்தாலும் பொலீஸ் நடவடிக்கையும் புறநடைதான். நீதிபதி முதலானோர் மரணவிசாரணை முற்றுப்பெறாமல் மூன்று நாளும் கடந்து தொடர்ந்து கொண்டிருக்கிறது. தலைமறைவாகிய இளவரசியைப்பார்த்து விசாரணை நீடித்துக்கொண்டிருக்கிறது பட்டணத்து நிலைமை.

சிவசண்முகநாதர் வீட்டுக்கு வந்தபோது இளவரசியைக் காணவில்லை. சின்னப்பிள்ளை மட்டுமே படுத்துக் கடும் நித்திரையிலிருந்து குறட்டை இழுத்துக்கொண்டிருந்தாள். எழுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரித்த போது நடுங்கிய உடம்போடு வாய் தடுமாறிப் பேசிக் கொண்டிருந்தாள். என்னைக் கட்டிப்பிடித்துப்படுத்த மகள் எங்கேயோ! என்று அழுது புலம்புகின்றாள். சிவசண்முகநாதனார் மேசையிலே கடிதமொன்றிருக்கக் கண்டெடுத்து வாசித்தார்.

என்னைப்பெற்று வளர்த்துப் பலன்காணாத அருமைப் பெற்றாருக்கு எனது மன்னிப்புக் கோரும் கடிதம் இது. விசேடமாக அப்பாவுக்கு. இளவரசி என்று பெயர் வைத்த உங்களுக்கு நான் இனவரசியென்று பெயர் எடுக்க நடந்து விட்டேன். தங்கச்சி மகன் நக்கீரனை மருமகனாகக் காணக் கற்பனை பண்ணியதை நானும் நம்பிக்கொண்டு நாலுமாதக் கருவுக்குள்ளாகி விட்டேன் அப்பா! உங்கள் பணத்தையும் நாசமாக்கி என்னையும் மானங்குறையவைத்த மகனையும் தாயையும் நஞ்சூட்டி மரணமடையச் செய்து விட்டேன் . இதனால் தமிழ் இனவரசியாகிவிட்டேன். என்னைத்தேடி அலையாதீர்கள். இந்தக்கடிதத்தைக்காட்டி பிறவினத்து குணவதியை விடுதலையாக்கி வையுங்கள். அவள் இனத்திலே மணம் முடித்து வாழட்டும்.

மேலும் அப்பா நீங்கள் அடிக்கடி சொல்லிக் கதப்பீங்களே. நம்மட ஊரில எஞ்சினியர் சிவராமன் எத்தனை வருசம் பேராதனை வாசிட்டியில் படிக்கிறபோது நம்மட பகுதியில் காதலிச்ச புள்ள M.B.B.S. ஆகமட்டும் காதலிக்கல்லையா? ஆசிரியராயிருந்து பட்டதாரியாகி பலர் பட்டதாரியாக உதவிகள் செய்த அரசுஅதிபரான மோனகுருசாமி நம்மட ஆளத்தானே முடிச்சாரு. என்றெல்லாம் சொல்லி நம்பிக்கை ஊட்டினீங்களே இப்ப மாறுசெய்தவர்களுக்கு நஞ்சூட்டிவிட்டேன். கருகாட்டி கொடுத்து உங்கள் மானங்குறையாதிருக்க முதலைப்பாளி ஓடையிலே விழுந்து சாகிறேன். என்னைத்தேடாதீர்கள் இவை தெரியாதிருக்கட்டும் அம்மாவுக்குஞ் சொல்லாது பட்டணம் சென்று குணவதியை விடுதலையாக்க ஆவன செய்யுங்கள். சாவீட்டுச் செலவுப் பணத்தை அகதிகளாயிருக்கிற ஏழைச்சனங்களுக்கு உதவியாகக் கொடுங்கள் என்னை மன்னித்து விடுங்கள். இப்படிக்கு, இனவரசியான இளவரசி. இதை வாசித்ததும்

கலங்கிய கண்களையும் கடிதத்தையும் மனைவிக்குக் காட்டாமல் மறைத்துவிட்டு பட்டணம் புறப்பட்டுச் செல்கிறார். சிவசண்முகநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னுரை

என்னுரையின் தொடர்ச்சியான பின்னுரையினைப் புதுமையாக எழுதுகிறேன். தேவையானபடியால் எனது சூழலில் எமது செயல்களைத் தெரியப்படுத்தி இனசனத்தார்க்கும் இளைஞர்க்கும் சமூகத்தினர்க்கும் எனது அபூர்வசகோதரன் செல்வராசா இல்லாமையால் உணர்த்த வேண்டியவனாகின்றேன்.

நான் 1948ல் பயிற்றப்பட்ட ஆசிரியனாகி வெளியேறி என்னைச் சூழவுள்ள இருபதுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் பதவி கிடையாமல் திருமலை, மாத்தளை, நுவரெலியா அரச பாடசாலைகளில் பதவி பெற்றேன். இதனால் அடிமனவேதனை சிங்களசோதனை எடுக்க மறுத்து அதிபர் பதவியிலிருந்து 700ஆம் சுற்றறிக்கைப்படி 16ஆண்டுகாலச் சேவைக்கு முன்பாகவே 1969-12-31ல் ஓய்வு பெற்றேன்.

1970லே சட்டப்படி தேர்தலில் போட்டியிட முடியாமல் காலம் பார்த்திருந்து 1977லே போட்டியிட்டேன். அறுமுனைப்போட்டி இரட்டைஅங்கத்தவர் தொகுதி. கல்வி மந்திரியாயிருந்த முஸ்லிம் பெரியாரும் போட்டியிட்டதால் கட்டுக்கதை கட்டிவிட்டனர்.

"தமிழ் ஈழப்பிரகடனம் பண்ணிவிட்டோம்" மந்திரிக்காக வாக்குகளைப்பிரித்து அவருக்காக இவர் போட்டியிட்டுத் தமிழரில்லாமல் 2 முஸ்லிம்களை எம்.பியாக்கப் போகிறார். ஈழத்தமிழ்நாடடுத் துரோகியாகி விட்டாரென்று பெற்ற தாயிடமும் முன்னிருந்தவர் கூறியுள்ளார். நானும் நிலைமையறிந்து கூடியவாக்கு பெறக்கூடியவருக்கு வாக்களியுங்கள் என ஆதரவாளரை வீடுவீடாகச் சென்று வேண்டினேன். இறுதியில் வாக்குகள் எண்ணும் போதும் நின்று கச்சேரியிலும் இளைஞர் எழுச்சி காட்டிப்பேசிவிட்டே வீடுவந்தேன். அதன் பிறகு "நாடும் நாமும் ஜனாதிபதியும்" என்ற நூல் கையெழுத்துப்பிரதியை ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பி மொழிபெயர்ப்போடு பதிப்பிடுமாறு வேண்டினேன். ஆதாரங்கள் பலவுண்டு.

முக்கியமாகக் குறிப்பிட்டெழுதியற்றில் சில
உலகில் உயர்திடு மலைகள் நிறைந்திடும்
ஒருதனிநாடாகும் - இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகில் வளர்நிதி அதற்கெனப் பலநதி (அமைவுறு தீவாகும்)
ஈழம் என்ற இந்நாடு - எங்கள் சொந்தப் பொன்னாடு
எழில் வளங்கள் நிறைநாடு - இயன்றதைச் செய்ய முன்ஓடு
(பக் 35)

ஈரினம் ஆண்டநாடு இலங்கை - அந்நியர் 1505லிருந்து 1815 வரை முழுவதையும் ஆட்சி செய்ய முடியாது, சிங்கள தமிழர் இராசதானி மாற்றி ஆண்டிருக்கின்றனர்.(பக் 46)

இனப்பற்று நாடகம் 1951லே ஒலிபரப்பத் தடையானது. ஓரலை வரிசையில் ·நேரடி ஒலிபரப்பு நடைபெற்றவேளை ஒத்திகையின்போது ஒலிபரப்பத் தடையானது. இந்நாடகத்தால் இலங்கை மக்களுக்கே ஒருவித மனச்சஞ்சலம் ஏற்படுமென அதிகாரியும் மற்றும் பலரும் கருதுகின்ற படியால் பிரதியனுப்பப் படுகிறது-(சண்முகநாதன்)

"வெற்றி! வெற்றி!! வெற்றியே!!!
வீரவாள் கைபற்றியே
தமிழர் ஆட்சி போக்குவோம்!
தந்தை ஆட்சி ஆட்சி ஆக்குவோம்"

என்ற வாளோசை கலந்த பாடலுடன் இல்லை மகனே தமிழினம் ஆண்டு வந்த பேரினம் மலைமேடும் மண்மேடும் சண்டையிடுவது முறையல்ல சமாதானமாகவே வாழ்வோம். அவர்கள் பகுதியில் நல்லாட்சி நடைபெறுகிறதுதானே.... தொடர்ந்த உரையாடல் (பக் 48)

நிறைவேற்றதிகார ஜனாதிபதியும் சிறுபான்மையினருக்கு உதவியாகலாம் பாராளுமன்றத்தைக் கோராது நீதி செலுத்தலாம். ஆனால் கட்சியிலோ மந்திரிசபையிலோ இருக்கக்கூடாது. (பக் 51)

நாமறிந்த காலத்தில் 1947, 1950, 1956, 1960பங்குனி, 1960ஆடி, 1965, 1970, 1977 களில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. பச்சையும் நீலமும் மக்களின் இச்சையிலே மாறிமாறி வந்தன. (பக் 67)

"ஈழத்தமிழகம் எங்களின் தாயகம்
மாளத்தால் நேரினும் மாற்றானுக்கிடம் கொடோம்"
உயிரைக் கொலைக்குள் ஆக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரைப் பாதுகாக்கலாம்
படையும் திரட்டி குடையும் பிடிக்கலாம்
கற்பை இழப்பினும் கற்பினங் காக்கலாம்
முற்படவேண்டும் முக்கியம் இனமே (பக் 67)

10.07.79.ல் மாவட்டத்தேர்தல் ஆணைக்குழு முன்பு நான் மட்டுமே சமுகமளித்து வேண்டியன விளக்கினேன். பிரதிநிதிகளைக் கூட்டுமாறு கேட்டேன். இனக்கலப்புள்ள தொகுதி இரட்டைத் தொகுதியாகக் கூடாது. (பக் 81) இறுதியாக இங்கிலீஷை ஆங்கிலம் என்று பழக்கப்பட்டு விட்டது. ஆங்கிலம் என்று ஒரு மொழி இல்லையே இங்கிலீஷ் என்ற மொழியை மொழிபெயர்க்க முடியாது என்பதே எனது எண்ணம். இங்கிலீஷ்லேதான். ஜனாதிபதியை பிரசிடன்ட் என்று சொல்லுவதற்கும் பொருத்தமான ஒரு சொல் தேவை. உப ஜனாதிபதியும் சிறுபான்மையில் தேவை. இவை போன்று சில.

*(இலக்கிய, இல்லற இன்பம்) திருமணப்பரிசு.*

இத்திருமணப்பரிசு அந்த அரசியல் கலந்த நூல் காலாவதியாகி விட்டாலும் பதிப்பில் இது இடம்பிடிக்க வேண்டிய நூலாகும். இதனுடைய மகத்துவமும் அவசியத் தேவையும் அறிந்தோரே அறிவர். அதனால் சில விளக்கச் சிறுகுறிப்புகளை கூறுகிறேன். அரசியல் மாற்றமாகிக் கொணடிருக்கும். குடும்பத்தறிவு மாற்றமாகாமல் கூடிக்கொண்டிருக்கும். இந்தக் கையெழுத்துப்பிரதியை வாசித்து உற்சாகமூட்டிய மகாவித்துவான் F.X.C.ஐயாவையும், அந்தோனிமுத்து G.A ஐயா அவர்களையும் காலஞ்சென்றவர்களானபடியால் காட்டுகின்றேன். இன்னும் வைத்தியர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் படித்தறிந்து உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அதனால்தான் நிலைமைகூறி வேண்டுகின்றேன்.

இன்னும் சில நாள்களில் கையிலே காட்சிவானொலி கட்டிக் கதைபேசுங்காலங்கூட வந்துவிடலாம். கணவன் இல்லாமலே கலவியுங் கொள்ளாமலே மக்களைப்பெறுங்காலம் வந்துவிட்டது. இக்கையெ ழுத்துப்பிரதி எழுதத்துவங்கியபோது பரிசோதனைக்குழாய்க் குழந்தைப் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்து புதிய நடைமுறை அணுவும் பெண் முட்டையும் இணைத்து மகவுற்பத்தி ஆகுங்காலமாகிவிட்டது. இவ்வாறான விஞ்ஞான வளர்ச்சி விந்தையாகின்றது. சிந்தையிலிடம் பிடிக்க வேணடிய இந்நூல் அச்சேறாது இப்படியே இருப்பதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தறிந்து "எவ்வாறேனும் அச்சிட முயற்சி எடுக்கிறேன்" எனக் கூறிவைத்திருந்த அரசாங்க அதிபர் அந்தோனிமுத்து ஐயா அவர்களின் அகாலமரணத்தால் அதுவும் தடைப்பட்டது. ஈராண்டுக் குப்பின்பு அன்னார் மனைவியார் சாரதி இம்மானுவெல் மூலம் அனுப்பி யமையால் எனக்கெட்டி மீண்டும் ஊர்வலம் போய்க்கொண்டிருக்கிறது.

எட்டு வகைத்திருமணங்கள் எனத்தொடர்ந்த அங்கங்கள் இல்லறவின்ப இரகசியம் என்றிறுதியாக 28ஐக் கொண்டுள்ளது.

"இளமைத்துடிப்பு முதுமைப்படிப்பு"
"அப்பா தப்பா அறிவோம் எப்போ?
அப்பாவாகி அறிவோம் அப்போ"
"சுடலை ஞானம் காலம் கடக்கும்
உடலுறவின்பம் உணர்வால் நடக்கும்"

10620

இத்தகைய பாடலடிகள் அவ்விடத்து பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆதனசீதனம், அனுபவ அறிவால் வந்த நடைமுறை. அதனால் இளந்தம்பதியினர் இன்புற்று வாழவழியுண்டு. அவற்றுள் வீடு ஒன்று அத்தியாவசியமாகும். வயதுசென்றோர் உடனிருந்து உதவிகள் அறிவுரைகள் பயன்படவேண்டும்.

உடலுறவின்பந்துய்க்கக் "கொக்கோகம்" தேடி ஓடத் தேவையில்லை இலக்கியப்பாடல்களாலும், திருமுறைப் பாடல்களாலும் எத்தனையோ அறிவைப் பெறமுடியும். அருணகிரிநாத சுவாமிகள் அனுபவம் அறிவுரையாகிக் கந்தரலங்காரத்திலும் கந்தரனுபூதியிலும் இடம்பிடித்தவற்றில் இரண்டு பாடல்கள் காட்டப்பட்டுள்ளன. மேலும்

"வீறுபுகழ் கவ்வி வெற்றி வலிமையுடன்
மேன்மையுறு மக்கள் நெல்லோடு பொன்னும்
கூறுநுகர்ச் சறிவூ அழகே நற்பெருமை
கூடுதுணி விளமை நோயின்மை வாணாள்
மாறில்லா நல்லூழும் மனிதருக்குத்தேவை" என்றும்

"ஆண்டுக் காண்டு விஞ்ஞான அறிவு வளரும் - இந்நாளில்
தூண்டு கோலாய்ச் சாதனம்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேகரிப்பு பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நம்மைச்சூழ்ந்து வர
மீண்டும் மீண்டும் பழமையிலே
மீளா மூடநம்பிக்கை
ஈண்டு எம்மை விலகிடவே எழுந்துவாநீ புத்தாண்டே"

என்னும் வானொலிக் கவியரங்குகளில் நான் பாடியவற்றோடு பல காட்டப்படுகின்றன.

இவ்வாறனவை இன்னும் சில எந்தக்காலமும் சிந்திக்கச் செய்யும் நூல் இளந்தம்பதியினருக்கு வீட்டில் இருக்க வேண்டிய நூல்.

இவ்வண்ணம்

**கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி**
**நூலாசிரியர்**

*பகுத்தறிவுச் சிந்தனை முத்தமிழ்க் கழகம்,*
*மட்டக்களப்பு.*
*10-12-1998.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியரின் பிற நூல்கள்

1. **பாலர் பாமாலை - 1964**
   சிறுவர் இலக்கியம்
2. **பொதுப் பாமாலை - 1992**
   கவிதைகள்
3. **கண்ணகையும் தன்னகையும் - 1993**
   இலக்கிய விமர்சனம்
4. **கடவுள் எங்கே ? - 1994**
   ஆய்வுத் தத்துவ வித்துகள்
5. **பாட்டும் விளையாட்டும் - 1997**
   கிராமிய இலக்கியம்
6. **மாறிவரும் மட்டக்களப்பு தமிழகம் - 1997**
   வரலாற்று ஆய்வு நூல்

## கையெழுத்துப் பிரதிகள்

1. **வானொலிப் பாமாலை**
2. **வானொலிப் பேச்சுகள்**
3. **முப்பெரும் தேவியர்**
4. **நாடும் நாமும் ஜனாதிபதியும்**
5. **விற்போரை மிஞ்சிய சொற்போர்**
6. **கண்ணியமிக்க கடமை வீரர்**
7. **திருமணப் பரிசு**
8. **மும்மூர்த்திகள் - நாடகம்**
9. **பறக்கும் திருமணம் - நாடகம்**

Type setting By: COMPSEL LASER SETTINGS, BATTICALOA, Tel: No.22475
Printing By : CATHOLIC PRESS, BATTICALOA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org